தினபூமி
thinaboomi.com
பூமி: 30 சுற்று: 275 ஆனி 29
TN-TVL/25/2012-2014
நெல்லை, ஞாயிறு, ஜூலை 13, 2025
சென்னை · மதுரை · திருச்சி · கோவை · நெல்லை · சேலம் · வேலூர் · புதுச்சேரி
பக்கம் 8 ₹ 3.00



**துருக்கி அரசுடன் ஒப்பந்தம்: ஆயுதங்களை கீழே போட்ட குர்திஷ் பிரிவினைவாதிகள்**
...2-ம் பக்கம்

**ஆடித் திருவாதிரை விழாவில் பிரதமர் நரேந்திரமோடி பங்கேற்பு: நினைவு நாணயம் வெளியிடுகிறார்**
...3-ம் பக்கம்

**நான் எந்த சர்ச்சையிலும் சிக்க விரும்பவில்லை: ஜஸ்ப்ரிட் பும்ரா விளக்கம்**
...6-ம் பக்கம்





சென்னை அண்ணா அறிவாலயத்தில் நேற்று தகவல் தொழில்நுட்ப அணியால் புதிதாக அமைக்கப்பட்டுள்ள கட்டுப்பாட்டு அறையை திறந்து வைத்து நமது திராவிட மாடல் அரசின் சாதனைகளை எடுத்துச்சொல்லி தமிழ்நாட்டின் மண்-மொழி-மானம் காக்க திராவிட முன்னேற்ற கழகத்தில் மக்களை உறுப்பினர்களாக சேர்க்கும் "ஓரணியில் தமிழ்நாடு" என்ற முன்னெடுப்பு திட்டத்தின் செயல்பாட்டை மு.க.ஸ்டாலின் ஆய்வு செய்தார். உடன் அமைச்சர் டி.ஆர்.பி.ராஜா, அமைப்புச் செயலாளர் ஆர்.எஸ்.பாரதி, செய்தி தொடர்பு தலைவர் டி.கே.எஸ்.இளங்கோவன் மற்றும் நிர்வாகிகள் உள்ளனர்.

### எதிர்க்கட்சிகள் அமைத்துள்ளது கூட்டணியல்ல;

# தமிழ்நாட்டின் ஒற்றுமையை சிதைக்கும் சதித்திட்டம்

## முதல்வர் மு.க.ஸ்டாலின் கடும் விமர்சனம்

சென்னை, ஜூலை 13-

**அ.தி.மு.க. - பாஜக கூட்டணி, தமிழ்நாட்டின் ஒற்றுமையைச் சிதைக்கும் சதித்திட்டம் என முதல்வர் மு.க. ஸ்டாலின் கடுமையாக விமர்சித்துள்ளார்.**

**பயனளிக்கிறது....**

இதுபற்றி முதல்வர் தனது எக்ஸ் பக்கத்தில், "தி.மு.க. அரசின் சாதனைகளை எடுத்துச் சொல்லி, தமிழ்நாட்டின் மண் - மொழி - மானம் காக்க திராவிட முன்னேற்றக் கழகத்தில் உறுப்பினர்களாக இணைய விருப்பமுள்ளதா என்று கேட்கும்போது, 'அரசின் திட்டங்கள் அன்றாட வாழ்விலும், குடும்பத்தில் உள்ள ஒவ்வொருவருக்கும் பயனளிக்கிறது.

**உணர்ந்துள்ளோம்...**

அதேசமயம் அ.தி.மு.க. - பா.ஜ.க. உள்ளிட்ட எதிர்க்கட்சிகள் அமைத்துள்ள கூட்டு என்பது, கூட்டணியல்ல; தமிழ்நாட்டை - தமிழ்நாட்டின் ஒற்றுமையைச் சிதைத்து, மீண்டும் நூறாண்டுகளுக்குப் பின்னோக்கித் தள்ளுவதற்கான சதித்திட்டம் என்பதை நாங்கள் உணர்ந்தே இருக்கிறோம்' என்று தெளிவாக எடுத்துச் சொல்லி 'ஓரணியில் தமிழ்நாடு' என இணைகின்றனர் தமிழ்நாட்டு மக்கள்.

> **அ.தி.மு.க. - பா.ஜ.க. உள்ளிட்ட எதிர்க்கட்சிகள் அமைத்துள்ள கூட்டு என்பது, கூட்டணியல்ல; தமிழ்நாட்டை - தமிழ்நாட்டின் ஒற்றுமையைச் சிதைத்து, மீண்டும் நூறாண்டுகளுக்குப் பின்னோக்கித் தள்ளுவதற்கான சதித்திட்டம் என்பதை நாங்கள் உணர்ந்தே இருக்கிறோம்.**
> **- முதல்வர் மு.க.ஸ்டாலின்**

**பரப்புரையில்...**

இந்த முன்னெடுப்பைக் கண்காணிப்பதற்காக அண்ணா அறிவாலயத்தில் தி.மு.க. தகவல் தொழில்நுட்பப் பிரிவு அமைத்துள்ள 'வார் ரூம்'-ஐ (நேற்று) திறந்து வைத்தேன். விறுவிறுவென நடைபெற்று வரும் இந்த பரப்புரையில் இதுவரை 77,34,937 பேர் (49,11,090 புதிய உறுப்பினர்கள்) தமிழ்நாட்டின் மண், மொழி, மானம் காக்கக் கழகத்தில் தங்களை இணைத்துக் கொண்டுள்ளனர். அதிகபட்சமாக, கரூர் மாவட்டக் கழகத்தினர் 41% வாக்காளர்களை உறுப்பினர்களாகச் சேர்த்து முன்னணி வகிக்கின்றனர். அவர்களை முந்தும் வகையில் பிற மாவட்டக் கழகத்தினரும் மும்முரம் காட்டிடக் கேட்டுக்கொள்கிறேன்" என்று பதிவிட்டுள்ளார்.

### 51 ஆயிரத்துக்கும் மேற்பட்ட இளைஞர்களுக்கு

# பணி நியமன கடிதங்களை வழங்கினார் பிரதமர் மோடி

புதுடெல்லி, ஜூலை 13-

**ரோஜ்கர் மேளா திட்டத்தின் கீழ் 51 ஆயிரத்துக்கும் மேற்பட்டோருக்கு பணி நியமன கடிதங்களை பிரதமர் மோடி வழங்கினார். வேலை வாய்ப்புடன் இணைக்கப்பட்ட ஊக்கத் தொகை திட்டம் தோராயமாக 3.5 கோடி வேலை வாய்ப்புகளை உருவாக்க உதவும் என்று அவர் தெரிவித்துள்ளார்.**

ரோஜ்கர் மேளா திட்டத்தின் கீழ் அரசுத் துறைகள் மற்றும் அமைப்புகளில் புதிதாக நியமிக்கப்பட்ட 51 ஆயிரத்துக்கும் மேற்பட்ட இளைஞர்களுக்கு நியமனக் கடிதங்களை பிரதமர் நரேந்திர மோடி நேற்று விநியோகித்தார்.

நிகழ்ச்சியில் பேசிய பிரதமர் மோடி, "நமது நாடு 3-வது பெரிய பொருளாதாரமாக மாறுவதை நோக்கி நகர்கிறது. கடந்த 11 ஆண்டுகளில் நாடு ஒவ்வொரு துறையிலும் முன்னேற்றம் அடைந்துள்ளது. இதுபோன்ற வேலை வாய்ப்பு மேளாக்கள் மூலம் லட்சக்கணக்கான இளைஞர்கள் வேலைவாய்ப்புகளைப் பெற்றுள்ளனர். அவர்கள் நமது நாட்டின் வளர்ச்சிக்காக பங்களித்து வருகின்றனர்.

தனியார் துறையில் புதிய வேலைவாய்ப்புகளை உருவாக்குவதில் மத்திய அரசு கவனம் செலுத்தி வருகிறது. வேலைவாய்ப்புடன் இணைக்கப்பட்ட ஊக்கத் தொகை திட்டத்தை மத்திய அரசு சமீபத்தில் அங்கீகரித்துள்ளது. இந்த திட்டத்துக்காக அரசு பட்ஜெட்டில் ரூ. 1 லட்சம் கோடி ஒதுக்கி உள்ளது. இந்த திட்டம் தோராயமாக 3.5 கோடி வேலை வாய்ப்புகளை உருவாக்க உதவும்.

இன்று இந்தியா 2 வரம் பற்ற சக்திகளைக் கொண்டுள்ளது என்பதை உலகம் ஒப்புக் கொள்கிறது. ஒன்று, நமது மக்கள்தொகை. இரண்டாவது நமது ஜனநாயகம். இளைஞர்களின் பலம் இந்தியாவின் பிரகாசமான எதிர்காலத்துக்கான மிகப் பெரிய சொத்து; மிகப் பெரிய உத்தரவாதம். இந்த சொத்தை செழிப்புக்கான சூத்திரமாக மாற்றுவதில் எங்கள் அரசு தொடர்ந்து பாடுபடுகிறது " என தெரிவித்தார்.

# அ.தி.மு.க. அமைச்சரவையில் பா.ஜ.க. நிச்சயம் இடம்பெறும்

## அமித்ஷா மீண்டும் திட்டவட்டம்

சென்னை, ஜூலை 13-

**தமிழ்நாட்டில் அ.தி.மு.க. அமைக்கும் அரசின் அமைச்சரவையில் பா.ஜ.க. நிச்சயம் இடம்பெறும் என்று அமித்ஷா கூறினார்.**

மத்திய உள்துறை அமைச்சர் அமித்ஷா ஆங்கில நாளிதழ் ஒன்றுக்கு பேட்டியளித்துள்ளார்.

அதில் 2026-ல் தமிழகத்தில் நடைபெறவுள்ள தேர்தல் தொடர்பாகவும் பேசியிருக்கிறார்.



அப்போது தேசிய ஜனநாயக கூட்டணியில் விஜய் வருவதற்கான சாத்திய கூறுகள் இருக்கிறதா? அதேபோல பா.ம.க. மற்றும் இதர சிறு கட்சிகள் கூட்டணிக்கு வருமா? என்று அமித்ஷாவிடம் கேள்வி எழுப்பப்பட்டது.

அதற்கு பதில் அளித்த அவர், "அதைப் பற்றி தற்போது சொல்ல முடியாது. நாங்கள் பல கட்சிகளை ஒரே கூட்டணியில் கொண்டு வர முயற்சிக்கிறோம்" என்று கூறினார்.

தொடர்ந்து அ.தி.மு.க.- பா.ஜ.க. கூட்டணியின் வாய்ப்புகள் குறித்து நீங்கள் என்ன நினைக்கிறீர்கள்? என்ற கேள்விக்கு நாங்கள் அமோக வெற்றி பெறுவோம் என்று அமித்ஷா கூறினார்.

தொடர்ந்து தமிழ்நாட்டில் தேசிய ஜனநாயக கூட்டணி வெற்றி பெற்றால் ஆட்சியில் பாஜக பங்கேற்குமா? என்ற கேள்விக்கு, 'ஆம்' என பதில் அளித்தார்.

மேலும் தமிழ்நாட்டில் அதி.மு.க. அமைக்கும் அரசின் அமைச்சரவையில் பா.ஜ.க. நிச்சயம் இடம்பெறும் என்று அமித்ஷா கூறினார்.

# பள்ளி வகுப்பறைகளில் 'ப' வடிவில் இருக்கைகள்

## தமிழ்நாடு அரசு அறிவுறுத்தல்

சென்னை, ஜூலை 13-

**தமிழக பள்ளி வகுப்பறைகளில் மாணவர் இருக்கைகள் 'ப' வடிவில் அமைக்கப்பட வேண்டும் என்று பள்ளிக்கல்வி இயக்குனரகம் உத்தரவு பிறப்பித்துள்ளது.**

வழக்கமாக பள்ளிகளில் மாணவர்கள் வரிசை வரிசையாக உட்கார வைக்கப்படுவர். முதல் வரிசை, இரண்டாம் வரிசை, மூன்றாம் வரிசை எனத் தொடர்ந்து கடைசி வரிசையும் இருக்கும். படிப்பில் சிறப்பாக இருக்கும் மாணவர்கள் முன் வரிசையிலும், படிப்பில் பின் தங்கிய மாணவர்கள் கடைசி வரிசையிலும் இருப்பது வாடிக்கை. இத்தகைய வரிசை முறை மாணவர்கள் மத்தியில், வேறுபாடுகளை ஏற்படுத்தி விடுகிறது.

அதை மாற்றும் நோக்கத்துடன், அரை வட்ட வடிவில் மாணவர்கள் இருக்கை அமைக்கப்படுவதை கேரளாவில் வினேஷ் விஸ்வநாத் இயக்கிய 'ஸ்தானார்த்தி ஸ்ரீகுட்டன்' படம் வலியுறுத்தியது. அரைவட்ட வடிவில் இருக்கைகள் போடப்பட்ட வகுப்பறையில் ஆசிரியர் நடுவில் நின்று அனைத்து மாணவர்களையும் நேரடியாக பார்த்து பாடம் நடத்துவார் என்பது, இந்தப் படத்தில் வலியுறுத்தப்பட்ட கருத்தாகும்.

பெரும் வரவேற்பை இந்த நடைமுறை கேரளாவில் பள்ளிகளில் ஒரு புதிய தாக்கத்தை ஏற்படுத்தி 8 பள்ளிகளில் இதுபோன்ற முறை நடைமுறைப்படுத்தப்பட்டு உள்ளது. கேரளா தொடங்கி வைத்த இந்த முறை தற்போது, பஞ்சாப், ஜம்மு காஷ்மீர் வரை தாக்கத்தை உண்டு பண்ணியிருக்கிறது. பள்ளிகளில் U வடிவ முறையில் பெஞ்சுகள் அமைக்க நடவடிக்கைகள் தொடங்கி இருக்கின்றன.

இந்நிலையில், தமிழகத்திலும் பள்ளிகளில், இந்த நடைமுறையை பின்பற்ற பள்ளி கல்வித்துறை உத்தரவிட்டு உள்ளது. இதன் மூலம் மாணவர்களை ஆசிரியர்கள் எளிதாக கவனிக்க முடிவதுடன், கலந்துரையாடலையும் மேம்படுத்தும் என தெரிவிக்கப்பட்டு உள்ளது. வகுப்பறைகளின் அளவு மற்றும் மாணவர்களின் எண்ணிக்கைக்கு ஏற்ப இந்த முறையில் இருக்கைகள் ஏற்பாடு செய்யும்படி அனைத்து தலைமையாசிரியர்களுக்கும் அறிவுறுத்த தலைமை கல்வி அதிகாரிகளுக்கு உத்தரவிடப்பட்டு உள்ளது. தமிழக பள்ளிக் கல்வித் துறை அதிகாரபூர்வ எக்ஸ் பக்கத்தில், "தமிழகத்தில் உள்ள அனைத்துப் பள்ளி வகுப்பறைகளில் 'ப' வடிவில் இருக்கைகளை அமைக்க பள்ளிக் கல்வித் துறை அறிவுறுத்துகிறது" எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது. அத்துடன் இணைக்கப்பட்ட படத்தில் 'சம இருக்கை, சமூக நீதி' என்ற வாசகம் சேர்க்கப்படுள்ளது.

வகுப்பறைகளில்ஒவ்வொருவரின் குரல்கள் கவனிக்கப்படுவது உறுதி செய்வதன் மூலம், கற்றல் என்பது கலந்துரையாடலமாக அமையும்

(கடைசி பக்கம் பார்க்க)

# பெரும்பான்மையுடன் ஆட்சி அமைப்போம்: இ.பி.எஸ். உறுதி

சென்னை, ஜூலை 13-

**'வரும் சட்டசபை தேர்தலில், பெரும்பான்மை உடன் அ.தி.மு.க., வெற்றி பெற்று ஆட்சி அமைக்கும்" என அ.தி.மு.க., பொதுச்செயலாளர் இ.பி.எஸ்., தெரிவித்துள்ளார்.**



'தமிழகத்தில் நிச்சயம் தே.ஜ. கூட்டணி வெற்றி பெறும். கூட்டணி ஆட்சியில் பா.ஜ., பங்கேற்கும்," என மத்திய உள்துறை அமைச்சர் அமித்ஷா பேட்டி அளித்து இருந்தார். தமிழகத்தில் அ.தி.மு.க., தனித்து ஆட்சி அமைக்கும் என இ.பி.எஸ்., கூறி வரும் நிலையில், பேசும் பொருளானது.

இந்நிலையில், சென்னையில் நேற்று (ஜூலை 12) அமித்ஷா கூட்டணி ஆட்சி அமைக்கும் என கூறியுள்ளாரே என நிருபர்கள் கேள்வி எழுப்பினர்.

இதற்கு, "ஏங்க, நான் தான் தெளிவாக சொல்லிவிட்டேன். பெரும்பான்மை உடன் அ.தி.மு.க., வெற்றி பெற்று ஆட்சி அமைக்கும். நன்றி வணக்கம்" என இ.பி.எஸ்., பதில் அளித்தார்.

# தமிழகத்தில் 17-ம் தேதி வரை மிதமான மழைக்கு வாய்ப்பு

## வானிலை ஆய்வு மையம் தகவல்

சென்னை, ஜூலை 13-

**தமிழகத்தில் 17-ம் தேதி வரை மிதமான மழைக்கு வாய்ப்புள்ளதாக சென்னை வானிலை ஆய்வு மையம் தெரிவித்துள்ளது.**

சென்னை வானிலை ஆய்வு மையம் வெளியிட்டுள்ள அறிக்கையில் தெரிவித்திருப்பதாவது:-

மேற்கு திசை காற்றின் வேக மாறுபாடு காரணமாக, 13-07-2025 மற்றும் 14-07-2025: தமிழகத்தில் ஓரிரு இடங்களிலும், புதுவை மற்றும் காரைக்கால் பகுதிகளிலும் இடி, மின்னலுடன் கூடிய லேசானது முதல் மிதமான மழை பெய்யக்கூடும். 15-07-2025: தமிழகத்தில் ஓரிரு இடங்களிலும், புதுவை மற்றும் காரைக்கால் பகுதிகளிலும் இடி, மின்னலுடன் கூடிய லேசானது முதல் மிதமான மழை பெய்யக்கூடும். நீலகிரி மற்றும் கோயம்புத்தூர் மாவட்டத்தின் மலைப்பகுதிகளில் ஓரிரு இடங்களில் கனமழை பெய்ய வாய்ப்புள்ளது.

16-07-2025: தமிழகத்தில் ஒருசில இடங்களிலும், புதுவை மற்றும் காரைக்கால் பகுதிகளிலும் இடி, மின்னலுடன் கூடிய லேசானது முதல் மிதமான மழை பெய்யக்கூடும். நீலகிரி மற்றும் கோயம்புத்தூர் மாவட்டத்தின் மலைப்பகுதிகளில் ஓரிரு இடங்களில் கனமழை பெய்ய வாய்ப்புள்ளது. 17-07-2025 மற்றும் 18-07-2025: தமிழகத்தில் ஒருசில இடங்களிலும், புதுவை மற்றும் காரைக்கால் பகுதிகளிலும் லேசானது முதல் மிதமான மழை பெய்யக்கூடும். நீலகிரி மற்றும் கோயம்புத்தூர் மாவட்டத்தின் மலைப்பகுதிகளில் ஓரிரு இடங்களில் கனமழை பெய்ய வாய்ப்புள்ளது. இவ்வாறு அதில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

### அகமதாபாத் விமான விபத்து நடந்தது எப்படி?

# விசாரணை அறிக்கையில் பரபரப்பு தகவல்கள்

புதுடெல்லி, ஜூலை 13-

**அகமதாபாத் ஏர் இந்தியா விமானத்தின் 2 இன்ஜின்களுக்கும் எரிபொருள் ஓட்டத்தைக் கட்டுப்படுத்தும் சுவிட்சுகளில் ஒன்று ஷட் டவுன் ஆனதால் விமானம் விபத்துக்குள்ளானதாக முதற்கட்ட விசாரணை அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.**

குஜராத்தின் அகமதாபாத் விமான நிலையத்திலிருந்து லண்டன் புறப்பட்ட ஏர் இந்தியா விமானம் கடந்த ஜூன் 12-ம் தேதி விபத்தில் சிக்கியது.

இதில் விமானத்தில் பயணம் செய்த 241 பேர் உயிரிழந்தனர். ஒருவர் மட்டும் உயிர் பிழைத்தார். விமானம் மருத்துவக் கல்லூரி விடுதியில் மோதியதில் மருத்துவ மாணவர்கள் உட்பட 33 பேர் உயிரிழந்தனர்.

இந்த விபத்து குறித்து விமான விபத்துக்கான புலனாய்வு அமைப்பு (ஏ.ஏ.ஐ.பி.) விசாரணை நடத்தி வருகிறது. இந்நிலையில், இந்த விசாரணையின் முதற்கட்ட அறிக்கை தற்போது வெளியாகி உள்ளது.

அதில், "விமானத்தின் 2 இன்ஜின்களுக்கும் எரிபொருள் ஓட்டத்தைக் கட்டுப்படுத்தும் சுவிட்சுகளில் ஒன்று இணைக்கப்பட்டிருந்தது.


அது உடனடியாக ரன் நிலைக்கு சுவிட்ச் நகர்த்தப்பட்டபோதும், இரண்டாவது என்ஜின் ஷட் டவுன் ஆகியதால், அந்த முயற்சி வெற்றி பெறவில்லை.

விமான விபத்துக்கு நாசவேலை காரணமாக இருப்பதற்கான உடனடி ஆதாரங்கள் ஏதும் இல்லை.

மேலும், வானிலை பிரச்சினைகள் எதுவும் காரணமாக இருக்கவில்லை. வானம் தெளிவாக இருந்தது. காற்று மிகவும் வலுவாக இல்லை. விமானிகள் ஆரோக்கிமான வர்களாகவே இருந்துள்ளனர். போதிய ஓய்வை எடுத்துள்ளனர்.

மேலும், இந்த வகை விமானத்தை இயக்குவதில் அவர்களுக்கு போதிய அனுபவம் உள்ளது" என தெரிவிக்கப்பட்டுள்ளது.

**மார்க்கெட் விலை நிலவரம்**



| BSE | NSE |
|---|---|
| -689.81 | -205.40 |
| பாயின்ட் 82,500.47 | பாயின்ட் 25,149.85 |




**தங்கம்**
1 சவரன் ₹72,160
1 கிராம் ₹9,020



**வெள்ளி**
1 கிலோ ₹120,000
1 கிராம் ₹120.00

**டாலர்** ₹85.86



**பெட்ரோல்** ₹102.63
**டீசல்** ₹94.24

### துருக்கி அரசுடன் ஒப்பந்தம்:
# ஆயுதங்களை கீழே போட்ட குர்திஷ் பிரிவினைவாதிகள்



**இஸ்தான்புல், ஜூலை 13-**

துருக்கியுடனான சமாதான ஒப்பந்தத்தின் ஒரு பகுதியாக, ஈராக்கிய குர்திஷ் பிரிவினைவாதிகள் தங்கள் ஆயுதங்களை கைவிட தொடங்கியுள்ளனர்.

இதற்காக நேற்று முன்தினம் (வெள்ளிக்கிழமை) வடக்கு ஈராக்கில் ஒரு அடையாள விழா நடைபெற்றது. அதில் போராளிகள் தங்கள் ஆயுதங்களை மொத்தமாக போட்டு எரித்தனர். கடந்த பிப்ரவரியில், குர்திஸ்தான் தொழிலாளர் கட்சியின் நிறுவனத் தலைவர் அப்துல்லா ஒகலன், ஆயுதங்களைக் கீழே போட்டுவிட்டு அமைப்பைக் கலைக்க சிறையில் இருந்தபடி அழைப்பு விடுத்தார்.

75 வயதான ஒகலன், 1999 முதல் துருக்கிய சிறையில் தனிமைச் சிறையில் அடைக்கப்பட்டுள்ளார். தற்போது எட்டப்பட்டுள்ள ஒப்பந்தத்தின் ஒரு பகுதியாக அவரது விடுதலையும் இருக்கும் என எதிர்பார்க்கப்படுகிறது. கடந்த 40 ஆண்டுகளுக்கும் மேலாக சுமார் நாற்பதாயிரம் மக்கள் உயிரிழந்த நிலையில் தற்போது துருக்கிய-குர்திஷ் மோதல் இந்த ஒப்பந்தம் மூலம் முடிவுக்கு வந்துள்ளது.

# மதுரையில் த.வெ.க. 2-வது மாநில மாநாடு?

**சென்னை, ஜூலை 13-**

த.வெ.க. 2-வது மாநில மாநாட்டை மதுரையில் நடத்துவதற்கு தீர்மானிக்கப்பட்டுள்ளதாக தகவல்கள் வெளியாகி உள்ளது.

தமிழக வெற்றிக்கழகத்தின் முதல் மாநில மாநாடு கடந்த ஆண்டு விக்கிரவாண்டியில் நடந்தது. இந்த மாநாட்டில் லட்சக்கணக்கானவர்கள் கூடினர். இது கட்சியினரிடையே உற்சாகத்தை ஏற்படுத்தியது. இதனை தொடர்ந்து, கட்சி கட்டமைப்பு பணிகளில் விஜய் தீவிரமாக இறங்கினார்.

வடமாவட்டங்களில் கட்சிக்கும் பெரும் வரவேற்பு கிடைத்து வரும் நிலையில், தென்மாவட்ட பகுதியில் பலத்தை நிரூபிக்கும் வகையில் அங்கு கட்சியின் 2-வது மாநில மாநாட்டை ஆகஸ்டு மாத இறுதியில் நடத்த விஜய் முடிவு செய்துள்ளார். இதற்காக, திருச்சி, மதுரை, நெல்லை ஆகிய இடங்களில் இடம் தேர்வு பணி நடந்து வந்தது.

இதற்காக கட்சியின் மாவட்ட செயலாளர்கள் அடங்கிய குழுவினர் ஆய்வு செய்தனர். இதத்தொடர்ந்து, மதுரையில் மாநாடு நடத்துவதற்கு தற்போது தீர்மானிக்கப்பட்டுள்ளதாக தகவல்கள் வெளியாகி உள்ளது. இதற்கான இடம் தேர்வுக்காக நிர்வாகிகள் நேரடியாக ஆய்வு பணிகளை மேற்கொண்டுள்ளனர்.

மதுரை மாநாட்டில் செப்டம்பர் மாத தனது சுற்றுப்பயணம் குறித்து அறிவிப்பை விஜய் வெளியிட இருக்கிறார். முக்கிய பிரமுகர்களும் இந்த மாநாட்டில் இணைய உள்ளதாக தகவல் வெளியாகி உள்ளது. ஏற்கனவே வருகிற சட்டமன்ற தேர்தலில் மதுரை தொகுதியில் விஜய் போட்டியிட வேண்டும் என ஆதரவு தெரிவித்து அக்கட்சியினர் அப்பகுதியில் சுவரொட்டிகள் ஒட்டி வந்தது பரபரப்பாக பேசப்பட்டது. இந்த நிலையில், மதுரை மாநாட்டை த.வெ.க.வினர் ஆவலுடன் எதிர்பார்த்து வருகின்றனர்.

# குஜராத் பால விபத்து: பலி 20 ஆக உயர்வு

**வதோதரா, ஜூலை 13-**

குஜராத் மாநிலத்தில் ஆற்றுப் பாலம் இடிந்து விழுந்ததில் உயிரிழந்தோர் எண்ணிக்கை 20 ஆக அதிகரித்துள்ளது. மஹிசாகர் பாலம் இடிந்து விழுந்த இடத்தில் தொடர்ந்து நான்காவது நாளாக தேடுதல் மற்றும் மீட்புப் பணிகள் நடைபெற்றன.

குஜராத் மாநிலம் வதோதரா மாவட்டம் மஹிசாகர் ஆற்றின் குறுக்கே இருந்த கம்பீரா - முஜிப்பூர் பாலம் கடந்த ஜூலை 9ம் தேதி திடீரென இடிந்து விழுந்தது.

இந்த விபத்தில் நடந்த இடத்தில் 4வது நாளாக மீட்புப் பணிகள் தொடர்ந்து நடந்து வருகின்றன. இந்த பாலம் இடிந்து விழுந்ததில் உயிரிழந்தோர் எண்ணிக்கை 20 ஆக உயர்ந்துள்ளது.

மேலும், பாலம் இடிந்து விழுந்து ஆற்றில் மூழ்கி காணாமல் போன ஒருவரை தேடும் பணிகள் தொடர்ந்து நடந்து வருகிறது. அதனுடன், ஆற்றில் மூழ்கிய வாகனங்களை ஆற்றில் இருந்து அகற்றும் பணியும் தொடர்ந்து நடந்து வருகிறது. இந்தப்பணியில் தேசிய பேரிடர் மீட்புப் படை, மாநில பேரிடர் மீட்புப் படை மற்றும் காவல்துறையினர் இணைந்து செயல்பட்டு வருகின்றனர்.

வதோதரா மாவட்ட ஆட்சியர் அனில் தமேலியா பேசுகையில், 'இன்று (நேற்று) நடைபெறும் மீட்புப் பணியில் இடிந்து விழுந்த பாலத்தின் பிரதான பகுதியை அகற்றி, காணாமல் போனவரின் உடலை மீட்க நீரில் மூழ்கிய நுட்பக் குழு நடவடிக்கை எடுக்கும்.

சல்பூரிக் அமிலத்தை ஏற்றிச் சென்ற நீரில் மூழ்கிய டேங்கரை பாதுகாப்பாக மீட்க குஜராத் மாசு கட்டுப்பாட்டு வாரியமும் அந்தப் பணியில் ஈடுபட்டுள்ளது. மேலும், அந்த டேங்கரில் கசிவு ஏற்படாமல் இருக்க முன்னெச்சரிக்கை நடவடிக்கைகளும் எடுக்கப்பட்டு வருகின்றன" என்று அவர் கூறினார்.

### டி.என்.பி.எஸ்.சி. குரூப்-4 தேர்வு:
# ஒரு காலி பணியடத்துக்கு 353 பேர் போட்டி

**சென்னை, ஜூலை 13-**

டி.என்.பி.எஸ்.சி. குரூப்-4 தேர்வு நேற்று நடைபெற்ற நிலையில் 3,935 காலிப் பணியிடங்களுக்கு 13 லட்சத்து 89 ஆயிரம் பேர் தேர்வு எழுதுவது ஆச்சரியமாக பார்க்கப்படுகிறது. அதாவது, ஒரு காலி பணியிடத்துக்கு 353 பேர் போட்டிபோடுகின்றனர்.

தமிழக அரசுப் பணிகளில் கடந்த மே மாத நிலவரப்படி, 9 லட்சத்து 42 ஆயிரத்து 941 ஊழியர்கள் பணியாற்றி வந்தனர். அந்த மாதத்தில் மட்டுமே 58 வயதை கடந்த 8,100 ஊழியர்கள் ஓய்வு பெற்றனர். இப்படி ஒவ்வொரு துறைகளிலும் மாதந்தோறும் ஓய்வுபெறுவோரின் எண்ணிக்கை சராசரியாக இருப்பதால், காலிப் பணியிடங்களின் எண்ணிக்கையும் அதிகரித்துக் கொண்டே வருகிறது.

இந்த காலிப் பணியிடங்களுக்குத் தமிழ்நாடு அரசு பணியாளர் தேர்வாணையம் (டி.என்.பி.எஸ்.சி.) மூலம் தேர்வு நடத்தி தகுதியானவர்கள் தேர்ந்தெடுக்கப்படுகிறார்கள். அந்த வகையில், நேற்று கிராம நிர்வாக அலுவலர், இளநிலை உதவியாளர், தட்டச்சர், சுருக்கெழுத்து தட்டச்சர், வனக்காப்பாளர், வனக்காவலர் போன்ற 3,935 காலிப் பணியிடங்களுக்கு குரூப்-4 தேர்வு நடத்தப்பட்டது.

இந்தத் தேர்வை 5 லட்சத்து 26 ஆயிரத்து 553 ஆண்கள், 8 லட்சத்து 63 ஆயிரத்து 68 பெண்கள், 117 திருநங்கைகள் என மொத்தம் 13 லட்சத்து 89 ஆயிரத்து 738 பேர், தமிழ்நாடு முழுவதும் உள்ள 38 மாவட்டங்களில் 314 மையங்களில் தேர்வு எழுதுகின்றனர்.

3,935 காலிப் பணியிடங்களுக்கு 13 லட்சத்து 89 ஆயிரம் பேர் தேர்வு எழுதுவது ஆச்சரியமாக பார்க்கப்படுகிறது. அதாவது, ஒரு காலிப் பணியிடத்துக்கு 353 பேர் போட்டி போடுகின்றனர். "கால் காசு சம்பளம் என்றாலும் அரசு உத்தியோகமாக இருக்க வேண்டும்" என்று பழங்காலந்தொட்டே கூறிவருவதை நாம் கேள்வி பட்டிருக்கிறோம். அதனால்தான் என்னவோ, அரசு வேலைக்கு இத்தனை பேர் மல்லுகட்டுகின்றனர்.

# தங்கம் விலை 3-வது நாளாக உயர்வு

**சென்னை, ஜூலை 13-**

சென்னையில் ஆபரணத் தங்கத்தின் விலை சனிக்கிழமை அதிரடியாக பவுனுக்கு ரூ.520 உயர்ந்து ரூ.73,120-க்கு விற்பனையாகிறது.

சர்வதேச பொருளாதார சூழல், அமெரிக்க டாலருக்கு நிகரான இந்திய ரூபாயின் மதிப்பு அடிப்படையில் இந்தியாவில் தங்கம் விலை நிர்ணயிக்கப்படுகிறது. அதோடு உலக நாடுகளின் வர்த்தக ரீதியான செயல்பாடும் தங்கத்தின் விலையில் தாக்கத்தை ஏற்படுத்துகிறது. அதன்படி, தங்கம் விலை உயர்ந்தும், குறைந்தும் வருகிறது.

, தொடர்ந்து மூன்று நாட்களாக தங்கம் விலை ஏற்றம் கண்டு வருகிறது. கடந்த வியாழக்கிழமை அன்று பவுனுக்கு ரூ.160 என தங்கம் விலை உயர்ந்தது. நேற்று முன்தினம் பவுனுக்கு ரூ.440 என விலை உயர்ந்து விற்பனையானது. இந்தச் சூழலில் சென்னையில் நேற்று (சனிக்கிழமை) 22 காரட் ஆபரணத் தங்கத்தின் விலை கிராமுக்கு ரூ.65 உயர்ந்து, ஒரு கிராம் ரூ.9,140-க்கு விற்பனையானது. அதேபோல பவுனுக்கு ரூ.520 உயர்ந்து, ஒரு பவுன் ரூ.73,120-க்கு விற்பனையானது. நேற்று முன்தினம் ஒரு பவுன் தங்கம் ரூ.72,600-க்கு விற்பனையானது குறிப்பிடத்தக்கது. வெள்ளி விலை கிராமுக்கு ரூ.4.90 காசுகளும் நேற்று உயர்ந்து விற்பனையானது. ஒரு கிராம் ரூ.125-க்கும், ஒரு கிலோ ரூ.1,25,000-க்கும் விற்பனையானது.

# பாரதிய ஜனதா கூட்டணிக்கு த.வெ.க. வர வாய்ப்புள்ளதா?
## மத்திய அமைச்சர் அமித்ஷா விளக்கம்

**புதுடெல்லி, ஜூலை 13-**

நாங்கள் பல கட்சிகளை ஒரே கூட்டணியில் கொண்டு வர முயற்சிக்கிறோம் என்று அமித்ஷா தெரிவித்தார்.

தமிழ்நாட்டில் தேசிய ஜனநாயக கூட்டணி ஆட்சி அமைக்கும் என்று உள்துறை அமைச்சர் அமித்ஷா மீண்டும் பேசியுள்ளது பெரும் பரபரப்பை ஏற்படுத்தியுள்ளது. இந்நிலையில், ஆங்கில நாளிதழ் ஒன்றுக்கு பேட்டி அளித்த அமித்ஷாவிடம், உங்கள் கூட்டணியில் த.வெ.க. தலைவர் விஜய் வர வாய்ப்புள்ளதா? என்று கேள்வி எழுப்பப்பட்டது.

அதற்கு பதில் அளித்த அமித்ஷா, "நாங்கள் பல கட்சிகளை ஒரே கூட்டணியில் கொண்டு வர முயற்சிக்கிறோம்" என்று பதில் அளித்தார். அதே சமயம் பா.ஜ.க.விடம் ஒருபோதும் கூட்டணி அமைக்கமாட்டோம் என்று விஜய் அறிவித்துள்ளார் என்பது குறிப்பிடத்தக்கது.

# சீனா செல்கிறார் ஜெய்சங்கர்

**புதுடெல்லி, ஜூலை 13-**

ஷாங்காய் ஒத்துழைப்பு மாநாட்டில் பங்கேற்க மத்திய வெளியுறவுத்துறை அமைச்சர் ஜெய்சங்கர் சீனா செல்ல உள்ளதாக அதிகாரப்பூர்வ அறிவிப்பு தெரிவிக்கப்பட்டுள்ளது.

கல்வான் பள்ளத்தாக்கு பகுதியில் ஏற்பட்ட மோதலுக்குப் பிறகு இரு நாட்டு வெளியுறவு அமைச்சர் வேறு நாடுகளில் சந்தித்துப் பேச உள்ளனர். ஜூலை 14, 15 ஆகிய தேதிகளில் ஷங்காய் ஒத்துழைப்பு அமைப்பின் மாநாடு சீனாவின் தியான்ஜினில் நடைபெற உள்ளது. இந்த மாநாட்டில் ஜெய்சங்கர் பங்கேற்க உள்ளதாக தகவல் வெளியாகியுள்ளது. இதற்கு முன்னர் தலைநகர் பீஜிங் சென்று அங்கு வெளியுறவுத்துறை அமைச்சர் வாங் யீயையும் சந்தித்து இருதரப்பு உறவுகள் குறித்து கலந்துரையாடுவார் எனத் தகவல்கள் தெரிவிக்கின்றன.


முன்னதாக பாதுகாப்பு அமைச்சர் ராஜ்நாத் சிங், தேசிய பாதுகாப்பு ஆலோசகர் அஜித் தோவல் ஆகியோர் சமீபத்தில் சீனாவிற்கு வருகை தந்ததைத் தொடர்ந்து ஜெய்சங்கர் அங்குச் செல்லவுள்ளார். 2020 ஆம் ஆண்டு கிழக்கு லடாக்கில் ஏற்பட்ட ராணுவ மோதலைத் தொடர்ந்து இரு நாடுகளுக்கும் இடையிலான உறவுகள் கடுமையான நெருக்கடிக்கு உள்ளான நிலையில், கடந்த 5 ஆண்களில் ஜெய்சங்கரின் முதல் சீன வருகை இதுவாகும்.

# கடந்த 10 நாட்களில் வெப்ப அலையால் 2,300 பேர் பலி

**லண்டன், ஜூலை 13-**

ஐரோப்பியாவின் பிரான்ஸ், ஸ்பெயின், போர்ச்சுகல், ஸ்வீடன் உள்ளிட்ட நாடுகளில் வெப்ப அலை காரணமாக கடந்த 10 நாட்களில் மட்டும் 2,300 பேர் உயிரிழந்துள்ளதாக தகவல் வெளியாகி உள்ளது. காலை 11 மணி முதல் மாலை 6 மணி வரை வீட்டை விட்டு வெளியேற மக்களுக்கு தடை விதிக்கப்பட்டுள்ளது. பள்ளி கல்லூரிகளுக்கு விடுமுறை. அலுவலகங்கள், வணிக வளாகங்கள் ஆகியவை பகுதி நேரமாக செயல்படுகின்றன.

**13-07-2025**



## இன்றைய ராசி பலன்கள்

**மேஷம்:-** இன்று, தன வருமானம் அதிகரிப்பதால் வங்கிக் கணக்கில் இருப்பு கூடும். கடமை தவறாமை மற்றும் கடின உழைப்பால் பல வழிகளிலும் முன்னேற்றம் ஏற்படும்.

**ரிஷபம்:-** தெய்வீக காரிய ஈடுபாட்டால், மனதில் எப்போதும் அமைதி நிலவும். புகழ் ஓங்கும். திருமண வயது அடைந்தவர்களுக்கு திருமணம் நடந்து வாழ்க்கையில் புதிய திருப்பங்கள் ஏற்படும்.

**மிதுனம்:-** பணிவின்மை காரணமாக பணியிடத்தில் சில பிரச்சனைகள் எழலாம். கௌரவக் குறைவு ஏற்படா வண்ணம் பார்த்துக் கொள்வது சிறப்பு. குடும்ப ஆரோக்கியத்தில் மிகுந்த அக்கறை தேவை.

**கடகம்:-** வாகன, போஜன சுகங்கள் உண்டாகும். பல வழிகளிலும் பணம் வரும். அரசாங்கத்தால் இலாபம் உண்டாகும்.பணியாளர்கள் பதவி உயர்வு எதிர்பார்க்கலாம். வெற்றி மேல் வெற்றி வரும்.

**சிம்மம்:-** உங்கள் முயற்சிகள் அனைத்திலும் வெற்றி கொடி நாட்டுவீர்கள். எல்லா வகையிலும் நன்மைகள் ஏற்படும். புதிய தோழிகள் நட்பு மகிழ்ச்சி உண்டாகும். சொந்த வீட்டுக் கனவுகள் நனவாகும்.

**கன்னி:-** அன்புக் குழந்தைகளுக்கு ஆரோக்கியக் குறைவு ஏற்படலாம். பிறருடன் பகையும், வாழ்வில் கீழ் நிலையும் ஏற்படலாம். உங்கள் திறமைக்கு மதிப்பு இருக்காது. பண விரயங்கள் ஏற்படும்.

**துலாம்:-** அன்னையின் உடல் நிலையில் அக்கறை கொள்ளுங்கள். வாகனங்களில் செல்லும் போது எச்சரிக்கை அவசியம். மனதில் எப்போதும் ஒருவித பயம் நிலவும், அதனால் தூக்கமும் குறையும்.

**விருச்சிகம்:-** சமூக வாழ்க்கையில் சுற்றுச் சூழலில் மாற்றங்கள் எதிர்பார்க்கலாம். தொழில் வளம் பெருகும். எதையும் துணிச்சலுடன் எதிர் கொள்வீர்கள். பயண ஆர்வம் மேலோங்கும்.

**தனுசு:-** தொழிலில் ஏற்படும் பிரச்சனைகளால் இலாபங்கள் குறையும். வீட்டில் அமைதி நிலவ வீண் வாக்குவாதங்களை த் தவிர்க்கவும். கல்வியில் தடைகள், தோல்விகள் ஏற்படும்,

**மகரம்:-** கல்வியில் வெற்றி கிடைக்கும். கௌரவம், மதிப்பு, மரியாதை கூடும். மனைவி, மக்களின் உடல் ஆரோக்கியம் மேம்படும். தனலாபம், பெண்களால் உதவி. ஆகியவையும் ஏற்படும்.

**கும்பம்:-** மறைபொருள் கல்வி மீதான ஆர்வம் எழும். கண்மூடித்தனமான காதல் விவகாரங்கள் கவலை அளிக்கும். தனிமையான, ஒதுக்கப்பட்ட இடங்களில் இருந்து இலாபம் கிடைக்கும்.

**மீனம்:-** நம்பிக்கை மிக்க நண்பர்களில் ஒரு சிலர் மட்டுமே நிலைத்திருப்பார்கள். அரசியல் மற்றும் சமூக வாழ்க்கையின் மூலம் இலாபம் அடைவீர்கள். விவசாயம் ஆதாயம் தரும்.



முதல்வர் மு.க.ஸ்டாலின் நேற்று, துணை பொதுச்செயலாளரும், மாநிலங்களவை குழுத் தலைவருமான திருச்சி சிவாக்கு சென்னை, அண்ணா அறிவாலயத்தில், ஒதுக்கப்பட்டுள்ள இருக்கையில் அவரை அமர்த்தினார். உடன் அமைச்சர் துரைமுருகன், அமைப்புச் செயலாளர் ஆர்.எஸ்.பாரதி, டி.கே.எஸ்.இளங்கோவன் ஆகியோர் உள்ளனர்.

### சிறிய பிரச்சனையை பெரிதுபடுத்த வேண்டாம்:
# வி.சி.க.வினருக்கு திருமாவளவன் அறிவுறுத்தல்

**சென்னை, ஜூலை 13-**

சிறிய பிரச்சனையை பெரிதுபடுத்த வேண்டாம் என்று வி.சி.க.வினருக்கு திருமாவளவன் அறிவுறுத்தியுள்ளார்.

விடுதலை சிறுத்தைகள் கட்சி தலைவர் திருமாவளவன், தனது முகநூல் பக்கத்தில், நேரலையில் கூறியதாவது:-

புதுக்கோட்டை மாவட்டத்தைச் சேர்ந்த பொறுப்பாளர்கள், 3 மாவட்டச் செயலாளர்களை தவிர்த்து, ஒருங்கிணைந்த கலந்தாய்வு கூட்டத்தை நடத்துவதாக அறிகிறேன். இது, கட்சி விதிகளுக்கு முரணானது. மாவட்டச் செயலாளர்கள் மீது நடவடிக்கை எடுக்க, நிர்வாகிகள் கோரிக்கை மனு அளித்தனர். புகார் பரிசீலனையில் இருக்கிறது. புகார் மீது நடவடிக்கை எடுக்க வேண்டும் என்றால், 144 மாவட்டச் செயலாளர்களையும் நீக்க வேண்டியது இருக்கும்.

பாதிக்கப்பட்ட மக்களுக்காக போராடும் கட்சி, உயிர்ப்போடு இருக்கும். தினமும் மக்களை சந்தித்து, அவர்களின் பிரச்சனைகளை வரிசைப்படுத்தி, அவற்றை தீர்க்க செயல் திட்டங்களை வரையறுக்க வேண்டும்.

எந்த ஊரை எடுத்துக் கொண்டாலும், மனை பட்டா கோருவது பிரச்சனையாக உள்ளது. விளிம்பு நிலை மக்களுக்கு பட்டா வழங்குவது போன்ற பிரச்சனைகளில், நாம் கவனம் செலுத்த வேண்டும். சிறிய பிரச்சனைகளை பெரிதுபடுத்தினால், நான் கட்சியையே நடத்த முடியாது. இவ்வாறு அவர் கூறினார்.

# ஒகேனக்கல் காவிரி ஆற்றில் குளிக்க, பரிசல் இயக்க 18-வது நாளாக தடை

**ஒகேனக்கல், ஜூலை 13-**

ஒகேனக்கல் காவிரி ஆற்றில் குளிக்கவும், பரிசல் இயக்கவும் விதிக்கப்பட்ட தடையானது 18-வது நாளாக நீடிக்கிறது.

கர்நாடக மாநில காவிரி நீர்ப்பிடிப்பு பகுதிகளில் பெய்து வரும் கனமழை காரணமாக அங்குள்ள கிருஷ்ண ராஜ சாகர், கபினி அணைகளுக்கு நீர்வரத்து அதிகரித்தது. இதன் காரணமாக 2 அணைகளில் இருந்தும் தமிழகத்திற்கு காவிரி ஆற்றில் அதிக அளவில் தண்ணீர் திறந்து விடப்பட்டது.

இதனால் தருமபுரி மாவட்டம் ஒகேனக்கல் காவிரி ஆற்றில் வெள்ளப் பெருக்கு ஏற்பட்டது. கர்நாடக அணைகளில் இருந்து திறந்து விடப்படும் தண்ணீரின் அளவு குறைக்கப்பட்டதால் ஒகேனக்கல்லுக்கு நீர்வரத்து குறைய தொடங்கியது. இந்நிலையில் கடந்த 3 நாட்களுக்கு முன் கர்நாடக அணைகளில் இருந்து மீண்டும் தமிழகத்திற்கு காவிரி ஆற்றில் தண்ணீர் திறந்து விடப்பட்டுள்ளது. இதனால் ஒகேனக்கல்லுக்கு நீர்வரத்து 43 ஆயிரம் கனஅடி தண்ணீர் வந்து கொண்டு இருந்தது. தொடர்ந்து கர்நாடக அணைகளில் இருந்து நீர்திறப்பு குறைக்கப்பட்டதால் ஒகேனக்கல்லுக்கு நீர்வரத்து நேற்று முன்தினம் வினாடிக்கு 28 ஆயிரம் கன அடியாக குறைந்தது.

இந்த நீர்வரத்து நேற்றும் நிலவரப்படி 28 ஆயிரம் கன அடியாக நீடித்தது. இதன் காரணமாக ஒகேனக்கல் ஐந்தருவி, சினிபால்ஸ் ஆகிய அருவிகளில் தண்ணீர் பெருக்கெடுத்து ஓடியது. ஒகேனக்கல் காவிரி ஆற்றில் குளிக்கவும், பரிசல் இயக்கவும் விதிக்கப்பட்ட தடையானது 18-வது நாளாக நீடிக்கிறது.

### மாணவர், சுற்றுலாப் பயணிகளுக்கான
# அமெரிக்க விசா கட்டணம் 40 ஆயிரம் ரூபாயாக உயர்வு

**நியூயார்க், ஜூலை 13-**

மாணவர்கள், சுற்றுலா பயணிகள் விசா, இந்தியப் பணியாளர்கள் அதிகம் பயன்படுத்தும் எச்-1பி விசா கட்டணத்தை ரூ.16 ஆயிரத்தில் இருந்து ரூ.40 ஆயிரமாக அதிகரிக்கப்பட்டுள்ளது. மேலும், இந்த கட்டணம் ஆண்டுதோறும் பணவீக்கத்துக்கு ஏற்ப உயர்த்தப்படும் என்றும் 2026-ம் ஆண்டு முதல் அமலுக்கு வரும் என அறிவிக்கப்பட்டுள்ளது.

கடந்த ஜனவரியில் அமெரிக்க அதிபராக பொறுப்பேற்ற ட்ரம்ப் பல்வேறு சீர்திருத்தங்களை அமல்படுத்தி வருகிறார். மேலும் பல்வேறு நாடுகளுக்கா ன இறக்குமதி வரியையும் உயர்த்தி வருகிறார்.

இதனிடையே, கடந்த ஜூலை 4-ம் தேதி 'ஒரு மிகப் பெரிய அழகிய மசோதா' என்ற மசோதாவில் அதிபர் ட்ரம்ப் கையெழுத்திட்டு, அதனை சட்டமாக்கி உள்ளார். அதன்படி, தொழில்முனைவோர்கள், மாணவர்கள், சுற்றுலாப்பயணிகளுக்கான விசா பெறுவதற்கு, ஒரு குறிப்பிட்ட தொகையை வைப்பு தொகையாக செலுத்த வேண்டும். பணவீக்கத்தின் அடிப்படையில் ஆண்டுதோறும் இந்தக்கட்டணம் மாறுபடும் என தெரிவிக்கப்பட்டுள்ளது.

பாதுகாப்பு இருப்புத் தொகை என்ற பெயரில் இந்தத்தொகை வசூலிக்கப்படுகிறது. சில குறிப்பிட்ட நிபந்தனைகளின் அடிப்படையில் இந்த இருப்புத்தொகை திரும்ப அளிக்கப்படும் என்றும் தெரிவிக்கப்பட்டுள்ளது. முக்கியமாக விசா காலாவதியானவுடன் நீட்டிப்பு கோராமல் உடனடியாக அமெரிக்காவை விட்டு வெளியேறுபவர்களுக்கு இந்தத் தொகை திரும்ப அளிக்கப்படும் என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.

# டெல்லியில் இடிந்து விழுந்த 4 மாடி கட்டிடம்: 5 பேர் பலி

**புதுடில்லி, ஜூலை 13-**

டெல்லியில் 4 மாடிக் கட்டிடம் இடிந்து விழுந்து விபத்துக்குள்ளானது. இதில் 5 பேர் உயிரிழந்தனர்.

இதுபற்றிய விவரம் வருமாறு:- வடகிழக்கு டில்லியின் சீலம்பூர் பகுதியில் உள்ளது ஜனதா மஸ்தூர் காலனி. இங்குள்ள 4 மாடி குடியிருப்புக் கட்டிடம் நேற்று (ஜூலை 12) திடீரென இடிந்து விழுந்தது. தகவலறிந்த தீயணைப்பு மற்றும் பேரிடர் மீட்புத்துறைகள் உடனடியாக சம்பவ இடத்திற்கு விரைந்தனர். கட்டிட இடிபாடுகளில் 12 பேர் வரை சிக்கி இருக்கக்கூடும் என்பதால் அவர்களை தேடும் பணியில் மீட்புக்குழுவினர் இறங்கி உள்ளனர். இடிபாடுகளில் சிக்கியவர்களில் 4 பேர் வரை மீட்கப்பட்டு உள்ளனர். மீட்புப் பணிகளின் போது ஒருவரின் சடலம் கைப்பற்றப்பட்டு உள்ளது. மற்றவர்களின் நிலைமை என்ன என்பது பற்றிய தகவல்கள் வெளியாகவில்லை. கட்டிடம் எப்படி இடிந்து விழுந்தது என்பது பற்றிய எந்த விவரங்களையும் அதிகாரிகள் தெரிவிக்கவில்லை. தகவல் அறிந்து வந்த மீட்புப் படையினர் இடிபாடுகளை சிக்கியவர்களை மீட்கும் பணியில் ஈடுபட்டனர்.5 பேர் இறந்த நிலையில் மீட்கப்பட்டனர். தொடர்ந்து மீட்புப் பணி நடக்கிறது.

**வாக்களிப்பது நமது கடமை**

# முழு கொள்ளளவை எட்டிய வீராணம் ஏரி

**கடலூர், ஜூலை 13-**

கடலூர் மாவட்டத்தில் மிகப்பெரிய நீராதாரமாக காட்டுமன்னார்கோவில் லால் பேட்டையில் வீராணம் ஏரி உள்ளது. தற்போது வீராணம் ஏரி அதன் முழு கொள்ளளவான 47.50 அடியை எட்டி உள்ளது.

இந்த ஏரி மூலம் பல ஏக்கர் நிலங்கள் பாசன வசதி பெறுகிறது. மேலும் சென்னை மக்களின் குடிநீர் தேவைக்காக பயன்பட்டு வருகிறது.மேலும் சுற்றுவட்டார பகுதியை சேர்ந்த அனைத்து தரப்பினரும், விவசாயிகளும் இந்த ஏரி நீரை பயன்படுத்தி வருகின்றனர். இந்த ஏரியின் நீர் மட்டம் 47.50 அடியாகும். இந்த நிலையில் பல்வேறு வழிகளில் இருந்து ஏரிக்கு 1337 கன அடி தண்ணீர் வரத்து வருவதால் தற்போது வீராணம் ஏரி அதன் முழு கொள்ளளவான 47.50 அடியை எட்டி உள்ளது. மேலும் சென்னை குடிநீர் தேவைக்காக வினாடிக்கு 74 கன அடி தண்ணீர் அனுப்பப்பட்டு வருகிறது. இதனால் விவசாயிகள் மகிழ்ச்சி அடைந்துள்ளனர்.



சென்னை அறிவாலயத்தில் மு.க.ஸ்டாலினை கழக கல்வியாளர் அணியின் செயலாளராக நியமிக்கப்பட்டுள்ள தமிழச்சி தங்கப்பாண்டியன் எம்.பி. சந்தித்து வாழ்த்து பெற்றார்.

### கும்பாபிஷேகத்தை முன்னிட்டு

# திருப்பரங்குன்றம் தாலுகாவுக்கு 14-ம் தேதி உள்ளூர் விடுமுறை

**மதுரை, ஜூலை 13-**

கும்பாபிஷேகத்தை முன்னிட்டு, திருப்பரங்குன்றம் தாலுகாவுக்கு மட்டும் 14-ந்தேதி உள்ளூர் விடுமுறை விடப்படும் என மாவட்ட கலெக்டர் பிரவீன் குமார் தெரிவித்துள்ளார்.

திருப்பரங்குன்றம் முருகன் கோவிலில் நாளை (14-ந் தேதி) மகா கும்பாபிஷேகம் நடைபெறுவதையொட்டி, வியாழக்கிழமை முதல் யாகசாலை பூஜைகள் நடைபெற்று வருகின்றன. நாளை (ஜூலை 14ம் தேதி) அதிகாலை 5.25 மணிக்கு மங்கள வாத்தியங்கள் முழங்க, கோவிலில் கம்பீரமான 125 அடி உயரம் கொண்ட ஏழு நிலையான ராஜகோபுரத்தில் புனித நீர் ஊற்றப்பட்டு மகா கும்பாபிஷேகம் நடக்கிறது.

இந்நிலையில், மதுரை மாவட்ட கலெக்டர் பிரவீன்குமார் வெளியிட்டுள்ள செய்திக்குறிப்பில் கூறி இருப்பதாவது:-

மதுரை மாவட்டம், திருப்பரங்குன்றம் சுப்பிரமணியசுவாமி கோவில் மகா கும்பாபிஷேக விழா நாளை (திங்கட்கிழமை) நடக்கிறது. அன்றைய தினம் மதுரை மாவட்டம் திருப்பரங்குன்றம் தாலுகாவுக்கு உட்பட்ட பள்ளி, கல்லூரி மற்றும் அரசு அலுவலகங்களுக்கு மட்டும் உள்ளூர் விடுமுறையாக அறிவிக்கப்படுகிறது. எனினும் 14-ந் தேதி அன்று பள்ளி, கல்லூரிகளில் தேர்வுகள் ஏதேனும் அறிவிக்கப்பட்டிருப்பின் சம்பந்தப்பட்ட மாணவ, மாணவிகள், ஆசிரியர்கள் மற்றும் தொடர்புடைய பணியாளர்களுக்கும் இவ்விடுப்பு பொருந்தாது என தெரிவிக்கப்படுகிறது. இந்த விடுமுறைக்கு பதிலாக வருகிற 19-ந்தேதி (சனிக்கிழமை) மதுரை மாவட்டம், திருப்பரங்குன்றம் தாலுகாவுக்கு உட்பட்ட பள்ளி, கல்லூரி மற்றும் அரசு அலுவலகங்களுக்கு மட்டும் வேலை தினமாக அறிவிக்கப்படுகிறது. 14-ந் தேதி அன்று மதுரை மாவட்டம், திருப்பரங்குன்றம் தாலுகாவுக்கு உட்பட்ட சார்நிலை கருவூலம் அவசர அலுவல்களை கவனிக்கும் பொருட்டு குறிப்பிட்ட பணியாளர்களோடு செயல்படும்.

இவ்வாறு அதில் கூறப்பட்டுள்ளது.

# ஆடித் திருவாதிரை விழாவில் பிரதமர் நரேந்திரமோடி பங்கேற்பு

### நினைவு நாணயம் வெளியிடுகிறார்

**அரியலூர், ஜூலை 13-**

கங்கைகொண்ட சோழபுரத்தில் ராஜேந்திர சோழனின் பிறந்தநாளான ஆடித் திருவாதிரையன்று நடைபெறும் விழாவில் பிரதமர் மோடி பங்கேற்கிறார்.

அரியலூர் மாவட்டம் கங்கைகொண்டசோழபுரத்திலுள்ள பெருவுடையார் கோவில், மாமன்னன் ராஜேந்திர சோழனால் 1,000 ஆண்டுகளுக்கு முன்பு கட்டப்பட்டதாகும். இந்தக் கோவிலில், ராஜேந்திர சோழனின் பிறந்தநாளான ஆடித் திருவாதிரை நாளை, அரசு விழாவாக தமிழக அரசு 2023-ம் ஆண்டு முதல் கொண்டாடி வருகிறது. அன்றைய தினம் உள்ளூர் விடுமுறை அறிவிக்கப்பட்டு, கோவில் வளாகத்தில் கலை நிகழ்ச்சிகள், சொற்பொழிவுகள் நடத்தப்பட்டு வருகின்றன.

நடப்பாண்டு இந்த விழாவை மத்திய கலாசாரத்துறை சார்பில் 5 நாட்கள் கொண்டாட முடிவு செய்யப்பட்டுள்ளது. ராஜேந்திர சோழனின் பிறந்தநாளான வருகிற 23-ந் தேதி மத்திய கலாசாரத்துறை அமைச்சர் கஜேந்திர சிங் ஷெகாவத் விழாவை தொடங்கி வைக்கிறார். நிறைவு நாளான வருகிற 27-ந் தேதி பிரதமர் நரேந்திர மோடி விழாவில் பங்கேற்பதாகத் தகவல் வெளியாகி உள்ளது. அன்றைய தினம் நடைபெறும் திருவாசகம் மாநாட்டில் பங்கேற்கும் பிரதமர் மோடி, கங்கைகொண்ட சோழபுரம் பெருவுடையார் திருக்கோவில் வடிவம் பொறிக்கப்பட்ட நினைவு நாணயத்தை வெளியிடுகிறார்.

### குளத்தில் மூழ்கி 3 சிறுவர்கள் பலி:

# முதல்வர் மு.க.ஸ்டாலின் நிதியுதவி அறிவித்தார்

**சென்னை, ஜூலை 13-**

தஞ்சாவூரில் குளத்தில் மூழ்கி பலியான 3 சிறுவர்களின் குடும்பத்தினருக்கு தலா ரூ.3 லட்சம் நிதியுதவி வழங்கப்படும் என முதல்வர் மு.க.ஸ்டாலின் தெரிவித்துள்ளார்.

முதல்வர் மு.க.ஸ்டாலின் வெளியிட்டுள்ள அறிவிப்பில் கூறப்பட்டிருப்பதாவது:-

தஞ்சாவூர் மாவட்டம், பூதலூர் வட்டம், மருதக்குடி கிராமம், திருவேங்கட உடையான்பட்டியைச் சேர்ந்த சிறுவர்கள் ஜஸ்வந்த் (வயது 8), பாலமுருகன் (வயது 10) மற்றும் மாதவன் (வயது 10) ஆகிய மூவரும் நேற்று முன்தினம் மாலை பள்ளிக்குச் சென்றுவிட்டு மருதக்குடி கிராமத்தில் உள்ள ஊரணிக்கும் என்கிற பிள்ளையார் குளத்தில் குளிக்கச் சென்றபோது எதிர்பாராதவிதமாக நீரில் மூழ்கி உயிரிழந்தனர் என்ற துயரகரமான செய்தியைக் கேட்டு மிகுந்த அதிர்ச்சியும் வேதனையும் அடைந்தேன்.

மேலும் இச்சம்பவத்தில், உயிரிழந்த சிறுவர்களின் பெற்றோர்களுக்கும் அவர்களது உறவினர்களுக்கும் எனது ஆழ்ந்த இரங்கலையும், ஆறுதலையும் தெரிவித்துக்கொள்வதோடு, அவர்களது பெற்றோர்களுக்கு தலா 3 லட்சம் ரூபாய் முதலமைச்சரின் பொது நிவாரண நிதியிலிருந்து வழங்கிடவும் உத்தரவிட்டுள்ளேன்.

இவ்வாறு அதில் கூறப்பட்டுள்ளது.

# பா.ஜ.க. உடன் கூட்டணி இல்லை என்பதில் ஆயிரம் சதவீதம் உறுதி

### த.வெ.க. மீண்டும் திட்டவட்டம்

**சென்னை, ஜூலை 13-**

பா.ஜ.க. உடன் கூட்டணி இல்லை என்ற நிலைப்பாட்டில் 100 சதவீதம் அல்ல 1000 சதவீதம் உறுதியாக உள்ளோம் என்று த.வெ.க. தெரிவித்துள்ளது.

மத்திய உள்துறை மந்திரி அமித்ஷா ஆங்கில நாளிதழ் ஒன்றுக்கு பேட்டி அளிக்கையில் தேசிய ஜனநாயக கூட்டணியில் விஜய் வருவதற்கான சாத்திய கூறுகள் இருக்கிறதா? என்று அவரிடம் கேள்வி எழுப்பப்பட்டது. அதற்கு பதில் அளித்த அவர், "அதைப் பற்றி தற்போது சொல்ல முடியாது. நாங்கள் பல கட்சிகளை ஒரே கூட்டணியில் கொண்டு வர முயற்சிக்கிறோம்" என்று கூறினார்.

இந்நிலையில், பா.ஜ.க.வுடன் ஒருபோதும் கூட்டணி இல்லை என்பதில் உறுதியாக இருப்பதாக த.வெ.க. திட்டவட்டம் தெரிவித்துள்ளது. இதுதொடர்பாக த.வெ.க. கொள்கைப் பரப்பு பொதுச்செயலாளர் அருண்ராஜ் கூறுகையில், "மக்களால் வெறுக்கப்படும் பா.ஜ.க.வுடன் எந்தக் காலத்திலும் கூட்டணி இல்லை என செயற்குழுவில் முடிவு செய்யப்பட்டுள்ளது. பா.ஜ.க. உடன் கூட்டணி இல்லை என்ற நிலைப்பாட்டில் 100% அல்ல 1000 % உறுதியாக உள்ளோம். தமிழக வெற்றிக் கழகத்தின் தலைமையில் மட்டுமே கூட்டணி; விஜய் தான் முதல்வர் வேட்பாளர் என்பதில் உறுதியாக உள்ளோம். செயற்குழுக் கூட்டத்தில் எடுக்கப்பட்ட முடிவில் எப்போதும் மாற்றமில்லை" என்று கூறினார்.

### இறுதி அறிக்கைக்கு பிறகே அகமதாபாத்

# விமான விபத்துக்கான உண்மையான காரணம் தெரிய வரும்: ராம் மோகன்

**புதுடெல்லி, ஜூலை 13-**



இறுதி அறிக்கைக்கு பிறகே, ஏர் இந்தியா விமான விபத்துக்கான உண்மையான காரணம் தெரிய வரும் என்று மத்திய விமான போக்குவரத்து துறை அமைச்சர் ராம் மோகன் நாயுடு தெரிவித்துள்ளார்.

குஜராத்தின் அகமதாபாத் விமான நிலையத்திலிருந்து லண்டன் புறப்பட்ட ஏர் இந்தியா விமானம் கடந்த ஜூன் 12-ம் தேதி விபத்தில் சிக்கியது. இதில் விமானத்தில் பயணம் செய்த 241 பேர் உயிரிழந்தனர். ஒருவர் மட்டும் உயிர் பிழைத்தார். விமானம் மருத்துவக் கல்லூரி விடுதியில் மோதியதில் மருத்துவ மாணவர்கள் உட்பட 33 பேர் உயிரிழந்தனர்.

இந்த விபத்து குறித்து விசாரணை மேற்கொண்டு வரும் விமான விபத்துக்கான புலனாய்வு அமைப்பு (ஏ.ஏ.ஐ.பி.) தனது முதற்கட்ட விசாரணை அறிக்கையை நேற்று வெளியிட்டது. அதில், "விமானத்தின் 2 இன்ஜின்களுக்கும் எரிபொருள் ஓட்டத்தைக் கட்டுப்படுத்தும் சுவிட்சுகள் அணைக்கப்பட்டதால் என்ஜினுக்கு எரிபொருள் பற்றாக்குறை ஏற்பட்டு விபத்து நிகழ்ந்துள்ளது என்று தெரிவித்துள்ளது. எனினும், எரிபொருள் ஓட்டத்தைக் கட்டுப்படுத்தும் சுவிட்சுகள் எவ்வாறு 'ரன்' என்ற நிலையில் இருந்து கட் ஆப் நிலைக்கு மாறின என்பது குறித்து அறிக்கையில் தெரிவிக்கப்படவில்லை.

இந்நிலையில், இந்த விகாரங்கள் தொடர்பாக விசாகப்பட்டிணத்தில் செய்தியாளர்களிடம் பேசிய அமைச்சர் ராம் மோகன் நாயுடு, "விசாரணை அறிக்கையில் ஆரம்பகட்ட கண்டுபிடிப்புகள் மட்டுமே உள்ளன. இவ்விஷயத்தில் அவசரப்பட்டு நாம் எந்த ஒரு முடிவுக்கும் வரக்கூடாது. இறுதி அறிக்கை விரைவில் வரும் என்று நாங்கள் நம்புகிறோம். அப்போது, விபத்து தொடர்பாக சில முடிவுகளுக்கு எங்களால் வர முடியும்.

விமானிகள் மற்றும் விமானப் பணியாளர்களைப் பொறுத்தவரை, உலகின் சிறந்த விமானிகளும் விமானப் பணியாளர்களும் எங்களிடம் இருப்பதாக நான் உண்மையாகவே நம்புகிறேன்." என தெரிவித்துள்ளார்.

# ராசிபுரம் நகராட்சியை கண்டித்து ஆர்ப்பாட்டம்: இ.பி.எஸ். அறிவிப்பு

**சென்னை, ஜூலை 13-**

ராசிபுரம் நகராட்சியை கண்டித்து வரும் 16-ம் தேதி ஆர்ப்பாட்டம் நடைபெறும் என எடப்பாடி பழனிசாமி தெரிவித்துள்ளார்.

அ.தி.மு.க. பொதுச்செயலாளர் எடப்பாடி பழனிசாமி வெளியிட்டுள்ள அறிக்கையில், நாமக்கல் மாவட்டம், ராசிபுரம் நகராட்சியில் நிலவி வரும் பல்வேறு நிர்வாகச் சீர்கேடுகளால் பெரிதும் பாதிக்கப்பட்டுள்ளதாக அப்பகுதி வாழ் மக்கள் புகார் தெரிவித்த வண்ணம் உள்ளனர்.

ராசிபுரம் நகராட்சியில் மாதம் ஒருமுறை மட்டுமே குடிநீர் வழங்கப்படுவதால், மக்கள் குடிநீருக்காக அலையும் அவல நிலை ஏற்பட்டுள்ளது. தற்போதுள்ள ராசிபுரம் நகராட்சி பேருந்து நிலையத்தை தேவையில்லாமல் சுமார் 8 கிலோ மீட்டர் தூரத்தில் உள்ள அணைப்பாளையம் என்ற கிராமத்திற்கு மாற்ற முயற்சி மேற்கொள்ளப்பட்டுள்ளது.

இந்நிலையில், ராசிபுரம் நகராட்சி வாழ் மக்களுக்கு நாள்தோறும் முறையாக குடிநீர் வழங்காத அரசு மற்றும் நகர மன்ற நிர்வாகத்தைக் கண்டித்தும்; மக்களின் குடிநீர் தேவையை போர்க்கால அடிப்படையில் நிறைவேற்றிடவும், பேருந்து நிலைய இடமாற்ற முயற்சியைக் கைவிடவும் வலியுறுத்தி, அ.தி.மு.க. நாமக்கல் மாவட்டத்தின் சார்பில் 16.7.2025 – புதன் கிழமை காலை 10 மணியளவில், கழக அமைப்புச் செயலாளரும், நாமக்கல் மாவட்டக் கழகச் செயலாளரும், முன்னாள் அமைச்சருமானபி. தங்கமணி, அவர்கள் தலைமையில் ராசிபுரம் பஸ் நிலையம், எம்.ஜி.ஆர். சிலை அருகில் மாபெரும் கண்டன ஆர்ப்பாட்டம் நடைபெறும்.

இவ்வாறு அவர் தெரிவித்துள்ளார்.

# தேர்வில் சர்ச்சை கேள்விகள் தவிர்ப்பு: டி.என்.பி.எஸ்.சி. தலைவர் தகவல்



சென்னை எழும்பூர் கெங்குரெட்டி தெரு பிரசிடென்சி பெண்கள் மேல்நிலைப்பள்ளி மையத்தில் தமிழக அரசுப்பணியாளர் தேர்வாணையத்தால் நடைபெறும் ஒருங்கிணைந்த குடிமைப் பணிகள் தேர்வு நான்கு (தொகுதி 4 பணிகள் ) தேரிவினை தேர்வாணையத் தலைவர் பிரபாகர் நேரில் பார்வையிட்டு ஆய்வு செய்தார்.

**சென்னை, ஜூலை 13-**

குரூப்-4 தேர்வு வினாத்தாளில் அரசியல் மற்றும் சாதி, சமயம் சார்ந்த கேள்விகளை கேட்கக்கூடாது என்று அறிவுறுத்தப்பட்டு இருந்ததாக டி.என்.பி.எஸ்.சி. தலைவர் பிரபாகர் தெரிவித்தார். தமிழகம் முழுவதும் குரூப் 4 தேர்வு நேற்று நடைபெற்றது. இந்தத் தேர்வினை 14 லட்சம் பேர் எழுதினார்கள். 4,922 மையங்களில் பலத்த பாதுகாப்புடன் அதிகாரிகளின் தீவிர கண்காணிப்பில் நடந்தது. சென்னையில் 316 மையங்களில் இத்தேர்வு நடைபெற்றது. தேர்வுக்காக அனைத்து மாவட்டங்களிலும் 314 மையங்கள் ஏற்படுத்தப்பட்டிருந்தன. சென்னையில் (சனிக்கிழமை) 94,845 பேர் தேர்வு எழுதினார்கள். எழும்பூர் அரசு மாநில மகளிர் மேல்நிலைப்பள்ளியில் நடைபெற்ற தேர்வினை டி.என்.பி.எஸ்.சி. தலைவர் பிரபாகர் ஆய்வு செய்தார். பின்னர் அவர் நிருபர்களிடம் கூறியதாவது:- குரூப்-4 தேர்வில் கேள்விகள் யாரும் பதிலளிக்க முடியாத மாறுபட்ட அளவில் கேள்விகள் கேட்கப்பட்டுள்ளது. வினாத்தாளில் அரசியல் மற்றும் சாதி, சமயம் சார்ந்த கேள்விகள் சில நேரங்கள் கேட்கப்படுவதால் தர்மசங்கடமான சூழ்நிலை உருவாகிறது. கேள்விகளை தயாரிக்கும் குழுவில் உள்ளவர்கள் அதுபோன்ற கேள்விகளை கேட்கக்கூடாது என்று அறிவுறுத்தப்பட்டு உள்ளது. தொடர்ந்து இது போன்ற கேள்விகளை அவர்கள் எடுத்து வந்தால் அந்தக் குழுவில் இருந்து நீக்கப்படுவார்கள். இவ்வாறு அவர் கூறினார்.

### காவல்நிலைய மரணங்கள்:

# விஜய் தலைமையில் இன்று ஆர்ப்பாட்டம்

**சென்னை, ஜூலை 13-**

லாக் அப் மரணங்கள் தொடர்பாக, சென்னையில் மாபெரும் கண்டன ஆர்ப்பாட்டம் த.வெ.க. தலைவர் விஜயின் தலைமையில் நடைபெற உள்ளது.

தமிழகத்தில் கடந்த நான்கு வருடங்களில் லாக்கப்பில் உயிரிழந்தவர்களுக்கு நீதி கேட்கும் வகையில், உயிரிழந்தவர்களின் குடும்பத்தினரை வைத்து, தமிழக வெற்றி கழகம் கட்சி சார்பில் இன்று மாபெரும் கண்டன ஆர்ப்பாட்டம் நடைபெற உள்ளது. இந்த ஆர்ப்பாட்டம் சென்னை சிவானந்தா சாலையில் அக்கட்சியின் தலைவர் விஜய் தலைமையில் நடைபெறுகிறது.

இதற்காக பனையூரில் உள்ள தமிழக வெற்றி கழகம் கட்சியின் தலைமை அலுவலகத்திற்கு, லாக்கப் மரணங்களில் உயிரிழந்தவர்களின் குடும்பத்தினர் வரவழைக்கப்பட்டுள்ளனர்.

இன்று நடைபெற உள்ள போராட்டத்திற்கு போலீசார் தடை விதிக்கலாம் என எண்ணி முன்னதாகவே அவர்களை அலுவலகத்திற்கு வரவழைத்துள்ளனர்.

அதன்படி, காவல் நிலைய விசாரணைக்கு அழைத்துச் சென்று உயிரிழந்த செங்கல்பட்டு மாவட்டத்தைச் சேர்ந்த கோகுல் ஸ்ரீ குடும்பத்தினர், அயனாவரத்தைச் சேர்ந்த விக்னேஷ் குடும்பத்தினர், கொடுங்கையூரைச் சேர்ந்த அப்பு என்ற ராஜசேகர் குடும்பத்தினர், திருவண்ணாமலை மாவட்டத்தைச் சேர்ந்த தங்கமணியின் குடும்பத்தினர், புதுக்கோட்டை மாவட்டத்தைச் சேர்ந்த சின்னதுரை குடும்பத்தார், தர்மபுரி மாவட்டத்தை சேர்ந்த செந்தில் குடும்பத்தினர் ஆகியோர் அலுவலகத்திற்கு வந்துள்ளனர்.

# வரும் 25-ம் தேதி எம்.பியாக பதவியேற்கிறார் கமல்ஹாசன்

**சென்னை, ஜூலை 13-**



மக்கள் நீதி மய்யம் தலைவர் கமல்ஹாசன் வரும் 25-ம் தேதி எம்.பியாக பதவியேற்கிறார்.

தமிழ்நாட்டில் இருந்து மாநிலங்களவைக்குத் தேர்வான வைகோ, பி.வில்சன், சண்முகம், எம்.எம்.அப்துல்லா, அன்புமணி மற்றும் சந்திரசேகரன் ஆகியோரது பதவிக்காலம் ஜூலை 24-ம் தேதியுடன் நிறைவடைகிறது. இதையடுத்து, 6 இடங்களுக்கான தேர்தல் அறிவிக்கப்பட்டது. தி.மு.க. சார்பில் பி.வில்சன், கவிஞர் சல்மா, சிவலிங்கம், மக்கள் நீதி மய்யம் தலைவர் கமல்ஹாசன் ஆகியோரும், அதி.மு.க. சார்பில் தனபால், ஐ.எஸ்.இன்பதுரை ஆகியோரும் வேட்புமனு தாக்கல் செய்தனர். இவர்கள் அனைவருமே போட்டியின்றி தேர்வாகினர்.

இதற்கான அதிகாரபூர்வ அறிவிப்பை தேர்தல் நடத்தும் அதிகாரியான சுப்பிரமணியம் வெளியிட்டு இருந்தர். அதாவது, சுப்பிரமணியம் வெளியிட்ட அறிக்கையில், "மாநிலங்களவைக்கு தமிழ்நாட்டிலிருந்து தேர்ந்தெடுக்கப்பட்ட ஆறு உறுப்பினர்களின் பதவிக்காலம் 24.07.2025-ஆம் நாளன்று முடிவடைவதால் ஏற்படும் காலியிடங்களுக்கு தி.மு.க. சார்பில் பி.வில்சன், கவிஞர் சல்மா, சிவலிங்கம், மக்கள் நீதி மய்யம் தலைவர் கமல்ஹாசன் ஆகியோரும், அதி.மு.க. சார்பில் தனபால், ஐ.எஸ்.இன்பதுரை ஆகியோரும் மாநிலங்களவை உறுப்பினர்களாக போட்டியின்றி தேர்ந்தெடுக்கப்பட்டுள்ளனர்" என்று கூறியிருந்தார்.

இந்த நிலையில், கமல்ஹாசன் மற்றும் தி.மு.க.வை சேர்ந்த 3 பேரும் மாநிலங்களவை எம்.பியாக பதவியேற்க போகிறார்கள் என்ற அறிவிப்பு வெளியாகியுள்ளது. இதன்படி, வரும் 25 ஆம் தேதி நான்கு பேரும் எம்.பியாக பதவியேற்க உள்ளனர். நாடாளுமன்ற மழைக்கால கூட்டத்தொடர் வரும் 21 ஆம் தேதி கூட உள்ளது. ஆகஸ்ட் 12 ஆம் தேதி வரை கூட்டத் தொடர் நடைபெறுகிறது.

# யுனெஸ்கோ பாரம்பரிய சின்னங்கள் பட்டியலில் மராத்திய ராணுவ தளங்கள்: மத்திய அமைச்சர் அமித்ஷா புகழாரம்

**மும்பை, ஜூலை 13-**

யுனெஸ்கோ பாரம்பரிய சின்னங்கள் பட்டியலில் மராத்திய ராணுவ தளங்கள் இடம்பெற்றுள்ளதற்கு அமித்ஷா பாராட்டு தெரிவித்துள்ளார். மராத்திய ஆட்சியாளர்களால் உருவாக்கப்பட்ட கோட்டைகள் மற்றும் ராணுவ தளங்கள், தமிழகத்தின் செஞ்சி கோட்டை ஆகியன ஐ.நாவின் யுனெஸ்கோ பாரம்பரிய சின்னங்கள் பட்டியலில் இடம்பெற்றுள்ளன. இதன்மூலம், இந்தியாவில் அங்கீகரிக்கப்பட்ட யுனெஸ்கோ பாரம்பரிய சின்னங்களின் எண்ணிக்கை 44 ஆக உயர்ந்துள்ளது. இதுகுறித்து மத்திய உள்துறை அமைச்சர் அமித்ஷா வெளியிட்ட எக்ஸ் பதிவில், 'சத்ரபதி சிவாஜி மகாராஜின் வாழ்க்கையுடன் தொடர்புடைய 12 கோட்டைகளை யுனெஸ்கோ உலக பாரம்பரிய பட்டியலில் சேர்த்துள்ளது. இது அனைத்து நாட்டு மக்களுக்கும் மிகுந்த பெருமையைத் தரும் தருணம். இந்தக் கோட்டைகள் இந்து சுயாட்சியைப் பாதுகாப்பதற்கான முக்கிய தூண்களாக இருந்து வருகின்றன.

இங்கிருந்து, கோடிக்கணக்கான நாட்டு மக்கள் தங்கள் தாய்மொழி மற்றும் கலாச்சாரத்தின் மீது தொடர்ந்து உத்வேகம் பெற்று வருகின்றனர்" என்று தெரிவித்துள்ளார் மராத்தா ராணுவ தளங்கள் யுனெஸ்கோ பட்டியலில் இடம்பெற்றதன் மூலமாக, இந்தியாவில் அங்கீகரிக்கப்பட்ட யுனெஸ்கோ பாரம்பரிய சின்னங்களின் எண்ணிக்கை 44 ஆக உயர்ந்துள்ளது.

# சீர்கெட்டுள்ள சட்ட நடைமுறைகள்: தலைமை நீதிபதி கவாய் வேதனை

**ஐதராபாத், ஜூலை 13-**



நம்முடைய சட்ட நடைமுறைகளில் சில திருத்தங்களை மேற்கொள்ள வேண்டிய அளவுக்கு அது சீர்கெட்டு காணப்படுகிறது என சுப்ரீம் கோர்ட்டு தலைமை நீதிபதி பி.ஆர். கவாய் தெரிவித்துள்ளார்.

தெலுங்கானாவின் ஐதராபாத் நகரில் நள்சார் சட்ட பல்கலைக்கழகத்தில் நடந்த பட்டமளிப்பு விழாவில் இந்திய சுப்ரீம் கோர்ட்டு தலைமை நீதிபதி பி.ஆர். கவாய் நேற்று கலந்து கொண்டார்.

தெலுங்கானா ஐகோர்ட்டின் தலைமை நீதிபதியான (பொறுப்பு) நீதிபதி சுஜோய் பால் முன்னிலை வகித்த இந்நிகழ்ச்சியில் முதல்வர் ரேவந்த் ரெட்டி, நீதிபதி பி.எஸ். நரசிம்மா ஆகியோரும் பங்கேற்றனர்.

இந்நிகழ்ச்சியில் சுப்ரீம் கோர்ட்டு தலைமை நீதிபதி கவாய் பேசும்போது, நம்முடைய நாடும், சட்ட முறைகளும் தனித்துவ சவால்களை எதிர்கொண்டுள்ளன. வழக்கு விசாரணைகளில் காலதாமதங்கள் என்பது, சில சமயங்களில் பல தசாப்தங்களுக்கும் நீடிக்கிறது. சில வழக்குகளில், விசாரணை கைதிகளாகவே பல ஆண்டுகள் காலம் கழித்த பின்னர், அவர்கள் நிரபராதி என தெரிய வரும் பல வழக்குகளையும் நாம் பார்க்கிறோம். நம்முடைய சிறந்த திறமையானது, நாம் சந்திக்க கூடிய சிக்கலான விசயங்களுக்கு தீர்வு காண உதவ கூடும் என்றார்.

நம்முடைய சட்ட நடைமுறைகளில் சில திருத்தங்களை மேற்கொள்ள வேண்டிய அளவுக்கு அது சீர்கெட்டு காணப்படுகிறது என வேதனை தெரிவித்த அவர், எனினும், இந்த சவால்களை எங்களுடைய சக குடிமகன்கள் தீர்ப்பார்கள் என்ற நல்ல நம்பிக்கையுடன், மிக எச்சரிக்கையுடனும் இதனை கூறி முடிக்கிறேன் என்று அவர் பேசியுள்ளார்.

### தலைவர்கள் சொல்வதை படிங்க....



கடலூர் ரயில் விபத்திற்கு கண்டனம் தெரிவிக்காத கவர்னர் ஆர்.என். ரவி, தமிழ்நாட்டு மக்கள் நலனில் அக்கறையில்லாதவர் என்பதற்கு இதைவிட வேறு சான்று தேவையில்லை. மதநல்லிணக்கத்தையும் ஏற்றுக் கொள்ளாத ஆர்.எஸ்.எஸ்.-ன் வகுப்புவாத கொள்கைகளை பிரச்சாரம் செய்கிற ஊதுகுழலாக கவர்னர் செயல்படுகிறார்.

**- செல்வப்பெருந்தகை**



அரசியலில் தவறு நடப்பது இயல்புதான். செய்த தவறை (அ.தி.மு.க.வுடன் கூட்டணி வைத்ததை) ஒப்புக்கொண்டு வைகோ பேசியுள்ளார். ம.தி.மு.க.வுக்கு அங்கீகாரம் பெறுவது முக்கியம். அதற்கு குறைந்தபட்சம் 10, 12 தொகுதிகளில் போட்டியிட்டு, 8 தொகுதியில் வெற்றி பெற்றால்தான் அங்கீகாரம் கிடைக்கும். இதுதான் எங்களது கட்சியினர் விருப்பம்.

**- துரை வைகோ**



அரசுப்பள்ளி மாணவர்கள் மரத்தடியிலும், மொட்டை மாடியிலும் அமர்ந்து கல்வி பயில்வதை பார்க்கும் போது பள்ளிகளின் உட்கட்டமைப்பு வசதிகளை மேம்படுத்துவதற்காக ஒதுக்கப்படும் பல ஆயிரக்கணக்கான கோடி ரூபாய் என்ன ஆனது? அரசுப் பள்ளிகளின் உள்கட்டமைப்பை மேம்படுத்த அரசு நடவடிக்கை எடுக்க வேண்டும்.

**- டி.டி.வி.தினகரன்**



அரசியல் எதிர்காலம் குறித்த கேள்வியோ, ஐயப்பாடோ பா.ம.க.,வினருக்கு தேவை இல்லை. பா.ம.க.வின் எதிர்காலம் நான்தான். நிகழ்காலமும் நான்தான். எப்போதும் போல உங்களோடு நான் நிற்கிறேன். போர்க்குணமுள்ள சிங்கத்தின் கால்களும் பழுதுபடாது. அதன் சீற்றமும் குறையாது. மக்களுக்காக கொடுக்கும் அதன் கர்ஜனையும் மாறாது.

**- ராமதாஸ்**



கோவில்பட்டி அரசு மகளிர் மேல்நிலைப் பள்ளியில் புதிய கட்டிட திறப்பு விழா நடந்தது தூத்துக்குடி மாவட்ட கலெக்டர் இளம்பகவத் திறந்து வைத்தார். தலைமை ஆசிரியர் ஜெயலலிதா, நகர் மன்ற தலைவர் கா.கருணாநிதி கல்வித்துறை இயக்குனர் கண்ணப்பன் உட்பட ஏராளமான கலந்து கொண்டனர்.



தென்காசி 1வது வார்டு பகுதியில் ஓரணியில் தமிழ்நாடு உறுப்பினர் சேர்க்கை பணியினை முன்னாள் அரசு ஊழியர் ரகுபதி, 1வது வார்டு கவுன்சிலர் வசந்தி வெங்கடேஸ்வரன், 1வது வார்டு பிடிஏ செய்யது அலி பாத்திமா, வங்கி முன்னாள் அதிகாரி அமிர்தராஜ், செயலாளர் ராமராஜ் உட்பட நிர்வாகிகள் பலர் கலந்து கொண்டு தொடங்கி வைத்தனர்.



திமுக மாநில இளைஞர் அணி அறக்கட்டளை சார்பாக கடையநல்லூர் கிழக்கு ஒன்றியம் ஊர்மேல்ழகியான் மாணவி அபிநய ஸ்ரீக்கு கல்வி உதவித் தொகையாக ரூ 25000 யை துணை முதல்வர் உதயநிதிஸ்டாலின் வழங்கிய காசோலையை தென்காசி தெற்கு மாவட்ட செயலாளர் வே.ஜெயபாலன் வழங்கினார். உடன் மாநில விவசாய அணி இணைச் செயலாளர் அப்துல் காதர், மாவட்ட இளைஞரணி டி.ஆர்.கிருஷ்ணராஜா, ஒன்றிய செயலாளர்கள் திவான் ஒலி, அழகு சுந்தரம், நகர செயலாளர் அப்பாஸ் கலந்து கொண்டனர்.

## அழகுமுத்துக்கோன் பண்பாட்டு இயக்கம் சார்பில் குரு பூஜை விழா

**தென்காசி ஜூலை..13**

மாவீரன் அழகுமுத்துக்கோன் பண்பாட்டு இயக்கம் சார்பில் தென்காசி மாவட்டம் கீழப்புலியூரில் யாதவ சமுதாய மண்டபத்தில் மாவீரன் அழகுமுத்துக்கோன் மார்பளவு சிலை திறக்கப்பட்டது. இதில் அனைத்துக் கட்சித் தலைவர்கள், முன்னாள் மற்றும் இன்னாள் சட்டமன்ற உறுப்பினர்கள் மற்றும் உள்ளாட்சி பிரதிநிதிகள் யாதவர் சமுதாய நிர்வாகிகள் அனைவரும் கலந்து கொண்டனர். இந்த விழாவில் பொதுமக்கள் பயன்பெறும் வகையில் இந்தியன் ரெட் கிராஸ் சொசைட்டி மற்றும் மாஸ் பாராமெடிக்கல் கல்லூரி சார்பில் மருத்துவ முகாம் மற்றும் அகர்வால் கண் மருத்துவமனை மூலம் கண் பரிசோதனை முகாம் நடைபெற்றது. இதில் மாவீரன் அழகு முத்துக்கோன் பண்பாட்டு இயக்கத்தைச் சார்ந்த சிவ சீத்தாராம், சுரேஷ், வைரமுத்து, ஐயப்பன், முத்துசெல்வம், முத்துக்காளை, கோகுலம் இவன்ட் கண்ணன், கோபி ஆகியோர் நிகழ்ச்சியை ஏற்பாடு செய்தனர்.கீழப்புலியூர் யாதவர் சமுதாய தலைவர்கள் மற்றும் பெரியோர் கலந்து கொண்டனர்.

## கோவில்பட்டி நேஷனல் பொறியியல் கல்லூரி தகவல் தொழில்நுட்ப கூட்டமைப்பின் துவக்க விழா



**கோவில்பட்டி, ஜூலை 13,**

நேஷனல் பொறியியல் கல்லூரியின் 2025-2026 கல்வியாண்டிற்கான தகவல் தொழில்நுட்ப துறை துவக்க விழா கல்லூரி வளாகத்தில் நடைபெற்றது. எம். பூஜா முத்துக்குமார், தரவு ஆய்வாளர், டெக்கியோன் இந்தியா பிரைவேட் லிமிடெட் சென்னை, சிறப்பு விருந்தினராக கலந்துகொண்டு இந்நிகழ்வை துவக்கி வைத்துப் பேசினார். அவர் தமது உரையில், மாணவர்கள் தங்கள் குறிக்கோள்களை அடைவதில் கவனமுடனும், தன்னம்பிக்கையுடனும், ஆர்வமுடனும், உறுதியாக இருக்கவேண்டும் என்று கூறினார். மேலும், தெளிவான பார்வை வேண்டும், கனவுகள் கொண்டு, அதனை நனவாக்க முயற்சி எடுக்க வேண்டும், கடுமையாக பணியாற்ற வேண்டும், மற்றும் எதையும் சந்திக்க துணிந்த மனப்பான்மையுடன் தளராமல் இருக்க வேண்டும் என்றும் மாணவர்களை ஊக்குவித்து பேசினார்.மேலும் இந்நிகழ்வில் 2024-2025-ஆம் கல்வியாண்டிற்கான செயல் திட்டங்களைப்பற்றி எடுத்துரைக்கப்பட்டது. மேலும், 2025-2026-ஆம் கல்வியாண்டில் நடைபெறவுள்ள செயற்திட்டங்கள் எடுத்துரைக்கப்பட்டது. மேலும், கூட்டமைப்பின் நிர்வாககுழு உறுப்பினர்களை அனைவருக்கும் அறிமுகம் செய்துவைக்கப்பட்டது.

கன்னியாகுமரி மாவட்டத்தில்

## செய்தி மக்கள் தொடர்பு துறை மின்னணு வாகனம் வாயிலாக உங்களுடன் ஸ்டாலின் முகாம் குறித்த விழிப்புணர்வு குறும்படம்

### கலெக்டர் ஆர்.அழகுமீனா பார்வையிட்டார்



**கன்னியாகுமரி ,ஜூலை.13-**

கன்னியாகுமரி மாவட்ட ஆட்சியர் அலுவலக குறள் கூட்டரங்கில் உங்களுடன் ஸ்டாலின் முகாம் குறித்து கலெக்டர் .ஆர்.அழகுமீனா,நடைபெற்ற செய்தியாளர்கள் சந்திப்பில், தெரிவிக்கையில் -

தமிழ்நாடு முதலமைச்சர் பொதுமக்களின் நலன் கருதி, தமிழ் நாட்டுக்குட்பட்ட அனைத்து மாவட்டங்களிலும் உள்ள பொதுமக்களின் கோரிக்கைகளுக்கு மிகுந்த முக்கியத்துவம் அளிக்கும் பொருட்டு, மக்களுடன் முதல்வர் திட்டத்தினை அறிவித்து, மிகச்சிறப்பாக செயல்படுத்தி வந்தார்கள்.

அதனைத்தொடர்ந்து மக்களின் குறைகளைத்தீர்க்க அவர்களின் பகுதிகளிலேயே நேரிடையாக சென்று முகாம்கள் நடத்தி கோரிக்கை மனுக்களை பெற, உங்களுடன் ஸ்டாலின் என்ற புதிய திட்டத்தினை வரும் 15ம் தேதி கடலூர் மாவட்டம் சிதம்பரத்தில் தமிழ்நாடு முதலமைச்சர் துவக்கி வைக்கவுள்ளார்கள். இத்திட்டத்தின் முக்கிய நோக்கம் கூலித்தொழில் செய்யும் ஏழை எளிய மக்களின் வசதிக்குகேற்ப அவர்களின் பகுதிகளுக்கு அருகாமையிலேயே தங்கள் குறைகளையும், கோரிக்கைகளையும், தேவைகளையும் மற்றும் நலத்திட்ட உதவிகள் பெறுவதற்கான விண்ணப்பங்கள் பூர்த்தி செய்து வழங்குவதற்கு ஏற்ற வகையில் உங்களுடன் ஸ்டாலின் திட்டம் வழிவகை செய்கிறது.

உங்களுடன் ஸ்டாலின் திட்டத்தின் கீழ் மாநகராட்சி, நகராட்சிகள், பேரூராட்சிகள் மற்றும் ஊராட்சிகள் பகுதிகளில் குடியிருக்கும் பொதுமக்களின் அருகாமையிலுள்ள சமுதாய நலக்கூடம் மற்றும் தனியார் மண்டபங்கள், பள்ளி கலை அரங்ககள் உள்ளிட்ட இடங்களில் வரும் 15 ம்தேதி தொடங்கி, தமிழ்நாடு முழுவதும் 'உங்களுடன் ஸ்டாலின்' முகாம்கள் நடத்தப்படும். தமிழ்நாட்டிற்குட்பட்ட நகரப்பகுதிகளில் 3,768 முகாம்களும், கிராமப்பகுதிகளில் 3,232 முகாம்கள் என்று மொத்தம் 10 ஆயிரம் முகாம்கள் நடைபெறும். உங்களுடன் ஸ்டாலின் முகாம்கள் நடைபெறும் அனைத்து இடங்களிலும், மருத்துவ முகாம்கள் நடைபெறும்.

அதனடிப்படையில் கன்னியாகுமரி மாவட்டத்தில் முதற்கட்டமாக ஊரக பகுதிகளில் 58 முகாம்களும், நகர்ப்புற பகுதிகளில் 56 முகாம்கள் என மொத்தம் 114 முகாம்கள் நடைபெறவுள்ளது. இரண்டாம் கட்ட முகாம்கள் 90 இடங்களிலும், மூன்றாவது கட்டமாக 84 இடங்களிலும், நான்காவது கட்டமாக 53 இடங்கள் என மொத்தம் 341 முகாம்கள் நடைபெறவுள்ளது.

இதில் ஊரகப்பகுதிகளில் 4,88,277 வீடுகளும், நகர்ப்புற பகுதிகளில் 2,26,695 வீடுகள் என மொத்தம் 7,14,972 வீடுகள் பயனடைவார்கள். முதற்கட்ட முகாம்களில் கலந்து கொள்வதற்கு ஊரகப்பகுதிகளில் 1,42,587 வீடுகளும், நகர்ப்புற பகுதிகளில் 76,793 வீடுகள் என மொத்தம் 2,19,380 வீடுகளுக்கு தன்னார்வலர்கள், சமுதாய வள பயிற்றுனர்கள், இல்லம்தேடி கல்வி பணியாளர்கள், சுயஉதவிகுழுவினர், நகர்புற களப்பணியாளர்கள் என 900க்கும் மேற்பட்ட களப்பணியாளர்கள் மாநராட்சிகள், அனைத்து நகராட்சிகள், பேரூராட்சிகள், ஊராட்சி பகுதிகளில் ஒவ்வொரு வீடுவீடாக நேரடியாக சென்று விண்ணப்ப படிவம், மடிப்பேடு, முகாம் நடைபெறும் நாள், இடம் குறித்த விவரங்கள் மற்றும் முகாம் நடைபெறும் நாளன்று முகாமிற்குச் சென்று தங்கள் விண்ணப்பத்தினை அளிக்கலாம் என்ற விவரத்தினை பொதுமக்களுக்கு தெரிவித்து, உங்களுடன் ஸ்டாலின் திட்ட விண்ணப்படிவங்கள் மற்றும் மடிப்பேடுகள் வழங்கப்பட்டு வருகிறது. இம்முகாம்களில் 13, 14 துறைகளின் கீழ் தாட்கோ கடன்கள், இ-பட்டா, பட்டாவில் பெயர் மாற்றம் மற்றும் திருத்தம், கல்வி உதவித்தொகை, தூய்மைப்பணியாளர்களுக்கான நலத்திட்டங்கள், டாம்கோ கடன், ரேசன் கார்டு பெயர் மாற்றம் மற்றும் விண்ணப்பித்தல், மின்சார இணைப்பு மாற்றம், பெயர் திருத்தம், முதலமைச்சரின் விரிவான காப்பீடு அட்டை, ஆதார் பெயர்மாற்றம், புதுப்பித்தல், விண்ணப்பதல் தொடர்பான, திட்ட ஒப்புதல், அண்ணல் அம்பேத்கர் தொழில் முனைவோர் திட்டம், வரி உரிமங்கள் மற்றும் அனுமதிகள், பிறப்பு இறப்பு சான்றிதழ்கள், காலியாக உள்ள நில வரி, தெருவோர விற்பனையாளர் அடையாள அட்டை, கழிவு நீர் இணைப்பு, சொத்துவரி, பெயர் மாற்றம், கட்டிடத் திட்ட ஒப்புதல், ஓய்வூதியம், தாமதமான பிறப்பு மற்றும் இறப்பு சான்றிதழ், பெண் குழந்தை பாதுகாப்பு திட்டம், மாற்றுத்திறனாளிகள் அடையாள அட்டை, மாற்றுத்திறனாளிகளுக்கான உதவிகள், உபகரணங்கள், பராமரிப்பு மானியங்கள், வீட்டுத்தோட்டத்தை மேம்படுத்துதல், மின் வாடகை, கால்நடை கோழி வளர்ப்பு, புதிய வீட்டு வரி, வீட்டு வரி பெயர் மாற்றம், குடிநீர் குழாய் இணைப்பு உள்ளிட்ட திட்டங்கள் மற்றும் சேவைகள் தொடர்பான மனுக்கள் பெறப்படும். இவ்வாறு கலெக்டர் .ஆர்.அழகுமீனா, தெரிவித்தார்கள். தொடர்ந்து கலெக்டர் .ஆர்.அழகுமீனா, மாவட்ட செய்தி மக்கள் தொடர்பு துறை அதிநவீன மின்னணு வாகனம் வாயிலாக பொதுமக்கள் உங்களுடன் ஸ்டாலின் முகாம் குறித்து அனைவரும் அறிந்து கொள்ளும் வகையில் வெளியிடப்பட்ட விழிப்புணர்வு குறும்படத்தினை பார்வையிட்டார்கள்.

இதில் மாவட்ட செய்தி மக்கள் தொடர்பு அலுவலர் பா.ஜாண்ஜெகத் பிரைட், உதவி மக்கள் தொடர்பு அலுவலர் (செய்தி) .செல்வலெட் சுஷ்மா, உசூர் மேலாளர் சுப்பிரமணியம், உட்பட பலர் கலந்து கொண்டார்கள்.

சங்கரன்கோவிலில்

## அழகுமுத்துக்கோன் பிறந்த நாள்: ராஜா எம்எல்ஏ மாலை அணிவித்து மரியாதை



**சங்கரன்கோவில்.ஜூலை.13.**

தென்காசி மாவட்டம் சங்கரன்கோவிலில் வட்டார யாதவ சமுதாய அபிவிருத்தி சங்கம் சார்பில் சங்கரன்கோவில் பேருந்து நிலையம் அருகே சுதந்திரப் போராட்ட வீரர் மன்னர் அழகுமுத்துக்கோன் பிறந்த நாளை முன்னிட்டு அவரது படத்திற்கு மாலை அணிவித்து மரியாதை செலுத்தும் நிகழ்ச்சி நடந்தது.

நிகழ்ச்சிக்கு வட்டார யாதவ சமுதாய அபிவிருத்தி சங்க தலைவர் முருகன் தலைமை வகித்தார். செயலாளர் செல்லத்துரை, பொருளாளர் திருமலைசாமி முன்னிலை வகித்தனர்.

இதில் தென்காசி வடக்கு மாவட்ட திமுக செயலாளர் ராஜா எம்எல்ஏ கலந்துகொண்டு அலங்கரித்து வைக்கப்பட்டிருந்த அழகு முத்துக்கோன் படத்திற்கு மாலை அணிவித்து மரியாதை செலுத்தினார். இதில் மாவட்ட அவை தலைவர் சுப்பையா தலைமை செயற்குழு உறுப்பினர் யூஎஸ்டி சீனிவாசன், மாநில மருத்துவர் அணி துணைச் செயலாளர் செண்பக விநாயகம், மாவட்ட துணை செயலாளர் புனிதா, மதிமுக மாநில இளைஞர் அணி துணை செயலாளர் இசக்கியப்பன், திமுக ஒன்றிய செயலாளர்கள் லாலா சங்கர பாண்டியன், கடற்கரை, சேர்மத்துரை, கிறிஸ்டோபர், பெரியதுரை, பால்ராஜ்,வெள்ளத்துரை, அன்பரசு,நகர செயலாளர்கள் சங்கரன்கோவில் பிரகாஷ், புளியங்குடி கிழக்கு அந்தோணிசாமி, பொதுக்குழு உறுப்பினர் தேவா என்ற தேவதாஸ்,மாவட்ட அணி அமைப்பாளர்கள் இளைஞரணி முகேஷ், மாணவரணி உதயகுமார், இலக்கிய அணி குருவசந்த், நெசவாளர் அணி சந்திரன், மாவட்ட பிரதிநிதி முத்துக்குமார், மாவட்ட சார்பு அணி துணை அமைப்பாளர்கள் சுற்றுச்சூழல் அணி ஜலால், மாணவரணி வீரமணி, விவசாய தொழிலாளர் அணி முருகராஜ், இளைஞரணி ராஜராஜன், கார்த்தி , புலியூர் கணேசன், தொண்டரணி ராஜவேல் ரத்தினம், ஐ டி விங்க் சிவாஜி, மின்வாரிய தொமுச திட்ட செயலாளர் மகாராஜன், தொமுச சரவணமுருகையா, முன்னாள் மாவட்ட வர்த்தக அணி அமைப்பாளர் பத்மநாபன், நகர அவை தலைவர் முப்பிடாதி, நகர துணைச் செயலாளர்கள் முத்துக்குமார், சுப்புத்தாய், நகர இளைஞரணி சதீஷ், ஜான்சன், வார்டு செயலாளர்கள் வாழைக்காய் துரைபாண்டியன், வெள்ளத்துரை, பஞ்சாயத்து தலைவர் கணேசன் மற்றும் அஜய்மகேஷ்குமார், ஜெயக்குமார், பாலாஜி, மாரியப்பன், கார்த்தி, கருப்பசாமி, சீனி உள்ளிட்ட பலர் கலந்து கொண்டனர்.

கடையநல்லூர் நகராட்சி பகுதியில்

## உங்களுடன் ஸ்டாலின் சிறப்பு திட்ட முகாம்: நகர் மன்ற தலைவர் மூப்பன் ஹபீபுர் ரஹ்மான் தகவல் கையேட்டினை வழங்கினார்



**கடையநல்லூர் ஜூலை..13:**

கடையநல்லூர் நகராட்சி பகுதியில் இம்மாதம் 18ம் தேதி நடைபெறும் உங்களுடன் ஸ்டாலின் சிறப்பு திட்ட முகாமிற்கான விண்ணப்ப படிவங்கள் மற்றும் தகவல் கையேட்டினை நகர் மன்ற தலைவர் மூப்பன் ஹபீபுர் ரஹ்மான் வீடு வீடாக சென்று பொதுமக்களுக்கு வழங்கி துவக்கி வைத்தார்.

கடையநல்லூர் நகராட்சி பகுதியில் உள்ள வார்டு 1 முதல் 33 வரையிலான வார்டுகளில் உங்களுடன் ஸ்டாலின் சிறப்பு முகாம் இம்மாதம் 18.07.2025 முதல் அக்டோபர் மாதம் 23.10.2025 வரை நடத்த தென்காசி மாவட்ட கலெக்டரால் உத்தரவிடப்பட்டுள்ளது. இந்த உங்களுடன் ஸ்டாலின் முகாமில் சம்பந்தப்பட்ட வார்டுகளில் உள்ள பொதுமக்களிடமிருந்து நகர்ப்புற உள்ளட்சி அமைப்புகளின் சேவைகள் சொத்துவரி, காலியிட வரிவிதிப்பு, தொழில்வரி விதிப்பு, சொத்துவரி பெயர்மாற்றம், குடிநீர் பாதாள சாக்கடை இணைப்பு, வர்த்தக உரிமம், பிறப்பு இறப்பு சான்று வழங்கல் திருத்தங்கள், கட்டிட அனுமதி, தெருவோர வியாபாரிகள் நலத்திட்டம் போன்ற திட்டங்களில் விண்ணப்பங்கள் பெறவும் மேலும், கூடுதலாக 12 துறைகளின் சேவைகளுக்கான விண்ணப்பங்கள் பெறப்பட உள்ளது. 18ம் தேதி 11, 13, 18 வது வார்டுகளுக்கு, 31ம் தேதி 19, 20வது வார்டுகளுக்கு பேட்டை மலம்பாட்டை தெரு ஜலாலியா திருமண மண்டபத்தில் வைத்தும், ஆகஸ்ட் மாதம் 12ம் தேதி 1, 2, 3, வார்டுகளுக்கு

கிருஷ்ணாபுரம் மேற்கு மலம்பாட்டை தெரு சீதாலட்சுமி திருமண மண்டபத்தில் வைத்தும், ஆகஸ்ட் மாதம் 26ம் தேதி 5 மற்று 6வது வார்டுகளுக்கு மறவர் மஹாலில் வைத்தும், செப்டம்பர் மாதம் 6ம் தேதி 29, 30, 31 மற்றும் 32வது வார்டுகளுக்கு மேலக்கடையநல்லூர் பண்பொழி ரோடு நாகம்மாள் திருமண மண்டபத்தில் வைத்தும், செப்டம்பர் மாதம் 20ம் தேதி 4,14,15 வது வார்டுகளுக்கும், செப்டம்பர் மாதம் 25ம் தேதி 21, 22, 23 வார்டுகளுக்கும், அக்டோபர் மாதம் 8ம் தேதி 16 மற்றும் 17வது வார்டுகளுக்கும் அக்டோபர் மாதம் 10ம் தேதி 24, 25 மற்றும் 33வது வார்டுகளுக்கும் முத்துகிருஷ்ணாபுரம் சேனைத்தலைவர் திருமண மண்டபத்தில் வைத்தும், அக்டோபர் மாதம் 14ம் தேதி 7, 8, 9 வது வார்டுகளுக்கும், அக்டோபர் மாதம் 16ம் தேதி 10 மற்றும் 12வது வார்டுகளுக்கு மறவர் சமுதாய நலக்கூடத்தில் வைத்தும், அக்டோபர் மாதம் 23ம் தேதி 26, 27 மற்றும் 28வது வார்டு மேலக்கடையநல்லூர் சேனைத்தலைவர் திருமண மண்டபத்தில் வைத்தும் நடக்கிறது. இது குறித்து பொதுமக்களிடம் விழிப்புணர்வை ஏற்படுத்தும் விதமாக நகர் மன்ற தலைவர் மூப்பன் ஹபீபுர் ரஹ்மான் 11வது வார்டில் வீடு வீடாக சென்று முகாமிற்கான விண்ணப்ப படிவங்களை வழங்கி இந்த சிறப்பு முகாமில் பொதுமக்கள் அனைவரும் பங்கேற்று பயனடையுமாறு கேட்டுக் கொண்டுள்ளார். நிகழ்ச்சியில் நகராட்சி ஆணையாளர் ரவிச்சந்திரன், சுகாதார ஆய்வாளர் சிவா, மேற்பார்வையாளர் சாகுல் ஹமீது, நகர திமுக, சிறுபான்மையினர் நலப்பிரிவு அமைப்பாளர் வகாப், மீராசா, ஹபிபுல்லா, மீராள்கைதர், ஜபருல்லா மற்றும் இந்திய யூனியன் முஸ்லிம் லீக் நிர்வாகிகள் உட்பட பலர் கலந்து கொண்டனர்.



செங்கோட்டை ஒன்றியம் அச்சன்புதூர் பேரூர் பாக எண் 129 பகுதியில் தெற்கு மாவட்ட செயலாளர் வே.ஜெயபாலன் ஓரணியில் தமிழ்நாடு உறுப்பினர் சேர்க்கை பணியினை ஆய்வு செய்தார். உடன் பேரூர் செயலாளர் வெள்ளத்துரை,ஒன்றிய துணை செயலாளர் வாசுதேவன், மாவட்ட இளைஞரணி அமைப்பாளர் டி.ஆர் கிருஷ்ணராஜா, தகவல் தொழில் நுட்ப அணி அழகு தமிழ் சங்கர்கலந்து கொண்டனர்.

## சுரண்டை ராஜேந்திரா விஸ்டம் பள்ளியில் எண்கள் தின விழா



**சுரண்டை ஜூலை..13:**

சுரண்டை இராஜேந்திரா விஸ்டம் பள்ளியில் எண்கள் தின விழா நடைபெற்றது. குழல்வாய்மொழி அம்மாள் சிவன் நாடார் அறக்கட்டளை நிறுவனத்தின் நிறுவனர் சிவபபிஸ்ராம், பள்ளியின் செயலர் சிவ டிப்ஜினிஸ் ராம், முதல்வர்கள் பொன் மனோன்யா, புஷ்பா மற்றும் தலைமை ஆசிரியர் முருகராஜன் ஆகியோர் தலைமை வகித்தனர். மாணவர்கள் அனைவரும் நீல நிற ஆடை அணிந்து வந்தனர். எண் விளையாட்டுகள் விளையாடி மகிழ்ந்தனர். எண்களைப் பற்றியும் எண்களால் உருவாக்கப்பட்ட படங்களைப் பற்றியும் தெரிந்து கொண்டனர். ஆசிரியர்கள் ஈஸ்வரி மற்றும் அபினா விழாவை ஒருங்கிணைந்து நடத்தினர்.



சென்னை வில்லிவாக்கம் சிவசக்தி நகரில் வடசென்னை வளர்ச்சி திட்டத்தின்கீழ் சி.எம்.டி.ஏ. சார்பில் கட்டடப்பட்டு வரும் கொளத்தூர் வண்ண மீன்கள் வர்த்தக மைய கட்டிடத்தின் முன்னேற்றப் பணிகளை மீன்வளம், மீனவர் நலத்துறை மற்றும் கால்நடை பராமரிப்புத்துறை அமைச்சர்அனிதா ஆர்.ராதாகிருஷ்ணன் மற்றும் இந்து சமய அறநிலையத்துறை அமைச்சரும் சென்னை பெருநகர் வளர்ச்சிக்குழுமத் தலைவருமான பி.கே.சேகர்பாபு ஆகியோர் நேரில் சென்று பார்வையிட்டு ஆய்வு செய்தனர்.

# திருச்செந்தூர் சுப்பிரமணிய சுவாமி கோயிலில் மகாராஷ்டிர ஆளுநர் சி.பி.ராதாகிருஷ்ணன் தரிசனம்



திருச்செந்தூர் ஜூலை.13-

திருச்செந்தூர் அருள்மிகு சுப்பிரமணிய சுவாமி திருக்கோயிலில் மகாராஷ்டிர ஆளுநர் சி.பி. ராதாகிருஷ்ணன் சுவாமி தரிசனம் செய்தார்.

திருச்செந்தூர் அருள்மிகு சுப்பிரமணிய சுவாமி கோயிலுக்கு வந்த அவரை, கோட்டாட்சியர் சுகுமாறன், டிஎஸ்பி மகேஷ்குமார், கோயில் நிர்வாகத்தினர் ஆகியோர் வரவேற்றனர். தொடர்ந்து அவர் கோயிலுக்குள் சென்று சுவாமி தரிசனம் செய்தார்.

பின்னர், கோயில் விருந்தினர் மாளிகையில் செய்தியாளர்களிடம் ஆளுநர் கூறியதாவது: திருச்செந்தூர் சுப்பிரமணிய சுவாமி திருக்கோயில் குடமுழுக்கு விழாவில் லட்சக்கணக்கான பக்தர்கள் கலந்து கொண்டனர்.

தமிழக அரசு அதிக சிரத்தை எடுத்து குடமுழுக்கை நடத்தி இருக்கிறார்கள். கடவுள் இல்லை என்று சொனனவர்கள் கூட கடவுளை வணங்கும் சூழல் ஏற்பட்டுள்ளது என்றார்.

அப்போது, தமிழக பாஜக தலைவர் நயினார் நாகேந்திரன் எம்எல்ஏ, மாவட்டத் தலைவர்கள் முத்துபலவேசம் (திருநெல்வேலி), தூத்துக்குடி தெற்கு சித்ராங்கதன், நவமணிகண்டன், திருச்செந்தூர் நகரத் தலைவர் செல்வகுமரன், நகரப் பொருளாளர் பலவேச கண்ணன், நிர்வாகிகள் வினோத் சுப்பையன், முன்னாள் கவுன்சிலர் செந்தில்குமார் உள்ளிட்டோர் உடனிருந்தனர்.

## சூப்பர் மார்க்கெட்டில் ரூ.1.50 லட்சம் திருட்டு: சேல்ஸ்மேன் கைது

சென்னை ஜூலை 13-

ஆதம்பாக்கம் மேடவாக்கம் பிரதான சாலையில் சூப்பர் மார்க்கெட் இயங்கி வருகிறது. இங்கு நேற்று முன்தினம் காலை இந்த சூப்பர் மார்க்கெட்டின் கேஷியர் கடையை திறக்க வந்த போது, ஷட்டரின் பூட்டு உடைக்கப்பட்டு இருந்தது. இதுகுறித்து சூப்பர் மார்க்கெட் உரிமையாளர் லட்சுமி குமாருக்கு தகவல் தெரிவித்தார். அவர் விரைந்து வந்து பார்த்தபோது, கல்லாப்பெட்டியில் இருந்த ரூ.1.50 லட்சம் திருரு போனது தெரிந்தது. இதுகுறித்து ஆதம்பாக்கம் காவல் நிலையத்தில் புகார் அளித்தார். அதன் அடிப்படையில் போலீசார் சம்பவ இடத்துக்கு விரைந்து வந்து அங்குள்ள சிசிடிவி கேமரா காட்சிகளை ஆய்வு செய்தனர். அதில், அந்த கடையில் சேல்ஸ்மேனாக வேலை பார்க்கும் ஆதம்பாக்கம், ஏரிக்கரை தெருவை சேர்ந்த ராஜா மாரிமுத்து தினேஷ் (27), என்பவர் ஷட்டரின் பூட்டை உடைத்து உள்ளே புகுந்து பணத்தை திருடியது தெரியவந்தது. இதனை அடுத்து போலீசார் செல்போன் டவர் சிக்னல் மூலமாக பூந்தமல்லியில் பதுங்கி இருந்த ராஜா மாரிமுத்து தினேஷை கைது செய்து ஆலந்தூர் நீதிமன்றத்தில் ஆஜர்படுத்தி சிறையில் அடைத்தனர்.

# வடசென்னை வளர்ச்சித் திட்டத்தின் கீழ் கட்டப்பட்டு வரும் கொளத்தூர் வண்ண மீன்கள் வர்த்தக மையத்தின் முன்னேற்றப் பணிகள்

### அமைச்சர்கள் பி.கே.சேகர்பாபு, அனிதா ஆர்.ராதாகிருஷ்ணன் நேரில் ஆய்வு

சென்னைஜூலை.13

சென்னை, வில்லிவாக்கம், சிவசக்தி நகரில், வடசென்னை வளர்ச்சி திட்டத்தின் கீழ் சி.எம்.டி.ஏ. சார்பில் கட்டப்பட்டு வரும் கொளத்தூர் வண்ண மீன்கள் வர்த்தக மையத்தின் முன்னேற்றப் பணிகளை மீன்வளம், மீனவர் நலத்துறை மற்றும் கால்நடை பராமரிப்புத்துறை அமைச்சர்அனிதா ஆர்.ராதாகிருஷ்ணன் மற்றும் இந்து சமய அறநிலையத்துறை அமைச்சரும் சென்னை பெருநகர் வளர்ச்சிக்குழுமத் தலைவருமானபி.கே.சேகர்பாபு ஆகியோர் நேரில் சென்று பார்வையிட்டு ஆய்வு செய்து, பணிகளை விரைந்து முடித்திட பொறியாளர்கள் மற்றும் ஒப்பந்தாரர்களை அறிவுறுத்தினர்.

இதனைத் தொடர்ந்து சிஎம்டிஏ சார்பில் வேளச்சேரி சட்டமன்ற தொகுதியில், திருவான்மியூர் பேருந்து நிலையம், அடையாரில் உள்ள இந்திராநகர் மற்றும் காந்தி நகர் ஆகிய 2 நூலகங்களை "முதல்வர் படைப்பகம்" அமைப்பதற்கான பணிகள் தொடங்கி வைக்கப்பட்டது.

இந்நிகழ்ச்சிகளில் வில்லிவாக்கம் சட்டமன்ற உறுப்பினர்.வெற்றி அழகன், வீட்டு வசதி மற்றும் நகர்ப்புற வளர்ச்சித்துறை கூடுதல் தலைமைச் செயலாளர்காகர்லா உஷா, , சி.எம்.டி.ஏ. உறுப்பினர் செயலர்/முதன்மைச் செயலாளர்கோ.பிரகாஷ், , கால்நடை பராமரிப்பு, பால்வளம், மீன்வளம் மற்றும் மீனவர் நலத்துறை செயலாளர் டாக்டர் ந.சுப்பையன், மாநகராட்சி மத்திய வட்டார துணை ஆணையாளர்திரு.எச்.ஆர்.கௌஷிக், மாநகர போக்குவரத்து கழக மேலாண்மை இயக்குநர் டாக்டர் த.பிரபுசங்கர், சிஎம்டிஏ தலைமைத் திட்ட அமைப்பாளர்எஸ்.ருத்ரமூர்த்தி, தலைமைப் பொறியாளர்மகாவிஷ்ணு, கண்காணிப்புப் பொறியாளர்.ராஜமகேஷ்குமார், செயற்பொறியாளர்விஜயகுமாரி, மண்டலக் குழுத்தலைவர்கூ.பீ.ஜெயின், துணை இயக்குநர் (பொது நூலகம்) .தனலஷ்மி, மாநகராட்சி மண்டல அலுவலர்சுந்தர்ராஜன், மாமன்ற உறுப்பினர்சுதா தீனதயாளன் மற்றும் துறைச் சார்ந்த அலுவலர்கள் உடனிருந்தனர்.



ஓரணியில் தமிழ்நாடு என்ற செயல்பாட்டை திருவொற்றியூர் மண்டலம் 6வது வட்டத்தில் உள்ள 18 பாகங்களில் வட்ட செயலாளர் கி.கண்ணன் தலைமையில் மாவட்ட பிரதிநிதி எஸ்.கணேஷ் முன்னிலையில் வீடு வீடாக சென்று திமுக உறுப்பினர் சேர்க்கைமுகாமில் ஈடுபட்டனர். இவர்களுடன் வட்ட நிர்வாகிகள் முரசொலிகுமரேசன் உதயகுமார் சேகர் ரவி பாலசுப்பிரமணியம் வினோத் பாலமுருகன் லோகநாதன் வேணுகோபால் மற்றும் மகளிர் அணி நிர்வாகிகள் உடன் இருந்தனர்.




# மருத்துவ கல்லூரி படிப்பிற்கு இடம் வாங்கித் தருவதாக மோசடி: இருவருக்கு 2 ஆண்டுகள் கடுங்காவல் தண்டனை

சென்னை ஜூலை 13-

சென்னை, நுங்கம்பாக்கம் பகுதியைச் சேர்ந்த டாக்டர் எம்.ஏ. நிசார் அகமது என்பவரின் மகளுக்கு மருத்துவ படிப்பிற்கான சேர்க்கை பெற்றுத் தருவதாக ஆசை வார்த்தைக் கூறி கடந்த மே 2014 ஆம் ஆண்டு அரசு துணை செயலராக பணியாற்றிய மோகன் ராஜ் (ஓய்வு) மற்றும் தர்மபுரியைச் சேர்ந்த செல்வகுமார் ஆகியோர் ரூ.50 லட்சத்தை பல்வேறு தவணைகளில் பெற்று, மருத்துவ படிப்புச் சேர்க்கைக்கு ஏற்பாடு செய்யாமல் ஏமாற்றியதுடன், பணத்தை திருப்பி கேட்ட புகார்தாரரிடம் பணமில்லாத வங்கி கணக்கின் ரூ.25 லட்சம் மதிப்புள்ள இரண்டு காசோலைகளை கொடுத்து ஏமாற்றியதாக டாக்டர் எம்.ஏ. நிசார் அகமது என்பவர் கொடுத்த புகாரின் பேரில், கடந்த 15.04.2015 அன்று, சென்னை மத்திய குற்றப்பிரிவு, பிரிவில் வழக்கு பதிவு செய்து, விசாரணை மேற்கொள்ளப்பட்டது.

**தேடுதல்**

மேற்படி வழக்கில் மத்திய குற்றப்பிரிவு ஆய்வாளர்கள் தலைமையிலான காவல் குழுவினர், தீவிர தேடுதலில் ஈடுபட்டு, எதிரி 1.மோகன் ராஜ், என்பவர் கடந்த 12.03.2019 அன்று கைது செய்து நீதிமன்ற காவலுக்கு உட்படுத்தப்பட்டும், எதிரி 2.செல்வகுமார், என்பவர் நீதிமன்றத்தில் முன்ஜாமின் பெற்ற நிலையில், எழும்பூர் நீதிமன்ற வளாகத்தில் உள்ள வழக்குகளுக்கான பெருநகர குற்றவியல் நடுவர் நீதிமன்றத்தில் கடந்த 02.01.2020 அன்று குற்றப்பத்திரிக்கை தாக்கல் செய்யப்பட்டு, விசாரணை நடைபெற்று வந்த நிலையில், நீதிமன்ற விசாரணை முடிந்து, இருவரும் குற்றவாளிகள் என நீதிமன்றம் தீர்ப்பு வழங்கியது.

குற்றவாளிகள் மோகன் ராஜ் மற்றும் செல்வகுமார் ஆகிய இருவருக்கும் தலா இரண்டு ஆண்டுகள் கடுங்காவல் தண்டனையும் மற்றும் தலா ரூ.6000/- அபராதமும், அபராதம் கட்ட தவறினால் மேலும் 3 மாதங்கள் கடுங்காவல் சிறை தண்டனை விதித்ததுடன், மோசடி தொகை ரூ.50 லட்சத்தை மோகன்ராஜ் செலுத்த வேண்டும் என்றும், தவறும் பட்சத்தில் அவருடைய சொத்துக்களை பறிமுதல் செய்யவும் கனம்வழக்குகளுக்கான பெருநகர குற்றவியல் நடுவர் நீதிமன்ற நீதிபதி அவர்கள் உத்தரவிட்டார்.

**பாராட்டு**

முறையான விசாரணை மேற்கொண்டு, எதிரிகள் மீது குற்றப்பத்திரிகை தாக்கல் செய்து, நீதிமன்ற நடவடிக்கைகளை தொடர்ச்சியாக கண்காணித்து சாட்சிகளை ஆஜர்படுத்தி, எதிரிகளுக்கு நீதிமன்ற தண்டனை பெற்று தந்த மத்திய குற்றப்பிரிவு, பிரிவு ஆய்வாளர் மற்றும் நீதிமன்ற அலுவல் காவல் ஆளிநர்களை உயர் அதிகாரிகள் வெகுவாக பாராட்டினர்.

**வாகனங்கள் ஓட்டும் போது செல்போன் பேசாதே... பேசுவது எமனாக இருக்கலாம்**

# ட்ரஷர் ஐலண்ட் பள்ளியில் மொபைல் பயன்பாடு குறித்து விழிப்புணர்வு




செங்கோட்டை ஜூலை.13:

எல்லா மாணவர்களுக்கும் சிறப்பாக வளமான வாழ்க்கையை உருவாக்கும் நோக்கில், ட்ரஷர் ஐலண்ட் பள்ளியில் மொபைல் பயன்பாடு குறித்து ஒரு விழிப்புணர்வு நிகழ்ச்சி சிறுவர்களுக்காக ஏற்பாடு செய்யப்பட்டது.

இந்த நிகழ்ச்சி கேஜி, முதல் மற்றும் இரண்டாம் வகுப்பு மாணவர்களுக்காக எளிய, விளையாட்டுத்தன்மை உள்ள முறையில் மிகச்சிறப்பாக நடத்தப்பட்டது.

ஆசிரியர்கள் நடத்திய பொம்மை நாடகம் மற்றும் நகைச்சுவையான குறுநாடகம் மூலம் அதிக நேரம் மொபைல் பயன்படுத்துவதால் ஏற்படும் தீமைகள், வெளியே விளையாடும் மகிழ்ச்சி மற்றும் பெற்றோர்களுடன் நேரம் செலவிடும் முக்கியத்துவம் பற்றி மாணவர்கள் அறிந்தனர். பள்ளி தாளாளர் டாக்டர். ஷேக் செய்யது அலி நிகழ்ச்சியில் உரையாற்றிய போது "இன்றைய குழந்தைகள் நவீன உலகத்தில் வளர்ந்து வருகின்றனர். அவர்களுக்கு சிறப்பான வழிகாட்டல் நம்மிடமிருந்தே தொடங்க வேண்டும். இந்நிகழ்ச்சி, எதிர்கால வாழ்க்கையை சீரானதாக மாற்றும் ஒரு சிறந்த முயற்சி." என்று கூறினார். முதல்வர் சமீமா பர்வீன் குழந்தைகளுக்கு மொபைல் போன் உபயோகப்படுத்துவதற்கு பதிலாக விளையாடுவது எவ்வளவு நலமானது என குழந்தைகளுக்கு எடுத்துரைத்தார்.

மாணவர்கள் உற்சாகமாக பங்கேற்று , நிகழ்ச்சியை கண்டுகளித்தனர். விழிப்புணர்வும் மகிழ்ச்சியும் ஒரே நேரத்தில் ஏற்பட்ட ஒரு நிகழ்வாக அமைந்தது.

**தின பூமி நாளிதழில் விளம்பரம் செய்து பயன் பெறுங்கள்**

குற்றாலத்தில்

# எக்ஸ்னோரா சார்பில் மரக்கன்றுகள் வழங்கல்



தென்காசி, ஜூலை - 13:

தென்காசி மாவட்ட எக்ஸ்னோரா சார்பில் குற்றாலம் வருகை தரும் சுற்றுலா பயணிகளுக்கு மரக்கன்றுகள் வழங்கும் நிகழ்ச்சி நடைபெற்றது.

குற்றாலத்தில் சீசன் களை கட்டியுள்ள நிலையில் குற்றாலத்திற்கு வருகை தரும் சுற்றுலாப் பயணிகளுக்கு தென்காசி மாவட்ட எக்ஸ்னோரா அமைப்பின் சார்பில் மரக்கன்றுகள் வழங்கும் நிகழ்ச்சி நடைபெற்றது. இந்த நிகழ்ச்சிக்கு தென்காசி மாவட்ட எக்ஸ்னோரா செயலாளர் சங்கர நாராயணன் தலைமை தாங்கினார். குற்றாலம் ஐ.ஓ.பி வங்கியின் மேலாளர் உமாதேவி சிறப்பு விருந்தினராக கலந்து கொண்டு குற்றாலம் வருகை தந்த சுற்றுலா பயணிகளுக்கு மரக்கன்றுகள் வழங்கினார். இந்த நிகழ்ச்சியில் 300 க்கும் அதிகமான சுற்றுலாப் பயணிகளுக்கு மரக்கன்றுகள் வழங்கப்பட்டது. இந்த நிகழ்ச்சிக்கான ஏற்பாடுகளை தென்காசி மாவட்ட எக்ஸ்னோரா நிர்வாகிகள் ராசி சுரேஷ் முருகையா, துரை மீனாட்சி நாதன் ஆகியோர் செய்திருந்தனர். முடிவில் தென்காசி சிட்டி எக்ஸ்னோரா தலைவர் சீனிவாசன் அனைவருக்கும் நன்றி கூறினார்.

---

கனம் முதன்மை மாவட்ட உரிமையியல் நீதிமன்றம்
சங்கரன்கோவில்
ஓ.எஸ்.எண். 415/2015

1. துரைச்சி
2. பசும்பொன் குமரன்
3. மகேஷ்பூபதி
4. அசோக்குமார்
5. வினோத்குமார்
6. மகாலட்சுமி

வாதிகள்

எதிர்

மஞ்சு

8ம பிரதிவாதி

இந்த வாதிகள் விளம்புகை மற்றும் நிரந்தர ஏவுகட்டளை பரிகாரம் கோரி மேற்படி நீதிமன்றத்தில் வழக்கு தாக்கல் செய்து மேலே கண்ட 8ம் பிரதிவாதி ஆகிய தாங்கள் சமூக மன்றத்தில் ஆஜராவதற்கு வருகிற 17.07.2025-ம் தேதியன்று வாய்தா போடப்பட்டுள்ளது அன்று காலை 10 மணிக்கு நேரிலோ அல்லது வழக்குரைஞர் மூலமாகவோ ஆஜராக வேண்டியது. தவறும் பட்சத்தில் ஷை நிர் வழக்கில் ஒருதலைபட்சமாக தீர்ப்பாகிவிடும் என்பதை இதன்மூலம் அறிவிக்கப்படுகிறது.

கோர்ட் உத்தரவுப்படி
எஸ். புஷ்பராஜ்., எம்.ஏ.பி.எல்.,
எஸ்.மாதவராம்., பி.எஸ்ஸி.,பி.எல்., வழக்கறிஞர்கள்,
சங்கரன்கோவில்.

---

கனம் முதன்மை சார்பு நீதிமன்றம்
தென்காசி
நிறைவேறுதல் மனு எண்.6/2024
இன்
அசல் வழக்கு எண்.421/2022

வசிமா பேகம்
க/பெ.அப்துல் காதர் ஜெய்லானி,
க.எண்.49, இரசாலியாபுரம் தெரு,
கடையநல்லூர், கடையநல்லூர் தாலுகா, தென்காசி மாவட்டம்

... மனுதார் / வாதி

- எதிர் -

அப்துல் வஹாப்,
த/பெ.சாகுல் ஹமீது,
க.எண்.194ஏ/31, அல்அமீன் தெரு,
மதினா நகர், கடையநல்லூர் டவுண்,
கடையநல்லூர் தாலுகா,
தென்காசி மாவட்டம்

... எதிர்மனுதார் / பிரதிவாதி

மேற்படி மனுதார் / வாதி பக்கம்
அறிவிப்பு

ஷை எண் நிறைவேறுதல் மனுவில் மேற்படி எதிர்மனுதார் / பிரதிவாதிக்கு தெரிவிப்பது என்னவென்றால் ஷை நிறைவேறுதல் மனுவில் ஷை நீதிமன்றத்தில் ஆஜர் ஆக வேண்டி 29.07.2025 அன்று வாய்தா போடப்பட்டுள்ளது. ஷை நிறைவேறுதல் மனுவில் ஆட்சேபணை ஏதும் இருந்தால் ஷை தேதியன்று காலை 10 மணிக்கு ஷை நீதிமன்றத்தில் அழைக்கும் போது நேரிலோ, வழக்கறிஞர் மூலமோ ஆஜராகி தெரிவித்துக் கொள்ளவும். தவறினால் மேற்படி எதிர்மனுதார் / பிரதிவாதிக்கு எதிராக நிறைவேறுதல் மனுவானது ஒருதலைபட்சமாக தீர்மானிக்கப்படும் என்பதை அறியவும்.

// நீதிமன்ற உத்திரவுப்படி //
ஆர்.மாடக்கண் B.A.L.,L.L.B.,
எஸ்.மஞ்சுகிருஷ்ணா B.A..,B.L.,
வழக்கறிஞர்கள், தென்காசி

---

கனம் கோட்டாட்சியர் நீதிமன்றம்,
சங்கரன்கோவில்,
அ.தி.மு.ஆ1/115/2025

க. செல்வி,
க.பெ. கனகராஜ் பாண்டியன்,
க.எண். 99A6, மேலப்பொட்டல் தெரு, கீழப்புதூர்,
நெல்கட்டும்செவல் கிராமம்,
சிவகிரி வட்டம்.

மனுதார்,

1. வட்டாட்சியர், சிவகிரி,
2. சார் பதிவாளர், வாசுதேவநல்லூர்,

எதிர்மனுதாரர்,

அறிவிப்பு

எனது மகன் வினித் குமார் , த.பெ. கனகராஜ் பாண்டியன் என்பவர் கடந்த 27.09.2010 அன்று மேற்படி முகவரியில் வைத்து பிறந்ததை எதிர்மனுதாரரின் பிறப்பு பதிவேட்டில் பதிவு செய்ய வேண்டி மேற்படி நீதிமன்றத்தில் மனுதாக்கல் செய்துள்ளேன். அம்மனு மீது யாருக்கேனும் ஆட்சேபணை இருந்தால் இந்த அறிவிப்பு கண்ட 30 தினங்களுக்குள் மேற்படி கோட்டாட்சியர் நீதிமன்றத்தில் நேரில் ஆஜராகி தங்கள் ஆட்சேபனையை தெரிவித்து கொள்ள வேண்டும் என இதன் மூலம் அறிவிக்கப்படுகிறது.

க. செல்வி,
கீழப்புதூர்.

---

சார்பு நீதிமன்றம்,
சங்கரன்கோவில்.
வ.வி.எண். 6/2024 இன்
அ.வ.எண்: 119/2014

மாரியப்பன்

மனுதார்/வாதி

எதிர்

1.ருக்குமணி
த/பெ.லேட்.பரமசிவன் செட்டியார்,
புதுமனை 3ம் தெரு,
சங்கரன்கோவில் டவுண்,,
தென்காசி மாவட்டம்.
2. வரலட்சுமி,
த/பெ.லேட்.பரமசிவன் செட்டியார்,
ஷை முகவரி

2, 3 எதிர்மனுதார்கள்/
2, 3 பிரதிவாதிகள்

அறிவிப்பு

மேற்படி மனுதார் 2, 3 எதிர்மனுதார்கள் மீது சமூகமன்றத்தில் பாகப்பிரிவினை பரிகாரம் கோரி சமூகமன்றத்தில் இந்த நிர் வழக்கை தாக்கல் செய்து 2, 3 எதிர்மனுதார்களாகிய தாங்கள் இந்த நிர் வழக்கில் சமூகமன்றத்தில் ஆஜராகும் பொருட்டு 11.08.2025 தேதியில் வாய்தா ஏற்பட்டுள்ளது. எனவே, 2, 3 எதிர்மனுதார்களாகிய தாங்கள் 11.08.2025 தேதியில் காலை 10.30 மணியளவில் சமூகமன்றத்தில் நேரடியாகவோ, அல்லது வழக்கறிஞர் மூலமாகவோ ஆஜராகி, தங்கள் தரப்பு ஆட்சேபணையை தெரிவித்து போக வேண்டியது. தவறினால் தங்களுக்கு எதிராக ஒருதலைபட்சமாக தீர்ப்பு பிறப்பிக்க நேரிடும் என்பதை இதன் மூலம் அறிவிக்கலாயிற்று.

நீதிமன்ற உத்தரவுப்படி
M. சுந்தரேசன்., பி.காம்., பி.எல்.,
V. சீனிவாசகன்., பி.காம்., பி.எல்.,
வழக்கறிஞர்கள், சங்கரன்கோவில்.

---

வருவாய் கோட்டாட்சியர் அலுவலகம்,
தென்காசி
RDOTKS
இ.ப.வ. எண்.90/2025
நாள்-04.07.2025

அனுப்புநர்
இ. இசை ஆனந்த்
த/பெ. இசக்கி
25-A, ராயர் தோப்பு
குடியிருப்பு, குற்றாலம் -627802
தென்காசி தாலுகா
தென்காசி மாவட்டம்

- மனுதார்

அறிவிப்பு

மேற்படி மனுதார் இ. இசை ஆனந்த் என்பவரின் மகன் இ. சக்தி என்பவர் கடந்த 22.12.2016-ம் தேதியன்று கதவு எண்.140/3, ஸ்ரீசக்தி நகர், தென்காசி -627811, தென்காசி தாலுகா, தென்காசி மாவட்டம் என்ற முகவரியில் வைத்து இறந்தார் என்றும், தனது மகனின் இறப்பினை தங்களது அறியாமையால் பதிவு செய்யவில்லை என்றும், மேற்படி தனது மகனின் இறப்பினை எந்தவொரு பிறப்பு (ம) இறப்பு பதிவு அலுவலகத்திலும் பதிவு செய்யவில்லை என்றும், மேற்படி இறப்பினை பதிவு செய்வதில் யாருக்கேனும் ஆட்சேபனை இருந்தால் இந்த அறிவிப்பு கண்ட 15 தினங்களுக்குள் தென்காசி கோட்டாட்சித் தலைவர் அலுவலகத்தில் நேரில் ஆஜராகி தங்களது ஆட்சேபனையை தெரிவித்துக் கொள்ளுமாறு இதன் மூலம் தெரிவிக்கப்படுகிறது.

மனுதார்
இ. இசை ஆனந்த்

---

Printed, Published and Owned by S.Manimaran and Printed at Manimaran Printers
11/78, Fourway Main Road, Gangaikondan, Tirunelveli-627352
Ph: 0462- 2486789
E-Mail: nellaiedi@thinaboomi.com
RNI.Regn No.66774/97
EDITOR: S.MANIMARAN
Subject to Madurai Jurisdiction Only

---

## திண்டுக்கல் மாவட்டம், சேவுகம்பட்டி பேரூராட்சி

ஒப்பந்தப்புள்ளி அறிவிக்கை

ந.க.எண் : 131/2025 — 15வது நிதிக்குழு சுகாதார மான்யம் 2025-2026 — நாள். 11.07.2025

| வ. எண். | வேலையின் பெயர் | மதிப்பீடு தொகை ரூ. இலட்சத்தில் | செலுத்த வேண்டிய தொகை: முன்வைப்புத் தொகை (ரூபாயில்) 1 சதவீதம் | செலுத்த வேண்டிய தொகை: ஒப்பந்தப்புள்ளி படிவம் விலை வரியுடன் | ஒப்பந்ததாரரின் தகுதி | வேலையை செய்து முடிக்க வேண்டிய காலம் (வேலை உத்தரவு தேதி முதல்) |
|---|---|---|---|---|---|---|
| 1. | மு.வாடிப்பட்டியில் புதியதாக அரசு ஆரம்ப சுகாதார நிலைய கட்டிடம் கட்டுதல். | 150.00 | 1,50,000 | 17700 | Class I | 6 மாதம் |

சேவுகம்பட்டி பேரூராட்சியில் 2025-2026-ம் ஆண்டு 15வது நிதிக்குழு சுகாதார மான்யத் திட்டத்தில் மேற்கண்ட பணியினை மேற்கொள்ள தகுதி வாய்ந்த ஒப்பந்ததாரர்களிடமிருந்து இரண்டு உறைகள் (Two cover System) கொண்ட மூடி முத்திரையிடப்பட்ட ஒப்பந்தப்புள்ளிகள் வரவேற்கப்படுகின்றன சேவுகம்பட்டி பேரூராட்சியின் செயல் அலுவலர் (அ) அவரால் அங்கீகரிக்கப்பட்டவரால் **25.07.2025 வெள்ளிக்கிழமை பிற்பகல் 3.00 மணி வரை** பெற்றுக்கொள்ளப்படும். பெறப்பட்ட ஒப்பந்தப்புள்ளிகள் அன்றைய தினம் **பிற்பகல் 3.30 மணிக்கு** அப்போது வருகை தந்துள்ள ஒப்பந்ததாரர்கள் முன்னிலையில் செயல் அலுவலர் அல்லது அவரது அதிகாரம் பெற்ற அலுவலரால் பரிசீலிக்கப்படும்.

1. ஒப்பந்தப்புள்ளி சம்மந்தப்பட்ட நிபந்தனைகளை சேவுகம்பட்டி பேரூராட்சி அலுவலகத்தில், அலுவலக வேலை நாட்களில், அலுவலக வேலை நேரத்தில் கேட்டு தெரிந்து கொள்ளலாம்.
2. ஒப்பந்தப்புள்ளி படிவங்களை **25.07.2025 ஆம் தேதி பிற்பகல் 3.00 மணிக்குள்** பேரூராட்சி அலுவலகத்தில் தொகை செலுத்தி பெற்றுக் கொள்ளலாம் அல்லது https://tntenders.gov.in என்ற வலைதள முகவரியிலிருந்து இலவசமாக பதிவிறக்கம் செய்து கொள்ளலாம்.

தலைவர்,
சேவுகம்பட்டி பேரூராட்சி, திண்டுக்கல் மாவட்டம்.

செ.ம.தொ.இ/3603/ஒப்பந்தப்புள்ளி/2025

செயல் அலுவலர்,
சேவுகம்பட்டி பேரூராட்சி, திண்டுக்கல் மாவட்டம்.

# நான் எந்த சர்ச்சையிலும் சிக்க விரும்பவில்லை: ஜஸ்ப்ரிட் பும்ரா



லண்டன், ஜூலை 13-

எந்தவிதமான சர்ச்சையிலும் சிக்கி, போட்டிக்கான கட்டணத்தில் பிடித்தம் செய்யப்படுவதை விரும்பவில்லை என பும்ரா தெரிவித்துள்ளார்.

**அடிக்கடி முறையீடு...**

இந்தியா- இங்கிலாந்து இடையில் 5 போட்டிகள் கொண்ட டெஸ்ட் தொடர் நடைபெற்று வருகிறது. முதல் இரண்டு டெஸ்ட் முடிவில் இரு அணிகளும் தலா 1 போட்டியில் வெற்றி பெற்றுள்ளன. 3ஆவது போட்டி லார்ட்ஸ் மைதானத்தில் தொடங்கியது. இந்த மைதானத்தில் பந்து வீசும் போது இந்திய அணி வீரர்கள் பந்து அடிக்கடி தனது வடிவத்தை இழந்து விடுகிறது, பந்தை மாற்றித் தரும்படி நடுவரிடம் அடிக்கடி முறையிட்டனர். ஏற்கனவே முதல் இரண்டு போட்டிகளின்போதும் இதே பிரச்சனை இருந்தது. ரிஷப் பண்ட் கோபமாக நடுவர் முன்னே பந்தை கோபத்தில் வீசினார்.

**வீசமுடியவில்லை...**

இந்த நிலையில் லார்ட்ஸ் மைதானத்தில் 5 விக்கெட்டுகள் வீழ்த்திய பும்ராவிடம் செய்தியாளர்கள் டியூக்ஸ் பந்து அடிக்கடி மாற்றப்பட்டது குறித்து கேள்வி எழுப்பினர். அதற்கு பும்ரா பதில் அளித்ததாவது:- பந்தின் வடிவம் மாறியது. உண்மையிலேயே என்னால் பந்தை கட்டுக்கோப்புடன் வீசமுடியவில்லை. நான் பணத்தை இழக்க விரும்பவில்லை. ஏனென்றால், நான் கடினமாக பயிற்சி மேற்கொண்டு, அதிக ஓவர்கள் விளையாடினேன். ஆகவே, எந்தவிதமான சர்ச்சையிலும் சிக்கி, போட்டிக்கான கட்டணத்தில் பிடித்தம் செய்யப்படுவதை விரும்பவில்லை.

**சண்டையிட முடியாது...**

இருந்த போதிலும், நாங்கள் எங்களுக்கு தந்த பந்தை வைத்து விளையாடினோம். அதை எங்களால் மாற்ற முடியாது. அதற்காக சண்டையிடவும் முடியாது. சில நேரங்களில் அது நம் வழியில் செல்லும். சில நேரங்களில் மோசமான பந்தை பெறுவோம். அப்படித்தான் நடக்கும். இவ்வாறு பும்ரா தெரிவித்துள்ளார்.

# இங்கிலாந்து ஜோடி சாம்பியன்

'கிராண்ட்ஸ்லாம்' போட்டிகளில் மிகவும் கவுரவமிக்கதான விம்பிள்டன் டென்னிஸ் லண்டனில் நடந்து வருகிறது. இறுதிக்கட்டத்தை எட்டியுள்ள இந்த தொடரில் நேற்று நடைபெற்ற ஆண்கள் இரட்டையர் பிரிவின் இறுதிப்போட்டியில் இங்கிலாந்து ஜோடியான லாயிட் கிளாஸ்பூல் - ஜூலியன் கேஷ், ரிங்கி ஹிஜிகாடா (ஆஸ்திரேலியா) - டேவிட் பெல் (நெதர்லாந்து) இணையுடன் மோதியது.

இதில் தொடக்கம் முதலே சிறப்பான ஆட்டத்தை வெளிப்படுத்திய இங்கிலாந்து ஜோடி 6-2 மற்றும் 7-6 என்ற நேர் செட் கணக்கில் வெற்றி பெற்று சாம்பியன் பட்டத்தை கைப்பற்றியது.

# செஸ்: வைஷாலி வெற்றி

பிடே உலக கோப்பை மகளிர் செஸ் போட்டி ஜார்ஜியாவில் உள்ள படுமி நகரில் நடைபெற்று வருகிறது. 29-ந்தேதி வரை நடை பெறும் இந்தப் போட்டியில் 107 வீராங்கனைகள் பங்கேற்றுள்ளனர். இந்த தொடர் 6 சுற்றுகள் மற்றும் இறுதிப்போட்டியை கொண்டது.

இதில் இந்திய வீராங்கனை தமிழகத்தை சேர்ந்த வைஷாலி நேற்று முன்தினம் நடந்த 2-வது சுற்று ஆட்டம் ஒன்றில் கனடா வீராங்கனை மைலி-ஜேட் ஒவெலெட் உடன் மோதினார். இந்த ஆட்டத்தில் வைஷாலி 2-0 என்ற கணக்கில் கனடா வீராங்கனையை வீழ்த்தினார். மற்றொரு இந்திய வீராங்கனையான வந்திகா அகர்வால் முன்னாள் உலக சாம்பியனான உக்ரைனின் அன்னா உஷேனினாவை தோற்கடித்தார்.

# கபில் சாதனை முறியடிப்பு

இங்கிலாந்து, இந்தியா அணிகள் இடையிலான 3-வது போட்டி லண்டன் லார்ட்ஸ் மைதானத்தில் நடந்து வருகிறது. டாஸ் வென்ற இங்கிலாந்து பேட்டிங் செய்வதாக அறிவித்தது. அதன்படி, முதலில் பேட் செய்த இங்கிலாந்து அணி முதல் இன்னிங்சில் 112.3 ஓவரில் 387 ரன்களுக்கு ஆல் அவுட் ஆனது. சிறப்பாக ஆடிய ஜோ ரூட் 104 ரன்கள் எடுத்தார். ஜேமி ஸ்மித், கார்ஸ் அரை சதம் கடந்தனர். இந்தியா சார்பில் ஜஸ்பிரித் பும்ரா 5 விக்கெட்டும், சிராஜ், நிதிஷ் ரெட்டி தலா 2 விக்கெட்டும் வீழ்த்தினர்.

இந்நிலையில், இந்த ஆட்டத்தில் கைப்பற்றிய 5 விக்கெட்டையும் சேர்த்து ஜஸ்பிரித் பும்ரா இதுவரை வெளிநாடுகளில் நடைபெறும் டெஸ்ட் போட்டிகளில் 13 முறை 5 விக்கெட்டுகள் வீழ்த்தியுள்ளார். இதன்மூலம் டெஸ்ட் கிரிக்கெட் வரலாற்றில் வெளிநாடுகளில் அதிக முறை 5 விக்கெட்டுகள் கைப்பற்றிய இந்திய வீரர் என்ற மாபெரும் சாதனையை படைத்துள்ளார். முன்னதாக கபில் தேவ் 12 முறை 5 விக்கெட்டுகள் கைப்பற்றி இருந்ததே சாதனையாக இருந்தது. தற்போது கபில் தேவின் அந்த வாழ்நாள் சாதனையை பும்ரா முறியடித்துள்ளார்.



முதல்வர் மு.க.ஸ்டாலினை அவரது முகாம் அலுவலகத்தில், தமிழ்நாடு தொழில், முதலீட்டு ஊக்குவிப்பு மற்றும் வர்த்தகத்துறை அமைச்சர் டி.ஆர்.பி. ராஜா தனது பிறந்தநாளையொட்டி மனைவியுடன் சந்தித்து வாழ்த்து பெற்றார். அருகில் முதல்வரின் மனைவி உள்ளார்.



விழுப்புரம் மாவட்டத்தில் பிரச்சார சுற்றுபயணம் மேற்கொண்டுள்ள எடப்பாடி பழனிசாமி, திருவக்கரை வக்கரகாளியம்மன் கோவிலில் சுவாமி தரிசனம் செய்தார்.

# லார்ட்ஸ் டெஸ்ட்: கே.எல்.ராகுல் சதம்



லண்டன், ஜூலை 13-

லார்ட்ஸ் டெஸ்ட்டில் இந்திய வீரர் கே.எல்.ராகுல் சதமடித்த நிலையில் ஆட்டமிழந்தார்.

**பும்ரா 5 விக்கெட்...**

லார்ட்ஸ் மைதானத்தில் வியாழக்கிழமை தொடங்கிய இந்தியாவுக்கு எதிரான 3-ஆவது டெஸ்ட்டில் இங்கிலாந்து தனது முதல் இன்னிங்ஸில் 387 ரன்களுக்கு ஆட்டமிழந்தது. பந்துவீச்சில் இந்திய தரப்பில் பும்ரா ஐந்து விக்கெட்டுகளை வீழ்த்தி சாதனை படைத்தார். இதனைத் தொடர்ந்து இந்திய அணி தனது முதல் இன்னிங்ஸை தொடங்கியது.

**பின்தங்கிய இந்தியா...**

வெள்ளிக்கிழமை இரண்டாவது நாள் ஆட்டநேரம் முடிவில் இந்திய அணி 3விக்கெட் இழப்பிற்கு 145 ரன்கள் எடுத்தது. ராகுல் 53 ரன்களுடனும்,ரிஷப் பந்த் 19 ரன்களுடனும் களத்தில் இருந்தனர். அப்போது இங்கிலாந்து அணியை விட இந்தியா 242 ரன்கள் பின்தங்கிய நிலையில் இருந்தனர்.

**ராகுல் சதம்...**

இந்த நிலையில் 3ஆவது நாள் ஆட்டம் சனிக்கிழமை தொடங்கியதும் ரிஷப் பந்த் அரைசதம் கடந்து ஆட்டமிழந்தார். அவர் 74 ரன்கள் எடுத்தபோது ரன்அவுட் முறையில் வெளியேறினார். அவரைத்தொடர்ந்து அபாரமாக விளையாடிய ராகுலும் சதமடித்து பெவிலியன் திரும்பினார். இது ராகுலின் 10ஆவது டெஸ்ட் சதமாகும்.

**கட்டாயம்...**

தற்போது வரை இந்திய அணி 5 விக்கெட் இழப்பிற்கு 267 ரன்கள் எடுத்துள்ளது. ஜடேஜா 16, நிதிஷ் குமார் 0 களத்தில் உள்ளனர். இங்கிலாந்து அணியின் இலக்கை தொட இந்திய அணிக்கு இன்னும் 126 ரன்கள் வேண்டும் என்பதால் இந்த ஜோடி பெரிய பார்ட்னர்ஷிப் அமைக்க வேண்டிய கட்டாயத்தில் இருக்கிறார்கள்.

## 16 நிபந்தனைகளுடன்
# த.வெ.க. ஆர்ப்பாட்டத்திற்கு அனுமதி

சென்னை, ஜூலை 13-

த.வெ.க. ஆர்ப்பாட்டத்திற்கு பைக் பேரணி, பட்டாசுகளுக்கு தடை போன்ற நிபந்தனைகளுடன் காவல் துறை தரப்பில் அனுமதி வழங்கப்பட்டு உள்ளது.

தமிழகத்தில் கடந்த நான்கு வருடங்களில் லாக்கப்பில் உயிரிழந்தவர்களுக்கு நீதி கேட்கும் வகையில், உயிரிழந்தவர்களின் குடும்பத்தினரை வைத்து, தமிழக வெற்றி கழகம் கட்சி சார்பில் இன்று மாபெரும் கண்டன ஆர்ப்பாட்டம் நடைபெற உள்ளது. இந்த ஆர்ப்பாட்டம் சென்னை சேப்பாக்கத்தில் உள்ள சிவானந்தா சாலையில் அக்கட்சியின் தலைவர் விஜய் தலைமையில் நடைபெறுகிறது.

இதற்காக பனையூரில் உள்ள தமிழக வெற்றி கழகம் கட்சியின் தலைமை அலுவலகத்திற்கு, லாக்கப் மரணங்களில் உயிரிழந்தவர்களின் குடும்பத்தினர் வரவழைக்கப்பட்டுள்ளனர். இன்று நடைபெற உள்ள போராட்டத்திற்கு போலீசார் தடை விதிக்கலாம் என எண்ணி அவர்களை முன்பே அலுவலகத்திற்கு வரவழைத்துள்ளனர் என கூறப்படுகிறது.

இந்நிலையில், லாக்கப் மரணங்கள் தொடர்பாக, பலியானவர்களின் குடும்பத்தினரை, பனையூர் அலுவலகத்தில் வைத்து த.வெ.க. தலைவர் விஜய் நேற்று நேரில் சந்தித்து பேசினார். அதில், உங்களுக்கான நீதியை பெற்று தருவேன் என அவர்களிடம் விஜய் உறுதியளித்து உள்ளார் என தகவல் வெளியானது. இதே போன்று அவர்களுக்கு நிதியுதவியும் வழங்க உள்ளார் என கூறப்படுகிறது.

இந்நிலையில், த.வெ.க. போராட்டத்திற்கு 16 நிபந்தனைகளுடன் அனுமதி அளிக்கப்பட்டு உள்ளது. இதன்படி, ஆர்ப்பாட்டத்தின்போது, பைக் பேரணி செல்ல கூடாது, ஊர்வலம் நடத்த கூடாது, பட்டாசுகளை வெடிக்க கூடாது என 16 நிபந்தனைகள் காவல் துறை தரப்பில் அறிவுறுத்தலாக வழங்கப்பட்டு உள்ளது. இந்த ஆர்ப்பாட்டத்தில் கட்சியினர், தொண்டர்கள் என 6 ஆயிரம் பேர் பங்கேற்க உள்ளனர். இதனை முன்னிட்டு, 2 ஆயிரம் போலீசார் பாதுகாப்பு பணியில் ஈடுபடுகின்றனர்.

தினபூமியில் விளம்பரம் செய்து பயன் பெறுங்கள்

# நாங்கள் ஆட்சிக்கு வந்ததும் நிறுத்தப்பட்ட திட்டங்களை வழங்குவோம்: இ.பி.எஸ்.

கடலூர், ஜூலை 13-

நாங்கள் ஆட்சிக்கு வந்ததும், நிறுத்தப்பட்ட ஏழை மக்களின் திட்டங்களை வழங்குவோம் என அ.தி.மு.க., பொதுச்செயலாளர் இ.பி.எஸ்., தெரிவித்தார்.

கடலூரில் நடந்த பேரணியில் அவர் பேசியதாவது: அ.தி.மு.க., ஆட்சியில் பெண் தொழிலாளிகளுக்கு வழங்கப்பட்ட விலையில்லா ஆடு, கோழி, கறவை மாடுகள் வழங்கும் திட்டத்தை தி.மு.க., ஆட்சிக்கு வந்ததும் நிறுத்திவிட்டது. பெண்களுக்கு தாலிக்கு தங்கம் வழங்கும் திட்டத்தையும் நிறுத்தி விட்டது. எங்கள் மீது கோபம் இருந்தால், எங்களுடன் பேசுங்கள். ஏழை மக்களின் திட்டங்களை ஏன் நிறுத்தினீர்கள். நாங்கள் ஆட்சிக்கு வந்ததும் அதனை வழங்குவோம். ஏழைகள், மக்கள் பாதிக்கும் போது ஓடோடி வந்த அரசாக அ.தி.மு.க. அரசு இருந்தது.

பெண்களுக்கு ஆயிரம் ரூபாய் கொடுத்ததாக ஸ்டாலின் கூறுகிறார். தேர்தல் நேரத்தில் அனைத்து பெண்களுக்கும் ஆயிரம் ரூபாய் கொடுப்பேன் என சொல்லி ஆட்சிக்கு தி.மு.க. வந்தது. ஆனால், 28 மாதங்கள் வழங்கப்படவில்லை. பெண்களிடம் எதிர்ப்பு வரும் என்பதாலும், அ.தி.மு.க. தொடர்ந்து வற்புறுத்தியதால் ஆயிரம் ரூபாயை ஸ்டாலின் கொடுத்தார். பெண்கள் மீது இரக்கப்பட்டு கொடுக்கவில்லை. தற்போது விடுபட்டவர்களுக்கு, விதிகளை தளர்த்தி, 30 லட்சம் பெண்களுக்கு ரூ. ஆயிரம் கொடுப்பதாக அறிவித்துள்ளார். தி.மு.க., மக்களிடம் செல்வாக்கு இழந்துவிட்டது. எட்டு மாதத்தில் தேர்தல் வருகிறது. தற்போது 52 மாதங்கள் பிறகு, மாதம் ஆயிரம் வழங்குவோம் நிதி வழங்குவோம் என்று சொல்கிறீர்களே ?இது நியாயமா, மக்களை ஏமாற்றுவது இல்லையா? தேர்தலுக்காக முன் கூட்டியே மாதந்தோறும் நிதி கொடுத்து தந்திரமாக ஓட்டு பெற உள்ளனர். உஷாராக இருக்க வேண்டும்.

கடன் வாங்குவதில் ஸ்டாலின் சூப்பர் முதல்வராக உள்ளார். ஆயிரம் ரூபாய் தொகையை கூட அரசின் வருமானத்தை அதிகரித்து கொடுக்கவில்லை. கடன் வாங்கி தான் கொடுத்துள்ளார். இந்தக் கடன் உங்கள் மீது தான் வந்து விழும். ஸ்டாலினுக்கு வருவதற்கு முன்பு, காங்., தி.மு.க.,அ.தி.மு.க. ஆட்சி மாறி மாறி நடந்தது. 2021ம் ஆண்டு 5 .18 லட்சம் கோடி கடன் இருந்தது. ஸ்டாலின் 4 ஆண்டுகளல் 4.38 லட்சம் கோடி கடன் வாங்கி உள்ளார். 2025 -2026 சட்டசபை தேர்தலுக்குள் ரூ.1 லட்சம் கோடி கடன் வாங்க திட்டமிட்டுள்ளது. இந்தியாவிலேயே கடன் வாங்குவதில் தமிழகம் முதல் மாநிலமாக உள்ளது. இதற்காகவா ஆட்சி கொடுத்தனர். பிறக்கும் குழந்தை மீதும் 1.5 லட்சம் கடன் உள்ளது. கடன் மேல் கடன் வாங்கி மக்களை தத்தளிக்கவிட்ட அரசு தி.மு.க.., அரசு. இவ்வாறு இ.பி.எஸ்., பேசினார்.

## விம்பிள்டன் டென்னிஸ் போட்டி:
# இறுதியில் சின்னர் – அல்கராஸ் மோதல்

லண்டன், ஜூலை 13-

விம்பிள்டன் டென்னிஸ் இறுதிப்போட்டியில் தரவரிசையில் முதலிடத்தில் இருக்கும் யானிக் சின்னர், இரண்டாம் இடத்தில் இருக்கும் நடப்பு சாம்பியன் அல்கராஸுக்கு இடையேயான போட்டிக்கு மிகுந்த எதிர்பார்ப்பு இருக்கிறது.

**அரையிறுதியில்...**

புல்தரை கிராண்ட்ஸ்லாம் போட்டியான விம்பிள்டன் போட்டிகள் ஜூன் 23 முதல் தொடங்கி ஜூலை 13ஆம் தேதி வரை நடைபெற இருக்கின்றன. நேற்று முன்தினம் இரவு நடைபெற்ற அரையிறுதிப் போட்டியில் நோவக் ஜோகோவிச், யானிக் சின்னர் மோதினார்கள். இந்தப் போட்டியில் சின்னர் 6-3, 6-3, 6-4 என்ற நேர்செட்களில் எளிதாக வென்றார். முதல் செர்வில் சின்னர் 81 சதவிகிதம் வெல்ல ஜோகோவிச் 77 சதவிகிதம் வென்றார். இரண்டாம் செர்வில் சின்னர் 71 சதவிகிதம் வெல்ல, ஜோகோவிச் 17 சதவிகிதம் மட்டுமே வென்றார். இதுதான் ஜோகோவிச்சின் தோல்விக்கு முக்கிய காரணமாக அமைந்தது.

**இறுதிப் போட்டி...**

அடுத்ததாக மற்றுமொரு அரையிறுதியில் டெய்லர் ஃபிரிட்ஸ், கார்லோஸ் அல்கராஸ் மோதினார்கள். இந்தப் போட்டியில் 6-4, 5-7, 6-3, 7(8)-6 என்ற செட்களில் அல்கராஸ் வென்றார். ஹாட்ரிக் கோப்பை வெல்லும் முனைப்பில் அல்கராஸ் இருக்கிறார். இறுதிப் போட்டி இன்று (ஜூலை 13) நடைபெற இருக்கிறது. டென்னிஸ் தரவரிசையில் முதலிடத்தில் இருக்கும் யானிக் சின்னர், இரண்டாம் இடத்தில் இருக்கும் நடப்பு சாம்பியன் அல்கராஸுக்கு இடையேயான போட்டிக்கு மிகுந்த எதிர்பார்ப்பு இருக்கிறது.

# பி.சி.சி.ஐ. விதிமுறை குறித்த விமர்சனம்: விராட் கோலிக்கு சுரேஷ் ரெய்னா ஆதரவு

மும்பை, ஜூலை 13-

பி.சி.சி.ஐ. விதிமுறை குறித்த விமர்சனம் தொடர்பாக விராட் கோலிக்கு சுரேஷ் ரெய்னா ஆதரவு தெரிவித்துள்ளார்.

**புதிய கட்டுப்பாடுகள்...**

நியூசிலாந்து மற்றும் ஆஸ்திரேலியாவுக்கு எதிரான டெஸ்ட் தொடர்களில் இந்திய அணி மோசமாக தோற்றதன் எதிரொலியாக இந்திய வீரர்களுக்கு, கிரிக்கெட் வாரியம் புதிய கட்டுப்பாடுகளை விதித்தது. இதன்படி வெளிநாட்டு சுற்றுப்பயணத்தில் குறைந்த நாட்கள் மட்டுமே வீரர்கள் தங்களது குடும்பத்தினருடன் தங்கியிருக்க அனுமதி அளிக்கப்படுகிறது.

**விராட் கோலி எதிர்ப்பு...**

இந்த விதிமுறைக்கு விராட் கோலி உள்பட சில முன்னணி வீரர்கள் எதிர்ப்பு தெரிவித்தனர்.

இதில் விராட் கோலி தனது எதிர்ப்பை நேரடியாகவே காட்டியிருந்தார். இதனிடையே கோலி உள்ளிட்டோரின் அதிருப்திக்கு இந்திய அணியின் தலைமை பயிற்சியாளர் கவுதம் கம்பீர் எதிர்ப்பு தெரிவித்தார்.

குடும்பம் என்பது முக்கியமானதுதான் ஆனால் நாம் விடுமுறையை கொண்டாட வரவில்லை என்று கூறியிருந்தார். அத்துடன் வெளிநாட்டு தொடர்களில் வீரர்களுடன் குடும்பத்தினர் இருக்கக்கூடாது என்று சொல்லமாட்டேன். ஒவ்வொருவருக்கும் குடும்பம் முக்கியமானது. ஆனால் உங்களுடைய கவனம் நாட்டுக்கு பெருமை சேர்ப்பதில் மட்டுமே இருக்க வேண்டும் என்றும் விளக்கம் அளித்திருந்தார்.

**எதிரானவன்...**

இந்நிலையில் இந்திய அணியின் முன்னாள் வீரரான சுரேஷ் ரெய்னா, இந்த விதிமுறை குறித்த விராட் கோலியின் விமர்சனத்திற்கு ஆதரவு தெரிவிக்கும் வகையில் சில கருத்துகளை கூறியுள்ளார். அதில், "சுற்றுப்பயணங்களில் குடும்பத்தினருடன் இருப்பது மிகவும் முக்கியம்.

குடும்பத்தினரை அனுமதிக்கக் கூடாது முடிவை பி.சி.சி.ஐ. எடுத்துள்ளது. இந்த முடிவுக்கு நான் எதிரானவன். நீங்கள் வீரர்களை இரண்டு மாதங்களுக்கு ஒரு சுற்றுப்பயணத்திற்கு அனுப்புகிறீர்கள் என்றால் குடும்பத்தை அனுமதிக்க வேண்டும். அவர்கள் (குடும்பத்தினர்) வீரர்களுக்கு எதிரானவர்கள் அல்ல.

**பெருமையான தருணம்...**

நாங்கள் ரன்கள் எடுக்க வேண்டும், நாடு வெற்றி பெற வேண்டும் என்று அவர்கள் விரும்புவார்கள். நீங்கள் கற்பனை செய்து பாருங்கள் விராட் கோலி விளையாடி கொண்டிருக்கும் போது அவருடைய மகள் மைதானத்தில் இருந்து கைகளை தட்டி உற்சாகப்படுத்துவது எவ்வளவு பெருமையான தருணம்.

அப்போது விராட் தீயாக விளையாடுவார்" என்று கூறினார்.

# ஸ்காட் போலண்ட் சேர்ப்பு?

3 போட்டிகள் கொண்ட டெஸ்ட்டில் 2-0 என தொடரை வென்றுள்ள நிலையில் பிங்க் பந்து டெஸ்ட் இன்று (ஜூலை 13) இந்திய நேரப்படி நள்ளிரவு 12 மணிக்கு தொடங்கவிருக்கிறது. இந்தப் போட்டியில் 'பிங்க் பந்து ஸ்பெஷலிஸ்ட்' எனப்படும் ஸ்காட் போலண்ட் அணியில் சேர்க்கப்படுவார் என எதிர்பார்க்கப்படுகிறது. நாதன் லயனுக்கு மாற்றாக இந்த முடிவு எடுக்கப்படுமென தகவல்கள் தெரிவிக்கின்றன.

இது குறித்து பாட் கம்மின்ஸ் செய்தியாளர்கள் சந்திப்பில் கூறியதாவது: எல்லாமே ஒரு ஆப்ஷன்தான். இதுவரை எந்த முடிவும் எடுக்கவில்லை. குறிப்பாக பிங்க் பந்து கிரிக்கெட்டில் நாங்கள் என்ன சிறப்பானது என்பதை ஆராய்ந்து கொண்டிருக்கிறோம்.

2 சீசன்கள் இங்கு பிங்க் பந்தில் விளையாடினோம். இன்னும் இந்த பிட்ச் குறித்து சரியாக கணிக்க முடியவில்லை. அதனால், கூடுதல் நேரம் எடுத்துக்கொண்டு பிறகு அணியை அறிவிப்போம் என்றார். பிங்க் பந்து கிரிக்கெட்டில் ஆஸி. அணி 12-இல் 11 போட்டிகளில் வென்றுள்ளது குறிப்பிடத்தக்கது.

## கடலூர் ரயில் விபத்துக்கு
# கேட் கீப்பரின் அலட்சியமே காரணம்: விசாரணையில் வெளியான தகவல்

கடலூர், ஜூலை 13-

கடலூர் ரயில் விபத்துக்கு கேட் கீப்பரின் அலட்சியமே காரணம் என விசாரணையில் தெரியவந்துள்ளது.

கடலூர் மாவட்டம் செம்மங்குப்பத்தில் ஜூலை 8 ஆம் தேதி ரயில்வே கேட்டை கடக்க முயன்ற பள்ளி வேன் மீது ரயில் மோதிய விபத்தில் 3 மாணவர்கள் பலியாகினர். இந்த விபத்தில் கவனக்குறைவாக செயல்பட்டதாகக் கூறி, செம்மங்குப்பம் கேட் கீப்பர் பங்கஜ் சர்மா உடனடியாக கைது செய்யப்பட்டார். ரயில் வரும்போது அவர் கேட்டை மூடவில்லை என்று கூறப்பட்டது.

இதுதொடர்பாக பங்கஜ் சர்மா, தனியார் பள்ளி ஓட்டுநர் சங்கர், லோகோ பைலட் சக்தி குமார், உதவி லோகோ பைலட் ரஞ்சித் குமார், ரயில் நிலைய அதிகாரிகள் என 13 பேருக்கு சம்மன் அனுப்பப்பட்டு விசாரணை மேற்கொள்ளப்பட்ட நிலையில் விபத்துக்கு கேட் காரணம் என்று தெரியவந்துள்ளது.

ரயில்வே கேட்டை மூடாமலேயே, கேட்டை மூடிவிட்டேன் என்று கேட் கீப்பர் பங்கஜ் சர்மா, ஸ்டேஷன் மாஸ்டருக்கு தகவல் கொடுத்துள்ளார். ஆனால் விபத்து நடந்தபின்னர் பங்கஜ் சர்மாவே, ஸ்டேஷன் மாஸ்டரை அழைத்து, விபத்து நடந்துள்ளதைக் கூறியுள்ளார். மேலும் தான் கேட்டை மூடவில்லை, தவறான தகவல் அளித்துவிட்டேன் என்றும் மாஸ்டரிடம் தெரிவித்துள்ளார்.

முன்னதாக, வேன் டிரைவர்தான் கேட்டை திறக்கச் சொன்னதாக ரயில்வே, முன்னுக்குப்பின் முரணாக அறிக்கை வெளியிட்டிருந்தது. தற்போது விசாரணையின் மூலமாக கேட் கீப்பர்தான் இந்த விபத்துக்குக் காரணம் என்று தெரியவந்துள்ளது. மத்தியப் பிரதேசத்தைச் சேர்ந்த பங்கஜ் சர்மா மீது ஏற்கெனவே கொலை உள்ளிட்ட பிரிவுகளின் கீழ் 5 வழக்குப்பதிவு செய்யப்பட்டுள்ளது குறிப்பிடத்தக்கது.

## ஆர்.சி.பி. கூட்டநெரிசலுக்கு
# ஒட்டுமொத்த அலட்சியமே காரணம்: விசாரணை அறிக்கையில் தகவல்

பெங்களூரு, ஜூலை 13-

பெங்களூரில், ஆர்.சி.பி. வெற்றிக் கொண்டாட்டத்தின் போது நேரிட்ட கூட்ட நெரிசலில் சிக்கி 11 பேர் பலியான சம்பவத்துக்கு ஒட்டுமொத்த அலட்சியமே காரணம் என விசாரணை அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

ஐ.பி.எல். கிரிக்கெட் போட்டியில் கோப்பையை ஆர்.சி.பி. அணி வென்றதையடுத்து, பெங்களூரில், வெற்றிக் கொண்டாட்டத்தின் போது நேரிட்ட கூட்ட நெரிசலில் சிக்கி 11 பேர் பலியாகினர். கூட்டநெரிசல் சம்பவம் தொடர்பாக விசாரணை நடத்துவதற்கு கர்நாடக உயர் நீதிமன்ற ஓய்வுபெற்ற நீதிபதி ஜான்மைக்கேல் டிகுன்ஹா தலைமையில் தனிநபர் விசாரணை ஆணையம் அமைத்தது.

இந்த விசாரணை ஆணையம், முழுமையாக விசாரணை நடத்தி முடித்த நிலையில், ஓய்வுபெற்ற நீதிபதி ஜான்மைக்கேல் டிகுன்ஹா தனது விசாரணை அறிக்கையை, கர்நாடக முதல்வர் சித்தராமையாவிடம் சமர்ப்பித்தார்.

அந்த அறிக்கையில், கர்நாடக மாநிலம் பெங்களூருவில், ஆர்.சி.பி. வெற்றிக் கொண்டாட்ட நிகழ்வை சரியான முறையில் நடத்த முடியாது என்று நன்கு அறிந்திருந்தும், கர்நாடக கிரிக்கெட் கழகம், ஆர்.சி.பி. அணி, கர்நாடக காவல்துறை என அனைத்துமே அதனை நடத்துவதற்கு திட்டமிள்ளனர். இந்த நிகழ்ச்சி நடைபெற திட்டமிட்ட இடத்தில், எந்த முன்னேற்பாடுகளும், பாதுகாப்பும், கூட்டத்தைக் கட்டுப்படுத்தும் வழிமுறைகளும் கையாளப்படவில்லை. ஒருமாத காலமாக, நேரில் பார்த்தவர்களிடம் பெற்ற வாக்குமூலம், சம்பவம் நடந்த இடத்தை நேரில் பார்வையிட்டு நடத்திய விசாரணையின் மூலம், விசாரணை ஆணையத்துக்கு ஒரு விஷயம் தெளிவாகத் தெரிந்தது, அதுதான், பாதுகாப்பு முன்னேற்பாடுகளில் மிக மோசமான அலட்சியம். ஆர்.சி.பி. வெற்றிக் கொண்டாட்டம் நடத்தப்பட்ட விளையாட்டு அரங்குக்குள் வெறும் 79 காவலர்கள் மட்டுமே நிறுத்தப்பட்டுள்ளனர். வெளியே ஒருவரும் நிறுத்தப்படவில்லை என்பதும் தெரியவந்துள்ளது.

வாக்களிப்பது நமது கடமை

# 10 ஆயிரம் காலிப்பணியிடங்களுக்கு விரைவில் தேர்வு: டி.என்.பி.எஸ்.சி.

சென்னை, ஜூலை 13-

காலியாக உள்ள 10 ஆயிரம் பணியிடங்களுக்கு விரைவில் தேர்வு நடத்தப்படும் என்று டி.என்.பி.எஸ்.சி., தலைவர் பிரபாகர் கூறி உள்ளார்.

தமிழகம் முழுவதும் டி.என்.பி.எஸ்.சி., குரூப் 4 தேர்வு நேற்று (ஜூலை 12) நடைபெற்றது. மொத்தம் 38 மாவட்டங்களில் 314 மையங்களில் தேர்வர்கள் தேர்வை எழுதினர். சென்னை எழும்பூரில் உள்ள தேர்வு மையம் ஒன்றுக்கு டி.என்.பி.எஸ்.சி., தலைவர் பிரபாகர் சென்றார். அங்கு தேர்வு பணிகளை அவர் பார்வையிட்டார்.

பின்னர் நிருபர்களிடம் அவர் பேசுகையில் கூறியதாவது; ஒரு மாதத்தில் குரூப் 1 முதல்தேர்வு விடைத்தாள்கள் திருத்தப்பட்டு முதன்மை தேர்வுக்கு மாணவர்கள் அழைக்கப்படுவர். அடுத்து வரும் நாட்களில் 10 ஆயிரம் காலி பணியிடங்களுக்கு தேர்வு நடைபெறும். குரூப் 4 தேர்வுக்கான வினாத்தாள் பாதுகாப்பாக கொண்டு செல்லப்பட்டது. வினாத்தாள் எதுவும் கசியவில்லை.



தேனி மாவட்டம் நல்லகருப்பன்பட்டி மேரிமாத கலை மற்றும் அறிவியல் கல்லூரியில் தமிழ்நாடு அரசுப் பணியாளர் தேர்வாணையம் மூலம் தொகுதி 4 தேர்வு நடைபெற்ற மையத்தில் கலெக்டர் ரஞ்ஜீத் சிங் நேரில் பார்வையிட்டு ஆய்வு செய்தார்.

# ராமநாதபுரத்தில் 104 மையங்களில் குரூப்-4 தேர்வு: கலெக்டர் சிம்ரன்ஜீத் சிங் காலோன் நேரில் ஆய்வு



**ராமநாதபுரம், ஜூலை 13-**

ராமநாதபரம் மாவட்டத்தில் 104 மையங்களில் குரூப்-4 தேர்வு நடைபெற்றது. தேர்வினை கலெக்டர் சிம்ரன் ஜீத் சிங்காலோன் நேரில் பார்வையிட்டு ஆய்வு செய்தார்.

தமிழ்நாடு அரசு பணியாளர் தேர்வாணையம் சார்பில் நடைபெற்ற குரூப்-4 தேர்வினையொட்டி ராமநாதபுரம் செய்;யதம்மாள் பொறியியல் கல்லூரி மையத்தில் கலெக்டர் சிம்ரன்ஜீத் சிங் காலோன் நேரில் பார்வையிட்டு ஆய்வு மேற்கொண்டார். ராமநாதபுரம் மாவட்டத்தில் இன்று தமிழ்நாடு அரசுப் பணியாளர் தேர்வாணையம் நடத்தும் ஒருங்கிணைந்த குடிமைப்பணிகள் (தொகுதி - 4) தேர்விற்கு 29 ஆயிரத்து 126 பேர் தேர்வு எழுதுவதற்கு விண்ணப்பித்ததில் 24 ஆயிரத்து 631 நபர்கள் தேர்வு எழுதினார்கள். இந்த தேர்வானது மாவட்டத்;தில் உள்ள 9 வட்டங்களில் 104 மையங்களில் நடைபெறுகின்றது. தேர்வினை கண்காணிப்பதற்காக 9 வட்டங்களிலும் துணை ஆட்சியர் நிலையிலான அலுவலர்கள் நியமிக்கப்பட்டு தேர்வு மையங்களில் கண்காணிப்பு பணி மேற்கொண்டுள்ளனர்.

மேலும் 115 ஆய்வு அலுவலர்களும், 28 நகர் குழு அலுவலர்களும், 11 பறக்கும் படை குழுக்களும் நியமிக்கப்பட்டு பணியில் ஈடுபட்டுள்ளனர். இதுதவிர தேர்வு நடைபெறும் மையங்களில்; 122 வீடியோ ஒளிப்பதிவாளர்கள் நியமிக்கப்பட்டுள்ளனர். தேர்வு அறையில் தேர்வு எழுத வருபவர்களுக்கு தேவையான உட்கட்டமைப்பு வசதிகள் செய்யப்பட்டு தேர்வு அமைதியான முறையில் நடைபெற்றது.



தமிழ்நாடு அரசுப் பணியாளர் தேர்வாணையத்தால் நடத்தப்படும் ஒருங்கிணைந்த குடிமை பணிகள் தேர்வை மதுரை மாவட்டம் திருமங்கலம் பி.கே.என். நேல்நிலைப்பள்ளியில் கலெக்டர் பிரவீன்குமார் நேரில் பார்வையிட்டு ஆய்வு செய்தார்.

## விருதுநகர் மாவட்டத்தில்

# குரூப்-4 பணியிட எழுத்து தேர்வை கலெக்டர் சுகபுத்ரா ஆய்வு செய்தார்



**விருதுநகர், ஜூலை 13-**

அருப்புக்கோட்டை தேவாங்கர் மேல்நிலைப் பள்ளி மற்றும் திருச்சுழி கல்லூரணி எஸ்.பி.கே. மேல்நிலைப்பள்ளி ஆகிய தேர்வு மையங்களில் தமிழ்நாடு அரசு பணியாளர் தேர்வாணையம் மூலம் குரூப் 4 பணியிடங்களுக்கான எழுத்துத் தேர்வு நடைபெற்றதை மாவட்ட ஆட்சித்தலைவர் சுகபுத்ரா நேரில் சென்று பார்வையிட்டு ஆய்வு செய்தார். முன்னதாக, விருதுநகர் சத்திரிய பெண்கள் மேல்நிலைப் பள்ளி தேர்வு மையத்தில், கண்காணிப்பு அலுவலர்களுடன் நடைபெற்ற ஆலோசனைக் கூட்டத்தில் மாவட்ட ஆட்சித்தலைவர் அலுவலர்களுக்கு தேர்வு குறித்த உரிய அறிவுரை மற்றும் ஆலோசனைகளை வழங்கினார்.

விருதுநகர் மாவட்டத்தில் 176 தேர்வு மையங்களில் 42,231 விண்ணப்பதாரர்கள் தேர்வு எழுதினர். தேர்வு நடைபெறும் மையங்களில் தீவிர கண்காணிப்பு மேற்கொள்ள முதன்மைக் கண்காணிப்பாளர்கள், துணை வட்டாட்சியர் நிலையில் 34 தேர்வு நடமாடும் குழுக்கள் மற்றும் துணை ஆட்சியர் நிலையில் 10 பறக்கும் படை அலுவலர்களும், 176 தேர்வு மையங்களுக்கு 184 வீடியோ கிராபர்களும் நியமிக்கப்பட்டு கண்காணிக்கப்பட்டனர். அதன்படி, விருதுநகர் வட்டத்தில் 27 தேர்வு மையங்களில் நடைபெற்ற தேர்வில் விண்ணப்பித்திருந்த 7573 நபர்களில் 6,429 நபர்களும், அருப்புக்கோட்டை வட்டத்தில் 25 தேர்வு மையங்களில் நடைபெற்ற தேர்வில் விண்ணப்பித்திருந்த 6,892 நபர்களில் 5,909 நபர்களும், காரியாபட்டி வட்டத்தில் 12 தேர்வு மையங்களில் நடைபெற்ற தேர்வில் விண்ணப்பித்திருந்த 2,755 நபர்களில் 2,419 நபர்களும், இராஜபாளையம் வட்டத்தில் 28 தேர்வு மையங்களில் நடைபெற்ற தேர்வில் விண்ணப்பித்திருந்த 8,903 நபர்களில் 7,535 நபர்களும், சாத்தூர் வட்டத்தில் 16 தேர்வு மையங்களில் நடைபெற்ற தேர்வில் விண்ணப்பித்திருந்த 4,238 நபர்களில் 3,640 நபர்களும் தேர்வு எழுதினர். சிவகாசி வட்டத்தில் 27 தேர்வு மையங்களில் நடைபெற்ற தேர்வில் விண்ணப்பித்திருந்த 8,255 நபர்களில் 6,998 நபர்களும், திருவில்லிப்புத்தூர் வட்டத்தில் 20 தேர்வு மையங்களில் நடைபெற்ற தேர்வில் விண்ணப்பித்திருந்த 5,830 நபர்களில் 5,021 நபர்களும், திருச்சுழி வட்டத்தில் 7 தேர்வு மையங்களில் நடைபெற்ற தேர்வில் விண்ணப்பித்திருந்த 1,416 நபர்களில் 1,236 நபர்களும், வெம்பக்கோட்டை வட்டத்தில் 4 தேர்வு மையத்தில் நடைபெற்ற தேர்வில் விண்ணப்பித்திருந்த 1,016 நபர்களில் 847 நபர்களும், வத்திராயிருப்பு வட்டத்தில் 10 தேர்வு மையத்தில் நடைபெற்ற தேர்வில் விண்ணப்பித்திருந்த 2,576 நபர்களில் 2,197 நபர்களும், என ஆக மொத்தம் மாவட்டத்தில் 176 தேர்வு மையங்களில் நடைபெற்ற தேர்வில் விண்ணப்பித்திருந்த 49,454 நபர்களில் 42,231 நபர்கள் தேர்வு எழுதினர். 7,223 நபர்கள் தேர்வுக்கு வரவில்லை.

## மண்டபம் அருகே

# தர்மமுனீஸ்வரர் ஆலய 3-ம் ஆண்டு திருவிழா



**ராமேசுவரம், ஜூலை 13-**

மண்டபம் அருகே குஞ்சார்வலசை கிராமத்தில் ஶ்ரீ தர்ம முனீஸ்வரர் ஆலயத்தில் 3-ம் ஆண்டு திருவிழா வெள்ளிக்கிழமை இரவு நடைபெற்றது.

ராமநாதபுரம் மாவட்டம் மண்டபம் அருகே குஞ்சார் வலசை கிராமத்தில் அருள்பாலித்து வரும் ஸ்ரீதர்ம முனீஸ்வரர் ஶ்ரீ சங்கிலி கருப்பணசாமி கோவில்கள் உள்ளது.பழமையான இந்த ஆலயத்தில் 3-ம் ஆண்டு திருவிழா கடந்த ஜூலை 4-ம் தேதி காப்பு கட்டுதலுடன் தொடங்கியது. திருவிழா நிகழ்ச்சியில் தினமும் சிறப்பு பூஜைகள்,தீபாராதனை வழிபாடுகள் நடைபெற்று வந்தன.

நிகழ்ச்சியின் கடைசி நாளான ஜூலை 11-ம் தேதி வெள்ளிக்கிழமை இரவு ஶ்ரீ தர்மமுனீஸ்வரர், ஸ்ரீ சங்கிலி கருப்பணசாமிக்கு சிறப்பு அபிஷேக ஆராதனைகள் நடைபெற்றது. அதனைத் தொடர்ந்து பூ இறங்கு நிகழ்ச்சி நடைபெற்றது. தொடர்ந்து கிடாய் வெட்டும் நிகழ்ச்சி நடைபெற்றது. அதனைத் தொடர்ந்து 12 ஆம் தேதி நேற்று சனிக்கிழமை அன்னதானம நடைபெற்றது. விழாவில் சுற்றுவட்டார பொதுமக்கள் திரளாக கலந்து கொண்டனர். விழாவிற்கான ஏற்பாடுகளை கிராமத் தலைவர் காளிமுத்து, செயலாளர் ஓம்பிரகாஷ், பொருளாளர் கருணாகரன் மற்றும் நிர்வாகிகள் செய்திருந்தனர்.

## கெயில் நிறுவனத்தின் சிறப்பு வழக்கறிஞராக

# ராஜபாளைம் ராம் சங்கர் நியமனம்

**ராஜபாளையம், ஜூலை 13-**



ராஜபாளையத்தைச் சேர்ந்த வழக்கறிஞர் டாக்டர் ராம் சங்கர் இந்திய அரசுக்கு சொந்தமான எரிசக்தி நிறுவனம் கெயில் இந்தியா லிமிடெட் கம்பெனிக்கு சிறப்பு வழக்கறிஞராக 3 ஆண்டுகளுக்கு நியமிக்கப்பட்டுள்ளார். கெயில் இந்தியா நிறுவனம் கேஸ், எல்பிஜி, எரிவாயு, சூரிய சக்தி, காற்றாலை மின்சாரம் ஆகிய உற்பத்தி மற்றும் வினியோகம் ஆகியவற்றில் இந்தியா முழுவதும் ஈடுபட்டு உள்ளது. வழக்கறிஞர் டாக்டர் ராம் சங்கரை கெயில் நிறுவனத்தின் சிறப்பு வழக்கறிஞராக நேற்று அந்த நிறுவனத்தின் பொது மேலாளர் வெங்கடேசன் அறிவித்துள்ளார்.

டாக்டர் ராமசங்கர் ராஜ பாளையத்தில் பிறந்தவர் 2012 ஆம் ஆண்டு முதல் இந்திய உச்ச நீதிமன்றத்தில் வழக்கறிஞராக பணியாற்றி வருகிறார். பல்வேறு அரசு மற்றும் பொதுத்துறை நிறுவனங்கள், வங்கிகளுக்கும் வழக்கறிஞராக பணியாற்றி வருகிறார். டாக்டர் ராம் சங்கர் சட்டப் படிப்பில் முனைவர் பட்டம் பெற்றுள்ளார்.

சட்டப் படிப்பில் ஆராய்ச்சி செய்து இந்தியாவில் கொலிஜியம் எனப்படும் அமைப்பு எவ்வாறு உயர் மற்றும் உச்ச நீதிமன்ற நீதிபதிகளை எவ்வாறு நியமிக்கிறார்கள் என்பதை ஆராய்ந்து அதில் டாக்டர் பட்டம் பெற்றுள்ளார்.

# ராஜாக்காள்பட்டி கிராமத்தில் ஆக்கிரமிப்பு: குடிக்க குடிநீர் இன்றி பொதுமக்கள் தவிப்பு



**அலங்காநல்லூர், ஜூலை 13-**


மதுரை மாவட்டம் பாலமேடு அருகே உள்ள ராஜாகாள்பட்டி கிராமத்தில் கடந்த ஆறு மாதமாக தண்ணீர் இன்றி பொதுமக்கள் சிரமத்துக்குள்ளாகி வருகின்றனர். இந்நிலையில் அமைச்சர், எம். எல். ஏ. மாவட்ட ஆட்சியர் ஆகியோரிடம் மனுக்கள் அளித்தும் எந்த நடவடிக்கையும் எடுக்கவில்லை என கிராம பொதுமக்கள் கூறுகின்றனர். மேலும் ஒரு வாரத்தில் குடிநீர் வழங்காவிட்டால் ரேஷன் கார்டு ஆதார் அட்டையை மாவட்ட ஆட்சித் தலைவர் அலுவலகத்தில் ஒப்படைக்க போவதாக கிராம பொதுமக்கள் அறிவித்துள்ளனர். இந்த கிராமத்தில் 1000 குடும்பங்கள் வசித்து வருகின்றனர். பொதுமக்களின் குடிநீர் ஆதாரத்திற்காக சாத்தையாறு அணை அருகே உள்ள செம்பட்டி என்ற இடத்தில் போர் அமைத்து கடந்த 10 ஆண்டுகளுக்கு மேலாக குடிநீர் பெற்று வந்தனர்.

இந்நிலையில் அந்த இடம் தனியாருக்கு சொந்தமானது என்று கூறி அந்த போர் கைவிடப்பட்டது. இதனால் கடந்த ஆறு மாதங்களாக குடிநீர் வராமல் ராஜாக்காள் பட்டி கிராம மக்கள் மற்றும் கால்நடைகள் பெரிய அளவில் பாதிக்கப்பட்டு உள்ளனர். மதுரை மாவட்டத்தில் குடிக்க நீர் இல்லாமல் அவதி படும் கிராமமாக ராஜாக்காள் பட்டி கிராமம் உள்ளது. குடிக்கவே நீர் இல்லாத போது துணி துவைக்க, கால்நடைகள் பருக கால்நடைகள் குளிப்பாட்ட மிகுந்த சிரமத்தில் இருப்பதாகவும் தெரிவித்தனர். இதனால் டேங்கர் லாரி மூலம் தண்ணீர் கொண்டு வந்து குடம் பதினைந்து ரூபாய்க்கு விற்கப்படுகிறது. இதனால் மக்கள் மிகுந்த வறுமை நிலைக்கு தள்ளப்பட்டு வருகின்றனர்.

இது குறித்து அமைச்சர், எம்.எல்.ஏ. மாவட்ட கலெக்டர் என அனைவரிடமும் புகார் அளித்தும் இதுவரை எந்த நடவடிக்கையும் எடுக்கவில்லை என வேதனை தெரிவிக்கின்றனர். மாற்று வழியில் தண்ணீர் கொண்டு வரவும் வழியில்லை. இதனை கருத்தில் கொண்டு செம்பட்டி அருகே உள்ள இடத்தில் நீர் வழிப் பாதையில் போர் அமைத்து பகுதி மக்களின் குடிநீருக்கு வழி வகை செய்ய வேண்டும் மேலும் முறையாக குடிநீர் திறந்து விட வேண்டும் என்று இப்பகுதி பொதுமக்கள் கோரிக்கை விடுக்கின்றனர். இதுகுறித்து ராஜக்காள் பட்டி கிராமத்தில் பெண்கள் உள்பட 200-க்கும் மேற்பட்டோர் கிராம மந்தையில் கூட்டம் நடத்தி விரைவில் நடவடிக்கை எடுக்க வேண்டும் இல்லையெனில் சாலை மறியல், அலங்காநல்லூர் யூனியன் ஆபீஸ் முற்றுகை, மதுரை மாவட்ட ஆட்சியர் அலுவலகம் முற்றுகை போன்றவை நடைபெற இருப்பதாக தகவல் தெரிவித்தனர். மேலும் ஒரு வாரத்தில் குடிநீர் வழங்க அதிகாரிகள் ஏற்பாடு செய்யவில்லை என்றால் ஆயிரத்துக்கும் மேற்பட்ட குடும்பங்கள் தங்களது ரேஷன் கார்டு ஆதார் அட்டை போன்றவற்றை மதுரை மாவட்ட கலெக்டர் அலுவலகத்தில் போவதாகவும் எச்சரிக்கை விடுத்தனர்.

# திருத்தங்கல் 'ஸ்ரீநின்ற நாராயண பெருமாள்' கோவில் தேரோட்டம்

**விருதுநகர், ஜூலை 13-**





பிரசித்தி பெற்ற திருத்தங்கல், ஸ்ரீநின்ற நாராயணப் பெருமாள் கோவில் ஆனி பிரம்மோற்சவத் திருவிழா தேரோட்டம் உற்சாகமாக நடைபெற்றது.

விருதுநகர் மாவட்டம் சிவகாசி அருகேயுள்ள திருத்தங்கல்லில், இந்து சமய அறநிலையத்துறைக்கு சொந்தமான, ஸ்ரீநின்ற நாராயணப் பெருமாள் கோவில் உள்ளது. 108 திவ்ய தேசங்களில் ஒன்றானதும், மிகப் பிரசித்தி பெற்றதுமான ஸ்ரீநின்ற நாராயணப் பெருமாள் கோவிலில் 'ஆனி பிரம்மோற்சவம்' திருவிழா கோலாகலமாக நடைபெற்று வருகிறது.

ஆனி பிரம்மோற்சவத் திருவிழா கடந்த 4-ம் தேதி, கருட கொடியேற்றத்துடன் தொடங்கியது. திருவிழாவின் முக்கிய நிகழ்ச்சியான 'தேரோட்டம்' நேற்று காலை நடைபெற்றது. முன்னதாக ஸ்ரீநின்ற நாராயணப் பெருமாள், ஸ்ரீசெங்கமலத் தாயாருக்கு சிறப்பு அபிஷேகம் மற்றும் பூஜைகள் நடைபெற்றது. அதனை தொடர்ந்து ஸ்ரீநின்ற நாராயணப் பெருமாள் - ஸ்ரீ செங்கமலத் தாயார் சிறப்பு அலங்காரத்தில் திருத்தேரில் வீதி உலா வந்து பொதுமக்களுக்கு அருள் பாலித்தார். ஆயிரக்கணக்கான பக்தர்கள் திரண்டு வந்து 'கோவிந்தா' 'கோபாலா' என்ற பக்தி பரவசத்துடன் கோஷமிட்டு தேரிழுத்தனர். தேரோட்ட நிகழ்ச்சியில் சிவகாசி, திருத்தங்கல் மற்றும் சுற்றுவட்டாரப் பகுதிகளைச் சேர்ந்த முக்கிய பிரமுகர்கள் மற்றும் பக்தர்கள் ஏராளமானோர் கலந்து கொண்டனர். தேரோட்ட நிகழ்ச்சி ஏற்பாடுகளை கோவில் நிர்வாக அதிகாரிகள் மற்றும் நிகழ்ச்சி உபயதாரர்கள் செய்திருந்தனர்.

# தேர்தல் வாக்குறுதிகளை நிறைவேற்றி தமிழக முதல்வர் மு.க.ஸ்டாலின் சாதனை

## மாவட்ட செயலாளர் சேடபட்டி மு.மணிமாறன் புகழாரம்



**திருமங்கலம், ஜூலை 13-**

தேர்தல் வாக்குறுதிகள் அனைத்தையும் நிறைவேற்றி முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் சாதனை படைத்துள்ளார் என ஆலம்பட்டியில் நடைபெற்ற நலத்திட்ட உதவிகள் வழங்கும் விழாவில் மாவட்டச் செயலாளர் சேடபட்டி மு.மணிமாறன் பேசினார்.

கலைஞரின் 102-வது பிறந்த நாளை முன்னிட்டு மதுரை தெற்கு மாவட்ட தி.மு.க. சார்பில் மாவட்டச் செயலாளர் சேடபட்டி மு.மணிமாறன் ஏற்பாட்டின் பேரில் திருமங்கலம் தொகுதி முழுவதிலும் நலத்திட்ட உதவிகள் வழங்கும் விழாக்கள் நடைபெற்றுவருகிறது. இதன் ஒரு பகுதியாக திருமங்கலம் தெற்கு ஒன்றியம் ஆலம்பட்டி கிராமத்தில் நடைபெற்ற நலத்திட்ட உதவிகள் வழங்கும் விழாவிற்கு ஒன்றிய கழக செயலாளர் ஆலம்பட்டி ஆர்.வி.சண்முகம் தலைமை வகித்தார். ஏராளமானோர் கலந்து கொண்ட இவ்விழாவில் மதுரை தெற்கு மாவட்ட தி.மு.க. செயலாளர் சேடபட்டி மு.மணிமாறன் சிறப்பாளராக கலந்து கொண்டு ஆலம்பட்டி பகுதி பொது மக்கள் 1300 பேருக்கு நலத்திட்ட உதவிகளை வழங்கி சிறப்புரையாற்றினார். அப்போது அவர் பேசியதாவது: தமிழகத்தில் நாடு போற்றும் நல்லாட்சி நடைபெற்று வருகிறது. கடந்த சட்டமன்ற தேர்தலின் போது, முதல்வர் மு.க.ஸ்டாலின் கொடுத்த அனைத்து வாக்குறுதிகளை நான் காண்டுகளில் நிறைவேற்றி சாதனை படைத்துளார். ஏழை எளிய மக்களின் நலன் காக்கும் அரசாக திமுக அரசு செயல்பட்டு வருகிறது. மகளிருக்கான கலைஞர் உரிமைத் தொகை, விடியல் பயணம் பேருந்து வசதி, மாணவ மாணவிகளுக்கு மாதந்தோறும் உதவித் தொகை என பல்வேறு திட்டங்களை அரசு சிறப்பாக செயல்படுத்தி வருகிறது. எனவே தமிழக மக்களின் நலனுக்காக நலத்திட்டங்களை வாரி வழங்கிடும் வகையில் 2026 சட்டமன்ற தேர்தலில் தி.மு.க.விற்கு நீங்கள் ஆதரவளித்திட வேண்டும் என்று பேசினார். இந்த நிகழ்ச்சியில் திருமங்கலம் தொகுதி மேலிட பார்வையாளர் டிஸ்கோ அலாவுதீன், ஒன்றிய செயலாளர்கள் மதன்குமார், ராமமூர்த்தி, நாகராஜ், பாண்டியன், திருமங்கலம் நகர செயலாளர் ஸ்ரீதர், நகர்மன்ற தலைவர் ரம்யா முத்துக்குமார், துணை தலைவர் ஆதவன் அதியமான்,பொதுக்குழு உ றுப்பினர் ஆதிமூலம், மாவட்ட அணி அமைப்பாளர்கள் விமல், சிவனேசன், செல்வேந்திரன், கட்சி நிர்வாகிகள் கருவேலம்பட்டி வெற்றி, சுரேஷ்,காளிதாஸ், கவிஸ்ரீ தினேஷ், வடக்கம்பட்டி ராதாகிருஷ்ணன் மற்றும் திருமங்கலம் தெற்கு ஒன்றிய கழக, ஆலம்பட்டி கிளை கழக நிர்வாகிகள் கலந்து கொண்டனர்.

# பள்ளத்தில் தவறி விழுந்து காட்டெருமை படுகாயம்

**நத்தம், ஜூலை 13-**

திண்டுக்கல் மாவட்டம் நத்தம் அருகே மதுரை சாலையில் உள்ள சுங்கச்சாவடி பகுதியில் நேற்று முன்தினம் காட்டெருமை ஒன்று சாலையை கடக்க முயன்றது. அப்போது எதிர்பாராத விதமாக சாலையோர பள்ளத்தில் காட்டெருமை தவறி விழுந்தது. இதில் காட்டெருமைக்கு காலில் பலத்த காயம் ஏற்பட்டது.

இது குறித்து கால்நடை துறை அதிகாரிகளுக்கு வளத்துறையினர் தகவல் தெரிவித்தனர். தகவலறிந்து சம்பவ இடத்திற்கு வந்த கால்நடை மருத்துவர்கள் காயமடைந்த காட்டெருமைக்கு சிகிச்சை அளித்தனர். பின்னர் காட்டெருமை வனப்பகுதிக்குள் சென்றது.



சென்னை அண்ணா அறிவாலயத்தில் நேற்று "உடன்பிறப்பே வா" என்ற தலைப்பில் சட்டமன்ற தொகுதி வாரியாக நிர்வாகிகளை சந்திக்கும் நிகழ்வில் திண்டுக்கல், வேப்பனஹள்ளி, வேடசந்தூர் ஆகிய சட்டமன்ற தொகுதிக்குட்பட்ட நிர்வாகிகளை தனித்தனியாக முதல்வர் மு.க.ஸ்டாலின் சந்தித்து பேசினார்.

### விழுப்புரத்தில் உள்ள 500 ஆண்டுகள் பழமையான

# செஞ்சிக்கோட்டைக்கு யுனெஸ்கோ அங்கீகாரம்


## முதல்வர் மு.க.ஸ்டாலின் மகிழ்ச்சி

சென்னை, ஜூலை 13-

தமிழ்நாட்டில் விழுப்புரத்தில் உள்ள 500 ஆண்டுகள் பழமையான செஞ்சிக்கோட்டைக்கு யுனெஸ்கோ சின்னம் என்ற அங்கீகாரம் கிடைத்தது பெருமகிழ்ச்சி என்று முதல்வர் மு.க.ஸ்டாலின் தெரிவித்துள்ளார்.

இதுகுறித்து அவர் தனது எக்ஸ் தளத்தில், கிழக்கின் ட்ராய் என அறியப்படும் செஞ்சிக் கோட்டை இந்தியாவில் உள்ள மராட்டிய இராணுவத் தலங்களின் ஒரு பகுதியாக யுனெஸ்கோ உலக பாரம்பரியச் சின்னமாக அறிவிக்கப் பட்டுள்ளதில் பெருமகிழ்ச்சி அடைகிறேன். சோழர் கோயில்கள், மாமல்லபுரம், நீலகிரி மலை இரயில், மேற்குத் தொடர்ச்சி மலை ஆகியவற்றின் வரிசையில் தமிழ்நாட்டில் இருந்து செஞ்சி மலைக்கோட்டை இப்பட்டியலில் தற்போது இணைந்துள்ளது. தமிழ்நாட்டுக்கும் அதன் நிலைத்த பண்பாட்டு மரபுக்கும் பெருமிதத் தருணமாக இது அமைந்துள்ளது. இவ்வாறு அவர் குறிப்பிட்டுள்ளார்.

விழுப்புரத்தில் உள்ள 500 ஆண்டுகள் பழமையான செஞ்சி கோட்டையை உலக பாரம்பரிய சின்னங்களுள் ஒன்றாக யுனெஸ்கோ அறிவித்தது. இந்தியாவில் செஞ்சி கோட்டை உள்பட 12 மராட்டிய ராணுவ கோட்டைகளை பாரம்பரிய சின்னங்களாக யுனெஸ்கோ அறிவித்துள்ளது.



சென்னையில் நடைபெற்ற உணவு மற்றும் உணவுப்பொருள் வழங்கல் துறை அமைச்சர் அர.சக்கரபாணியின் மகள் ச.தீப்தா-ஈ.சிவபிரதீப் ஆகியோரது திருமண வரவேற்பு நிகழ்ச்சியில் கலந்து கொண்டு மணமக்களை துணை முதல்வர் உதயநிதி வாழ்த்தினார். உடன் அமைச்சர்கள், பாராளுமன்ற உறுப்பினர்கள், மணமக்களின் குடும்பத்தினர் உள்ளனர்.



சென்னை நொளம்பூரில் உள்ள ஒருங்கிணைந்த சார்பதிவாளர் அலுவலகங்கள் வளாகத்தில் சுய உதவி குழுவைச்சேர்ந்த மாற்றுத்திறனாளிகளால் நடத்தப்பட உள்ள ஒருங்கிணைந்த சேவை மையத்தை நேற்று வணிகவரி மற்றும் பதிவுத்துறை அமைச்சர் பி.மூர்த்தி திறந்து வைத்து குத்துவிளக்கு ஏற்றினார். இதில் சட்டமன்ற உறுப்பினர் காரம்பாக்கம் க.கணபதி, வணிகவரித்துறை செயலாளர் ஷில்பா பிரபாகர்சதிஷ், பதிவுத்துறை தலைவர் தினேஷ் பொன்ராஜ் ஆலிவர் உள்ளனர்.



வடசென்னை வளர்ச்சி திட்டத்தின் கீழ் சி.எம்.டி.ஏ. சார்பில் ரூ.14.31 கோடி மதிப்பீட்டில் கட்டப்பட்டு வரும் இராயபுரம் சமூக நலக்கூடத்தை இந்து சமய அறநிலையத்துறை அமைச்சர் பி.கே.சேகர்பாபு நேரில் சென்று பார்வையிட்டு ஆய்வு செய்து பணிகளை விரைந்து முடித்திட அலுவலர்கள் மற்றும் ஒப்பந்ததாரர்களை அறிவுறுத்தினார். இதில் மேயர் ஆர்.பிரியா, சட்டமன்ற உறுப்பினர் ஐட்ரீம் இரா.மூர்த்தி, முதன்மைச்செயலாளர் தகோ.பிரகாஷ், மண்டலக்குழு தலைவர் பி.ஸ்ரீராமுலு, தலைமைத்திட்ட அமைப்பாளர் எஸ்.ருத்ரமூர்த்தி, தலைமை பொறியாளர் மகாவிஷ்ணு உடனிருந்தனர்.



அ.தி.மு.க. பொதுச்செயலாளரும், சட்டமன்ற எதிர்க்கட்சி தலைவருமான எடப்பாடி கே.பழனிசாமி புதுச்சேரி மாநிலம் பூர்னாங்குப்பத்தில் உள்ள தனியார் விடுதியில் தொழில் நிறுவனங்களின் கூட்டமைப்பு, குறு, சிறு மற்றும் நடுத்தர தொழில் முனைவோர்கள், விவசாயிகள், வியாபாரிகள் மற்றும் இதர பொது நலச்சங்கங்களின் உறுப்பினர்களுடன் கலந்துரையாடினார். அருகில் சிறுபான்மையினர் நலப்பிரிவுச்செயலாளரும், முன்னாள் அமைச்சருமான அப்துல் ரஹீம், கடலூர் வடக்கு மாவட்ட செயலாளரும், முன்னாள் அமைச்சருமான சம்பத் உள்ளிட்டோர் கலந்து கொண்டனர்.

# திருவக்கரை வக்கரகாளியம்மன் கோவிலில் இ.பி.எஸ். தரிசனம்

விழுப்புரம், ஜூலை. 13-

விழுப்புரம் மாவட்டத்தில் 2 நாள் சுற்றுபயணம் மேற்கொண்டுள்ள எடப்பாடி பழனிசாமி, திருவக்கரை வக்கரகாளியம்மன் கோவிலில் நள்ளிரவு சுவாமி தரிசனம் செய்தார்.

'மக்களை காப்போம், தமிழகத்தை மீட்போம்' என்ற தலைப்பில் தமிழகம் முழுவதும் பிரச்சார பயணத்தை அ.தி.மு.க.பொதுச்செயலாளர் எடப்பாடி பழனிசாமி மேற்கொண்டுள்ளார். இதையொட்டி விழுப்புரம் மாவட்டத்துக்கு 2 நாள் சுற்று பயணமாக வருகை தந்தார். விழுப்புரம், விக்கிரவாண்டி, திண்டிவனம் சட்டப்பேரவை தொகுதியில் பிரச்சார பயணத்தை மேற்கொண்ட பழனிசாமி, திருச்சிற்றம்பலம் கூட்டு ரோட்டில் உள்ள நட்சத்திர விடுதியில் தங்கினார். திண்டிவனத்தில் பிரச்சார பயணத்தை முடித்து கொண்டு விடுதிக்கு சென்றவர், சிறிது நேர ஓய்வுக்கு பிறகு, வானூர் அடுத்த திருவக்கரையில் உள்ள பழமையான வக்கரகாளியம்மன் கோவிலுக்கு நள்ளிரவு சுமார் 11.30 மணியளவில் சென்று சுவாமி தரிசனம் செய்தார்.

பவுர்ணமி என்பதால் அங்கு நடைபெற்ற சிறப்பு பூஜையில் பங்கேற்று, வக்கரகாளியம்மனை மனமுருகி வேண்டினார். அவருக்கு கோவில் நிர்வாகம் சார்பில் பிரசாதம் வழங்கப்பட்டது. திருவக்கரை வக்கிரகாளியம்மன் கோவிலில் யார் ஒருவர் காலடி எடுத்து வைக்கிறாரோ, அவரது ஜாதகத்தில் உள்ள அனைத்து வக்கிரத் தோஷங்களும் விலகும் என்பது ஐதீகம்.

அ.தி.மு.க.பொதுச்செயலாளர் பழனிசாமி, அடுத்தாண்டு நடைபெறக் கூடிய சட்டப்பேரவைத் தேர்தலில் வெற்றி பெற வேண்டும் என்பதற்காக கோவில் கோவிலாக சென்று சுவாமி தரிசனம் செய்து வருகிறார். இந்த வரிசையில், திருவக்கரை வக்கரகாளியம்மன் கோவிலும் இடம் பிடித்துள்ளது.

# பள்ளி வகுப்பறைகளில்...(1-ம் பக்க தொடர்ச்சி)

என தெரிவிக்கப்பட்டு உள்ளது.

மாணவர்கள் எதிரெதிர் திசையில் அமரும் போது ஒருவரிடம் இருந்து மற்றவர் கற்று கொள்ள முடியும். அனைத்து மாணவர்களும் முன்வரிசையில் அமர்வர். சிறந்த கற்றல் உறுதி செய்யப்படும் என அந்த உத்தரவில் தெரிவிக்கப்பட்டு உள்ளது.

இந்த இருக்கை வசதி பற்றி தமிழக பள்ளிக் கல்வித் துறை அமைச்சர் அன்பில் மகேஸ் அளித்த பேட்டி ஒன்றில், " ஒரு வகுப்பறையில் ஆசிரியர் கற்பிக்கும்போது இந்த மாதிரியான வடிவமைப்பில் இருக்கைகள் இருந்தால் அது மாணவர்கள் - ஆசிரியர்கள் இடையேயான தொடர்பை மேம்படுத்துமா என்பதற்காக இந்த முயற்சியில் ஈடுபட்டுள்ளோம்.

மாற்றங்கள் நல்லதாக இருந்து அது எந்த மாநிலத்தில் நிகழ்ந்தாலும் நாம் அதை பின்பற்றலாம்.

இந்த முயற்சி எப்படி பலனளிக்கிறது என்று ஆசிரியர்கள் முயற்சிக்கட்டும்" என்றார்.

### யுனெஸ்கோ பட்டியலில் செஞ்சிக்கோட்டை:

# அமைச்சர் தங்கம் தென்னரசு பெருமிதம்

சென்னை, ஜூலை 13-

செஞ்சிக்கோட்டை தமிழர்களின் கட்டிடக்கலை நுட்பத்தையும், வீரம் செறிந்த வரலாற்றையும் உலகுக்குப் பறைசாற்றுகிறது என்று அமைச்சர் தங்கம் தென்னரசு தெரிவித்துள்ளார்.

யுனெஸ்கோ எனப்படும் ஐ.நா. சபையின் கல்வி, அறிவியல், கலாசார அமைப்பு, பாரம்பரிய சின்னத்தின் சரித்திர காலம், கலைபடைப்புத் தன்மை உள்ளிட்ட சிறப்புகளின் அடிப்படையில், சர்வதேச பாரம்பரிய நினைவு சின்னங்களுக்கு அங்கீகாரம் வழங்கி வருகிறது.

இது தொடர்பாக தன் சமூக வலைதள பக்கத்தில் வெளியிட்டுள்ள பதிவில், 'யுனெஸ்கோ பாரம்பரிய சின்னங்களின் பட்டியலில் 2024-25-ம் ஆண்டிற்கான பட்டியலில் மராத்திய கோட்டைகள் இடம்பெறுவது தொடர்பான முடிவு, ஐரோப்பிய நாடான பிரான்சின் பாரிசில் நடைபெற்று வரும் உலக பாரம்பரிய குழுவின் 47-வது அமர்வின்போது எடுக்கப்பட்டது.

இதன்படி, யுனெஸ்கோ உலக பாரம்பரிய சின்னங்களுக்கான பட்டியலில், மஹாராஷ்டிரா ராணுவ நிலப்பரப்புகளின் கீழ் வரும் அங்குள்ள சல்ஹெர், சிவனேரி, லோஹ்காட், கண்டேரி, ராய்காட், ராஜ்காட், பிரதாப்காட், சுவர்ணதுர்க், பன்ஹாலா, விஜய் துர்க், சிந்துதுர்க் கோட்டைகளும், தமிழகத்தில் உள்ள செஞ்சி கோட்டையும் இடம்பெற்றுள்ளன என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.

இது குறித்து அமைச்சர் தங்கம் தென்னரசு சமூக வலைதளத்தில் வெளியிட்டுள்ள பதிவில் கூறியிருப்பதாவது:

செஞ்சிக்கோட்டை, தமிழ்நாட்டின் வீரமிக்க வரலாற்றையும், பண்பாட்டு பெருமையையும் உலகுக்கு எடுத்துரைக்கும் ஒரு மாபெரும் அரண் கட்டமைப்பு.

இந்த வரலாற்று சிறப்புமிக்க கோட்டையை உலக புராதன சின்னமாக அறிவித்திருப்பது பெருமிதமும், மகிழ்ச்சியும் தருகிறது.

இக்கோட்டையின் அழிவில்லாத கட்டமைப்பும், 3 மலைகளை அரணாக கொண்டு பரந்து விரிந்திருக்கும் அதன் வலிமையும், தமிழர்களின் கட்டிடக்கலை நுட்பத்தையும், வீரம் செறிந்த வரலாற்றையும் உலகுக்கு பறைசாற்றுகிறது.

இவ்வாறு அவர் கூறியுள்ளார்.

### திருப்புவனம் இளைஞர் கொலை வழக்கு:

# சி.பி.ஐ. விசாரணை தொடக்கம்

மதுரை, ஜூலை 13-

அஜித்குமார் மரண வழக்கு தொடர்பாக சி.பி.ஐ. அதிகாரிகள், பிரிவு 103இன் கீழ் வழக்கு பதிவு செய்து விசாரணையை தொடங்கியுள்ளனர்.

சிவகங்கை மாவட்டம் திருப்புவனம் அருகே உள்ள காளி கோயில் காவலாளி நகை திருட்டு குற்றச்சாட்டின் பேரில் தனிப்படை காவலர்களால் சித்திரவதை செய்யப்பட்டு கொலை செய்யப்பட்டார்.

இந்தச் சம்பவம் குறித்து விசாரிக்க மதுரை மாவட்ட நீதிபதி ஜான் சுந்தர்லால் சுரேஷை விசாரணை அதிகாரியாக மதுரை ஐகோர்ட் கிளை நியமனம் செய்தது இந்த விசாரணையின் இடைக்கால அறிக்கையை விசாரணை அதிகாரி கடந்த 8 ஆம் தேதி நீதிமன்றத்தில் தாக்கல் செய்தார்.

இதற்கிடையே, இந்த வழக்கை சி.பி.ஐ. விசாரிக்கும் என்று தமிழக அரசு கூறியிருந்தது.

இதையடுத்து, வழக்கின் விசாரணையை சி.பி.ஐ. விசாரணைக்கு மாற்றிய உயர் நீதிமன்றம், ஆக. 20 ல் குற்றப்பத்திரிகை தாக்கல் செய்யுமாறு சி.பி.ஐ.க்கு உத்தரவிட்டது.

இந்த நிலையில், அஜித்குமார் மரண வழக்கு தொடர்பாக சி.பி.ஐ. வழக்குப்பதிவு செய்துள்ளது. தமிழக காவல்துறையினரிடம் இருந்து அஜித்குமார் கொலை வழக்கு தொடர்பான ஆவணங்களை பெற்றுக் கொண்ட சி.பி.ஐ. அதிகாரிகள், பிரிவு 103இன் கீழ் வழக்கு பதிவு செய்து விசாரணையை தொடங்கியுள்ளனர்.

### 3 மாதங்களில் குரூப்-4 தேர்வு முடிவு வெளியீடு:

# டி.என்.பி.எஸ்.சி. தலைவர் பேட்டி

சென்னை, ஜூலை 13-

குரூப் 4 தேர்வு முடிவுகள் 3 மாதத்தில் வெளியிடப்படும் என டி.என்.பி.எஸ்.சி. தலைவர் தெரிவித்துள்ளார்.

தமிழ்நாடு அரசுத்துறைகளில் காலியாக உள்ள பணியிடங்களுக்கு தமிழ்நாடு அரசு பணியாளர் தேர்வாணையம் (டி.என்.பி.எஸ்.சி.) தேர்வுகளை நடத்தி தகுதியானவர்களை தேர்வு செய்கிறது. அந்தவகையில் கிராம நிர்வாக அலுவலர், இளநிலை உதவியாளர், தட்டச்சர், சுருக்கெழுத்து தட்டச்சர், வனக்காப்பாளர், வனக்காவலர் போன்ற குரூப்-4 பணிகளில் 3,935 காலி இடங்கள் இருப்பதாக டி.என்.பி.எஸ்.சி. அறிவித்தது. இந்த இடங்களுக்கு விண்ணப்பித்தவர்களில் தகுதியானவர்களுக்கு சமீபத்தில் ஹால்டிக்கெட்டையும் வெளியிட்டது.

அதன்படி, 5,26,553 ஆண்கள், 8,63,068 பெண்கள், 117 திருநங்கைகள் என மொத்தம் 13,89,738 பேர் இன்று (சனிக்கிழமை) இந்த தேர்வை தமிழகம் முழுவதும் 38 மாவட்டங்களில் 314 மையங்களில் எழுதுகிறார்கள் .

இந்த நிலையில், சென்னை எழும்பூரில் உள்ள தேர்வு மையத்தில் டிஎன்பிஎஸ்சி தலைவர் பிரபாகர் ஆய்வு மேற்கொண்டார். தொடர்ந்து செய்தியாளர்களுக்கு பேட்டி அளித்த அவர் கூறியதாவது:-

குரூப் 4 தேர்வு முடிவுகள் 3 மாதத்தில் வெளியிடப்படும். வரும் நாட்களில் 10,000 காலி பணியிடங்களுக்கு தேர்வு நடைபெறும். குரூப் 4 தேர்வு வினாத்தாள் எதுவும் கசியவில்லை. குரூப் 4 தேர்வு வினாத்தாள், விடைத்தாள் அனைத்து பாதுகாப்பாக கொண்டு செல்லப்பட்டுள்ளன. என தெரிவித்தார் .